www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடுதல் பெற்றதா..

நடுகைக் கற்களை
வளர்த்திப் போட்டதாய்
பிரேதங்கள் பரத்திய
காலையும் மாலையும்.

வாரபலன் கள்
வந்தும் போயும்
செக்கு சுத்தியதான
தின நிகழ்வுகள்

புரை யோடிப் போன
செவிகள் இன்னும்
கேட்பது ஒன்றை

ஆகமம் தவறிய
பிராமணன் கையில்
மணியும் கற்பூராரார்த்தியும்
போல......
இன்னும் இன்னும்
கொலைகள் சுமந்த
கைகளும் தலையும்.
நெறிகள் இழந்த
தேடிய மானிடம்
இன்னும் முண்டமாய்
சோர்ந்து தேடிய
விழிகள்
காய்ந்த சருகுகளுக்குள்
கை வைத்து
சுருட்டை கொட்டி...
இறப்பின் போதும்
சுதந்திரம் தேடியதாய்-

# அகதி என்பதாய்..

மணி ஆட்டி
மாடு கேட்டநீதி யெல்லாம்
குப்பை.
இன்னும் அடிக்க வேமுடியாத
மணியிரண்டு
எங்கள் பாராளு மன்றத்தின்
முன்னால்.........

சிறுபான்மை கழிபட்டு
ஒதுக்கி ஒதுக்கி.....
தள்ளி விட
மிரள மட்டும்.......

விழி பிதுங்கி
எச்சில் வடிய
ஓடிப் போய்
தாயின் மடியில்
பேயன் மாதிரி......
இப்போது தாய்மடியிலும்
முள்ளுப் பரத்தி....
மாற்றாளின் தோளும்
சறுக்கி.......
அங்கும் இல்லை.
இங்கும் இல்லை.
சாவதற்கும்
உயிரை விடப்பயம்
அதிகம்.
அவர்களை வைத்து
வளர்ப்பவர் களின் வயிறு
வீங்கி வெடிக்கு மளவு......

செவிலிகள்
மறுத்த போது
கருவைச் சுமந்ததான
தாயும்
செத்து அல்லது வெறுத்து.

கண்களைத் தாமாகவே
குத்திக் கொண்டு -
நொண்டியாய்
பைத்தியமாய்
அல்லது
இன்னொன்றில்
அகதியாய்...........
வெளிநாடொன்றில்
இல்லாட்டில்
தாய் நாட்டில்.......

- இளையஅப்துல்லாஹ் -
இலங்கை

www.tamilarangam.net

# ஓசை

காலாண்டி தழ்

1993

ஐப்பசி - மார்கழி

ஓசை - 4
ஒலி - 4

இதழ் 14

ஆசிரியர் குழு

தொடர்புகளுக்கு :

"Oosai"
C.L.A.L.P.
B.P : 701 - 09
75425 Paris Cedex
France.

## இந்த இதழில்..

**அகதி என்பதாய்..**
- இளைய அப்துல்லாஹ்
**எஸ். பொ. நேர்காணல்**
- சந்திப்பு. லெ. முருகபூபதி
**மீனு .. அமீனு ...**
- ஈழக்கூத்தன்
**குறிப்புக்கள்..**
- துடைப்பான்
**ஈழத்தமிழர் இராச்சியங்கள்**
- அன்பழகன்
**வரம்**
- க. ஆதவன்
**மறையாத மறுபாதி**
- சி. சிவசேகரம்
**தமிழக அலைவரிசை**
- ப. தி. சோழநாடான்
**குகை ஓவியங்கள்**
- ப. தி. அரசு
**சமாதானத்திற்காக நிலமா?
நிலத்திற்காகச் சமாதானமா ?**
- அனந்தன்
**கத்திகளுடன் நடனம்**
- அ. ஜ. கான்
**யுத்தம்**
- பி. ரவிவர்மன்
**என் தகனக்கியை**
- என். ஆத்மா
**சந்தி**
- இளவாலை விஜயேந்திரன்
**ஆடி ஓடும் மரம்**
- சோலைக்கிளி
**ஆடி அமாவாசை நாளில்**
- ஆனந்
**நாளையாய்ச் சுருங்கிய இன்று**
- ரி. எல். ஜவ்பர்கான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓசை

**பிரா**ன்ஸில், மாதத்திற்கு லட்சத்து எண்பதினாயிரம் கார்கள் திருட்டுப் போவதாக அரசறிக்கைகள் கூறுகின்றன.
இதைவிடவும், வேலையில்லாத்திண்டாட்டங்கள், திருட்டுக்கள், போராட்டங்கள் போன்ற பிரான்ஸ் நாட்டின் அன்றாட பிரச்சினைகளோடு எம்மவர்கள் மேலதிகமான பல சிக்கல்களையும் எதிர்நோக்குகின்றனர்.

காலநிலைவேறுபாடு, கலாச்சாரத்தாக்கம், மொழிச்சிக்கல்களோடு பாரிஸில் நடக்கும் வழிப்பறித்தாக்குதல்களிலும் எம்மவர்களே குறிவைத்துத்தாக்கப்படுவது வேதனைக்குரியது.

ஒரு சில, பதினாறு.. இருபது வயது 'கறுத்த'இளைஞர் கோஷ்டிகள், வடஆபிரிக்கக் கொள்ளையர்கள் சிலராலேயே இவை மேற்கொள்ளப்படுகின்றன.

* இங்கு வாழ்கின்ற வெளிநாட்டவர்களுள், குறுகிய காலத்தில் , மற்றவர் கண்களை உறுத்தும் வகையில் பொருள் சேர்த்துக்கொண்டமை.
(இதைச்சேர்த்துக்கொள்ள என்னபாடு படுகிறார்கள் என்பது வேறுவிஷயம்)
* பயந்த சுபாவம் அல்லது 'தானும் தன்பாடும்' என்ற குறுகிய போக்கு.
* மொழி தெரியாமை.
(உதாரணத்திற்கு, சம்பவங்களின் போது காவற்துறையினரைக் கண்டாற் கூட சம்பவத்தை விபரிக்கத்தெரியாமற் தத்தளிப்பது. )

போன்ற காரணிகளோடு எம்மவர்களின் பணம் குறுக்கு வழிகளில் சம்பாதிக்கப்படுகிறது என்றதொரு கருத்தும் இவர்கள் மத்தியில் நிலவுவது எம்மீதான பலாத்காரத்திற்கு காரணங்களாகின்றன.

காடையர்களின் அடாவடித்தனம் எல்லையைக்கடக்கும் போது - பொலிஸ் முறைப்பாடுகளும் பலனளிக்காத நிலையில் -எம்மவர்கள் எதிர்த்தாக்குதல் நடாத்த எத்தனிப்பது தவிர்க்கமுடியாதது. பல இடங்களில் கோஷ்டிகளாக மோதல்களும் நடந்திருக்கின்றன.
ஆனால், இவ் எதிர்த்தாக்குதற் சம்பவங்கள் நிரந்தரத் தீர்வினைத் தந்துவிடப்போவதில்லை. மேலும் சிக்கலான நிலையையே தோற்றுவிக்கும்.

இந்நிலையில், அண்மையிற் சந்தித்த ஆபிரிக்கநாட்டுப் பேராசிரியர் ஒருவரின் கருத்து கவனிப்புக்குரியது.

"இச் சிறு சிறு சம்பவங்களுக்காக மிகவும் வருந்துகின்றோம். கொள்ளைகள் என்பது எல்லாசமூகத்திற்கும் பொதுவானதொன்றே. கொள்ளையர்கள், எந்தசமூகத்தில் இல்லை. எந்த நாட்டில் இல்லை. அதற்காக அந்த சமூகத்தையே எதிர்நிலையில் வைத்துப்பார்ப்பது தவறு. பிரான்ஸ் நாட்டில் சிறுபான்மையினராகவும், உலகஅரங்கில் அடக்கப்பட்டவர்களாகவும் இருக்கும் நாம் ஒருவருக்கொருவர் விரோதித்துக்கொள்வது நல்லதல்ல. ஸ்தாபன ரீதியாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியாகவோ, எமது சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ளுவது இன்றையநிலையில் மிகமிக அவசியமானது"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேர்காணல்.

## எஸ். பொன்னுத்துரை

### எஸ். பொ.

எழுத்துலகில் ஐந்தாவது தசாப்தத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் ஈழத்தின் மூத்த தலைமுறை எழுத்தாளர் எஸ். பொ. பிரச்சினைக்குரிய படைப்பாளியாக இனம் காணப்பட்டவர். தீ -சடங்கு -வீ -நனவிடை தோய்தல் உட்பட பல படைப்புகளின் சொந்தக்காரர், "மணிவிழா" கண்டபின்பும் அயராமல் எழுதிக் கொண்டிருப்பவர், தற்பொழுது அவுஸ்திரேலியாவில் குடும்பத்துடன் வசிக்கும் எஸ். பொ. வை "ஓசை" க்காக சந்தித்தோம். அவரது கருத்துக்களுக்கு மாற்றுக்கருத்துக்களும் இருக்கலாம். கருத்துப் பரிவர்த்தனையே ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு உரமாகும்.

சந்திப்பு : லெ. முருகபூபதி



**கேள்வி:- எழுதவேண்டும் என்ற எண்ணம், அல்லது ஆர்வம் உந்துவதற்கு காரணமாக இருந்தது என்ன ?**

எஸ். பொ:- 13 வயதில் எழுத ஆரம்பித்தேன். அச்சமயம் இலக்கு - இலட்சியம் என்று எதுவும் இல்லை. 1940 ஆம் ஆண்டளவில் எனது அண்ணர் தம்பையா -தமிழ் புலமை உள்ளவர் -மாணவர் தேர்ச்சிக்கழகத்தின் சார்பில் "ஞானோதயம்" என்ற கையெழுத்து சஞ்சிகையை வெளியிட்டார். அவர்தான் அதற்கு ஆசிரியர். அந்தச் சஞ்சிகையின் பக்கங்களை நிரப்பவேண்டிய தேவையும் அண்ணருக்கு இருந்தமையால் -நான் எனது எழுத்துக்கள் மூலம் அவருக்கு உதவி செய்தேன். அண்ணர்தான் எனக்கு வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார். எழுதும் ஆர்வத்தைத் தூண்டினார். சொற்பகாலத்திலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரதியும் பாரதிதாஸனும் எனக்கு நெருக்கமானார்கள். இவர்களைப் படித்ததன் பாதிப்பினால் ஒரு கவிதை எழுதினேன். அது "வீர கேசரி"யில் பிரசுரமாயிற்று. அதுவே -அச்சுவாகனம் ஏறிய எனது முதல் எழுத்து. 1947 இல் வீரகேசரியின் வெள்ளி -ஞாயிறு இதழ்களில் "பாலர் பக்கத்தில் -"அண்ணன் -நான்" என்ற புனை பெயரில் எழுதினேன். என்னை முறையாக வழிநடத்தி -இலக்கிய உணர்வை ஊட்டியவர் மதிப்பிற்குரிய த. ராஜ கோபால் என்ற பெரியவர். இவர் எழுத்தாளர் சொக்கனுடன் படித்தவர். ராஜகோபால், எனக்கு, சரத்சந்திரர் -வி. ஸ. காண்டேகர், கு. ப. ரா., புதுமைப்பித்தன் முதலானோரின் நூல்களைத் தந்துதவி படிக்கும் ஆர்வத்தை வளர்த்தார். த. ராஜகோபால் அவர்களுக்கே -எனது "தீ" நாவலை சமர்ப்பித்து வெளியிட்டேன்.

**கேள்வி:- சிறுகதை இலக்கியத்தில் சிகரங்களைத் தொட்டவர் என்றும் தங்களை சில விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர் -இந்தத் துறையில் உங்கள் பிரவேசம் எப்படி?**

எஸ். பொ. :- முதலாவது சிறுகதை 1948 இலோ-49 இலோ "சுதந்திரனில்" வெளிவந்தது. இக்காலப்பகுதியில் தமிழகப் பத்திரிகைகளிலும் எழுதத் தொடங்கிவிட்டேன். அரு. ராமநாதனின் "காதல்" -பிரசண்டவிகடன், ஆனந்த போதினி முதலானவற்றில் 1, வயதிலேயே கதைகள் எழுதினேன் 1950இல் தமிழகத்தில் ஏற்பட்ட தொடர்புகளினாலும் கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர் ப. ஜீவானந்தம், மற்றும் முகவை ராஜமாணிக்கம் போன்றோரின் நட்பினாலும் இலக்கியத்தில் முற்று முழுதான ஈடுபாட்டுடன் எழுதினேன். சிறுகதையின் உத்தி -உருவம் -உள்ளடக்கம் பற்றி இக்காலப்பகுதியிலேயே ஓரளவு தெரிந்து கொண்டேன். இவ்வேளையில் தமிழகத்தில் மாத்திரமின்றி தமிழ் இலக்கிய உலகிலேயே கனதியான தாக்கத்தை ஏற்படுத்திய "சரஸ்வதி" சஞ்சிகையின் ஆசிரியர் விஜயபாஸ்கரன் இலங்கைக்கு வந்தார். அவர் வந்ததன் நோக்கம் இரண்டு. முதலாவது -நண்பர் செ. கணேசலிங்கத்தின் திருமணம். இரண்டாவது "சரஸ்வதிக்கு" ஈழத்தில் "சந்தா" மூலம் ஆதரவு திரட்டுவது. எனது "தீ" நாவலை அவரே பின்பு -பரீட்சார்த்த இலக்கிய முயற்சியாக ஏற்று பிரசுரித்து வெளியிட்டார்.

**கேள்வி:- பல புனைபெயர்களின் சொந்தக்காரராக விளங்கினீர்கள்! அதேசமயம் -பின்னாளில் முன்னணிக்கு வந்த சில எழுத்தாளர்களுக்கும் எழுதப்பயிற்றுவித்ததாகவும் கூறியிருக்கிறீர்கள் -இந்தப் பயிற்றுவிப்புக்கும் -புனைபெயர்களுக்கும் ஏதும் தொடர்புகள் உண்டா?**

எஸ். பொ. :- இது சிக்கலான கேள்வி. நானும் டானியலும் டொமினிக் ஜீவாவும் நல்ல நண்பர்கள் கம்யூனிஸக் கொள்கையினால் ஆகர்ஷிக்கப்பட்டவர்கள். டானியல் -புரட்சிதாஸன்; ஜீவா -புரட்சிமோகன்; நான் -புரட்சிப்பித்தன். இவ்வாறு புனைபெயர் சூட்டிக்கொள்வதிலும் ஒற்றுமைப்பட்டோம். திடீரென்று ஒருநாள் "பழமைதாஸன்" என்றும் நான் எனது புனைபெயரை மாற்றிக்கொண்டதுமுண்டு. 1952 -1953 காலப்பகுதியில் நான் புனைபெயரில் மறைவதற்கு சில காரணங்களும் இருந்தன. எனது எழுத்து ஒரு நங்கையை பெரிதும் பாதித்துவிட்டது. அவர் சங்கடங்களையும் எதிர்நோக்கினார். அவர் நலன் கருதி சிறிது காலம் எனது பெயரில் நான் எழுதாமலிருந்திருக்கிறேன். எனினும் எனது தாகத்தை த்தணிப்பதற்காக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புனைபெயர்களில் எழுதினேன். அந்த வளரிளம் பருவத்து "சங்கடங் "களினால் மட்டக்களப்பில் ஒதுங் கினேன். ஆயினும்1956ஆம் ஆண்டு வாக்கில் -கவிஞர் இ. நாகராஜன் (ஈழகேசரியில் துணை ஆசிரியராக இருந்தார்) நாவற்காடு செல்லத் துரை (பின்னாளில் வீரகேசரியில் பிரபல்யம் பெற்ற யாழ். நிருபர்) ஆகியோர் என்னை அரவணைத்து எழுதுமாறு உற்சாகமளித்தனர். புனைபெயரில் சிலருக்காக நான் எழுதியதுண்டு.

**கேள்வி:- முற்போக்கு இலக்கிய முகாமுடன் முரண்பட்டீர்கள்; "நற்போக்கு முகாம்" அமைத்தீர் கள்! இந்த "ந. போ" முகாமின் சாதனைகள் -சோதனை கள்.............**

எஸ். பொ:- 1960ஆம் ஆண்டென நினைக்கின்றேன். வீரகேசரி லோகநாதன், யாழ்ப்பாணம் தேவன் முதலானோருடன் பழக ஆரம்பித்த காலம் அது. கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் நடக்கவி ருந்த எழுத்தாளர் மகாநாட்டுக்கு முன்னர் ஒரு தயாரிப்புக் கூட்டம் யாழ். சென்றல் கல்லூரியில் நடந் தது. இக்கூட்டத்தில், இலங்கையில் உள்ள அனைத்து கலை, இலக்கி யச்சங்கங்களையும் ஓரணியில் திரட்டி அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என்று தீர்மானித்தோம். இத்தீர்மானத்துக்கு டொமினிக் ஜீவாவும் ஆதரவு வழங்கினார். இத்தீர்மானம் மகாநாட்டில் விவா திக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டது. இது எனக்கும் நண்பர்களுக்கும் வருத்தத்தைத் தந்தது.

கம்யூனிஸ்ட்டுகள் எழுத்தாளர்க ளாக இருக்கலாம்; ஆனால் எல்லா எழுத்தாளர்களும் கம்யூனிஸ்ட்டுகள் அல்ல என்பதை அன்று சிலர் புரிந்து கொள்ளத் தவறினார்கள். எழுத்தாளர் சங்கம் கட்சி அரசியல் இலக்கிய முகாமாக மாறாமல் தமிழ் மறுமலர்ச்சியின் அடிப்படை யில் செயற்பட வேண்டும் என்பது எனது வாதமாக இருந்தது. நான் கட்சியின் கட்டுப்பாட்டைக் குலைப் பதாக அவர்கள் கருதினார்கள். அந்த மகாநாட்டு மண்டபத்தில் எனது நண்பர்கள் சிலர் கதிரைக ளைத் தூக்கிக்கொண்டும் எனக்கு அடிக்க வந்தனர். நானும் எஃப். எக் . ஸி. நடராாசாவும், கனக செந்திநா தனும் வ. அ. இராசரத்தினமும் வெளியேறினோம்.

முற்போக்கு இலக்கியக்காரர்கள் அதனை கட்சி அரசியலாக மாற் றினார்கள். மாக்ஸீய சிந்தனை உள் ளவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத் தவராகத்தான் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்பது எனது வாதம்.

தேசிய இலக்கியம்தான் வளர்த் தெடுக்கப்பட வேண்டும். அனைத்து சமூக மட்டத்தவர்க ளையும் இந்த இலக்கியத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

நற்போக்கு என்பது, முற்போக்கு - (சய) கம்யூனிஸ்ட் கட்சி, "பிற் போக்கு" முகாம் எம்மால் அமைக்க முடியாது. அதனால் "நற்போக்கு" எனச் சூட்டிக்கொண்டோம். தேசியத்தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தல் -மரபின் தொடர்ச் சியை பாதுகாத்தல் என்ற அடிப் படையில் ஒரு "LABEL" தான் இந்த நற்போக்கு -வேறு ஒன்று மில்லை! நடுப்போக்கு என்று வைக்கலாமோ -முடியாது! நான் . அக்காலப்பகுதி யில் மா சேதுங்கின் சிந்தனைக ளால் பெரிதும் கவரப்பட்டுமிருந் தேன் என்பதையும் குறிப்பிட விரும் புகிறேன்.

எமது முடிவுகளினால், மரபைப்பே ணவேண்டும் என்று எண்ணியவர் களின் "அச்சநிலை"யும் நீங்கியது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்து "மண்ணும் விண்ணும்" - "காலத்தின் குரல்கள்" -முதலிய படைப்புகளும் வெளியாகின. "காலத்தின் குரலுக்கு" முன்னுரையும் எழுதியிருக்கின்றேன்.

தேசிய இலக்கியத்தின் "மரபு" சார்ந்த வழியும் உண்டென்ற நம்பிக்கையுடன் சிலர் எழுதத் தொடங்கினர். அவர்களில், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், அண்ணல், பித்தன் முதலானோரை குறிப்பிடலாம்.

எனினும் ஒரு விடயத்தை மாத்திரம் சுட்டிக்காட்டலாம்.

எனது "சடங்கு" நாவல் சுதந்திரனில் வெளியாகியது. இது தமிழரசுக்கட்சியின் பத்திரிகை. இது நூலாகிய பொழுது -அதன் விற்பனை உரிமையை வீரகேசரி நிறுவனம் பெற்றுக்கொண்டது.

தேசிய இலக்கிய பண்புகளுக்கு இசைய எழுதப்பட்ட நாவல் -யாழ் . மண்ணை இது பிரதிபலித்தபோதும் பின்னாளில் தமிழ்நாடு "ராணிமுத்து" "சடங்கு"வை மறுபிரசுரம் செய்தபோது ஒரு இலட்சத்து 43-ஆயிரம் பிரதிகள் விற்பனையாகின. தேசியப்பண்பு மிளர்ந்தமையாலேயே இது சாத்தியமாயிற்று.

**கேள்வி:- தங்களை சிறந்த சிறுகதை எழுத்தாளராகவோ, நாவலாசிரியராகவோ கட்டுரையாளராகவோதான் இலக்கிய உலகம் இன்றும் இனம் காணுகிறது. எனினும் 'விமர்சனம்' என்ற பெயரில் நீங்களும் கலை, இலக்கிய, அரசியல் விமர்சனம் செய்கிறீர்கள். ஆயினும் விமர்சகருக்குரிய தகுதியை தாங்கள் இன்னும் பெறாதிருப்பது குறித்து என்ன கருதுகிறீர்கள்?**

எஸ். பொ:- நான் விமர்சகன் அல்ல. ஆனால் எழுத்தாளனுடைய சில உரிமைகளையும் சில தனித்துவங்களையும் நான் மதிப்பவன். இந்த உரிமைகள், தனித்துவங்கள் விமர்சகர்கள் என்று சொல்லப்படுகிறவர்களினால் "அழிவழக்காடும்"போது நானும் விமர்சனத்தில் ஈடுபடவேண்டியுள்ளது. விமர்சனத்துக்கு -தற்கால விமர்சகர்கள் என்ன "இலக்கணங்களை" பொருத்திப்பார்க்கிறார்கள் என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. என் விமர்சனப்பணி நக்கீரர் வகுத்தது. நக்கீரர் புலவர். ஆனால் பாட்டுக்கு விமர்சனம் செய்தவர். இன்னுமொரு வழியில் சொல்வதானால் - நான் ஒரு சீத்தலைச் சாத்தனார். அவர் ஒரு காவியப் புலவர். விமர்சனம் செய்யப்போய் தனது தலையை புண்ணாக்கிக் கொண்டவர். தற்காலத்தில் நான் ஒரு புதுமைப்பித்தன். ஆனால், புதுமைப்பித்தன் ஒரு சிறுகதை மன்னனே தவிர விமர்சகன் அல்ல. பெரும்பாலான தமிழ் விமர்சகர்களை, "எழுத்து"வில் பயன்படுத்தப்பட்ட ஒரு சொற்றொடரை இரவல் வாங்குவானேயானால் 'பற்றி' இலக்கிய காரர் என்றே சொல்வேன்.

'பற்றி' இலக்கியக்காரர்களை நான் 'விமர்சகர்' என்று ஏற்றுக்கொள்வதுமில்லை, விமர்சனம் என்பது எனது எழுத்து ஊழியத்தில் முக்கிய பங்கை வகிக்கவேயில்லை. சில நியாயங்களையும் -சிலவேளைகளில் சில தர்மங்களையும் சொல்லும் அதிகாரத்தை எடுத்துக் கொள்வதற்காகவே நான் சில சமயங்களில் "விமர்சகன்" ஆகியுள்ளேன்.

**கேள்வி:- தளையசிங்கம், கைலாசபதி, சிவத்தம்பி முதலானோர் விமர்சிக்கும் பொழுது அதில் நயமிருந்தது. ஆனால் தங்களது விமர்சனப் பார்வையில் (?) வக்கிரம் தொனித்தது. இதற்கு உளவியல் காரணம் ஏதும் உண்டா?**

எஸ். பொ:- கைலாசபதி ஆக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியத்துடன் நுழைந்தவர். அதில், அவர் வெற்றி பெற வில்லை. சிவத்தம்பி ஆக்க இலக்கியத்தில் ஈடுபட்டவர் அல்ல. தளையசிங்கம் ஆக்க இலக்கியத்துறையில் ஈடுபட்டபோதிலும்; சிட்டி - சிவபாதசுந்தரம் குறிப்பிட்டமை போன்று 'தளை'யரின் ஆக்க இலக்கிய முயற்சிகள், சில மேனாட்டு இலக்கிய உத்திகளில் நடத்திய பரிசோதனைகளாகவே அமைந்தன.

*Non of them have succeeded as crieative writers.....* இந்த பாரிய வேறுபாட்டை மனதில் கொண்டு தான் எனது விமர்சனப்பார்வைக்கும் அவர்களுடைய விமர்சனங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறியவேண்டும்.

*My literary criticism is more in defence of establish crieative writing Instilution.* என்னை விமர்சகனாக ஏற்கவேண்டும் என்ற ஆசையும் எனக்கில்லை.

**கேள்வி:- கருத்துக்கு, மாற்றுக்கருத்தே பிரதானம். ஆனால் சிலசந்தர்ப்பங்களில் நீங்கள் கருத்தை முதன்மைப்படுத்தாமல் உடல் -குண இயல்புகளையும் கூறி கொச்சையாக -தனிப்பட்ட ரீதியிலும் தாக்குகிறீர்களே - இவையாவும் உங்களது 'பருவக்கோளாறு' என்றோ 'பார்வைக் கோளாறு' என்றோதான் நாம் கருதுகின்றோம் -சிலவேளை இன்று 60வயதும் கடந்துவிட்ட நிலையில் பக்குவப்பட்டிருந்தால் -தங்களின் விமர்சனப் பார்வைகளும் ஆரோக்கியமாக மாறியிருக்கக் கூடும் என எதிர்பார்க்கின்றோம். எமது எதிர்பார்ப்பு சரியா.....?**

எஸ். பொ:- நான் ஓரளவு *HITTING OVER THE BELT* ஆக விமர்சிப்பதாக குற்றம் சுமத்துகிறீர்கள். உங்கள் கேள்வியில் அது தொனிக்கின்றது. சொல்ல வந்த கருத்தை -கூர்மையாக சொல்வதற்கு 'அங்கதம்' ஒரு உபாயம் என்று நான் நம்புகிறேன்.

இந்த அங்கதச்சுவை சில வேளைகளில் சம்பந்தப்பட்டவர்களை எழுத்து அதிகாரங்களுக்கு அப்பாற்பட புண்படுத்தியுள்ளது என்பது இப்போது என்னால் நிதானிக்க முடிகிறது. உண்மையில், விமர்சனம், இத்தகைய மன நோவுகளை ஏற்படுத்தலாகாது என்பதையும் இப்பொழுது வெட்கப்படாமல் என்னால் ஒப்புக்கொள்ள முடிகிறது.

**கேள்வி:- இரசிகமணி கனகசெந்திநாதனின் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'யும், தளையசிங்கத்தின் 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி'யும் சிட்டி சிவபாதசுந்தரத்தின் 'தமிழ்ச்சிறுகதை வரலாறு'ம் தங்களது சிறுகதை இலக்கிய முயற்சிகளை விதந்து பாராட்டியுள்ளன. ஆனால் சுமார் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தங்களிடமிருந்து நாம் சிறுகதைகளையே காண முடியவில்லை. ஆனால் 'நனவிடை தோய்தல்' கட்டுரை இலக்கியத்தைத்தான் பார்க்க முடிந்தது. காலப்போக்கில் உள்ளார்ந்த சிறுகதை இலக்கிய ஆற்றல் வற்றிப்போகும் அபாயம் தோன்றலாம். இன்று ஜெயகாந்தனுக்கு ஏற்பட்டது போன்று.... இது பற்றி தங்களின் கருத்து?**

எஸ். பொ:- 'நனவிடை தோய்தல்' கட்டுரை இலக்கியம் என்று சொல்வது தவறு. அது புதிய இலக்கிய வடிவம். ஆக்க இலக்கியத்துக்கு - புதிய பரிமாணம் செலுத்த வகுக்கப்பட்ட ஒரு இலக்கிய உருவம். சிறுகதை இலக்கிய -இலக்கண வரம்புகளுக்கு உட்பட மறுக்கும் ஓர் ஆக்க இலக்கிய தேவையைக் கருதித்தான் இது தொகுக்கப்பட்டது. 'சிறுகதைத் துறையில் என் ஆற்றல் வற்றிவிட்டதா - ?' -போன்ற கேள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விகள் இன்று பலராலும் கேட்கப் படுகின்றது. இதற்கு 'அக்கினிக்குஞ்சு'வில் நான் எழுதிக்கொண்டிருக்கும் "ஆண்மை" என்ற பொதுத் தலைப்பில் வெளிவரும் கதைகள் பதில் சொல்லும். "ஆசான்" என்ற பெயரில் "ஆண்மை"யை எழுதுகின்றேன்.

**கேள்வி:- 60வயதும் ஆகிவிட்டது. வாழ்விலும் எழுத்திலும் நிறைவான பக்குவம் அடையும் காலம் இது. புதிய தலைமுறைக்கு நம்பிக்கையூட்டும் இலக்கிய முயற்சிகள் ஏதும்......?**

எஸ். பொ:- நாடகத்தை -இன்று அவைக்காற்று கலையாகவே இளம் கலைஞர்கள் தரிசிக்கின்றனர்.

நாடகம் என்பது செறிந்த இலக்கிய வடிவமும் என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவும் அமைந்தது விட்டது. சேக்ஷ்க்ஸ்பியர் தொடக்கம் இப்சன் வரையில், பேர்ணாட்ஷா தொடக்கம் யூஜீனேநெயில் வரையில் எழுதிய நாடகங்கள், இலக்கியமாகவும் முழுத்துவம் காட்டின. இத்தகு படைப்புகள் தமிழில் ஒருப்பு. இதனை நிவர்த்தி செய்வதற்காக ஒரு இலக்கிய முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

இந்து நாடக மரபு மறுக்கப்பட்ட மறக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. நாட்டுக்கூத்து, தெருக்கூத்தாக இனம் காணப்படும் அறிவு மோசடியும் நிகழ்ந்துள்ளது. நாடகத்திற்கு கட்புல -சுவைக்கு அப்பாற்பட செவிச்சுவை செறிந்த ஊடகம் என்பதும் மறுக்கப்பட்டுள்ளது. இவற்றைப்பற்றிய கவனத்தையும் அவதானத்தையும் ஏற்படுத்த வேண்டும் -என்பதற்காகவே இந்த நாடகப்பிரதியை வகுத்துக்கொண்டிருக்கின்றேன். அநேகமாக இந்த வருட இறுதிக்குள் இந்நாடகப் பிரதி நாடகக் கலைஞர்களுக்குக் கிடைக்கும்.

**கேள்வி:- புலம்பெயர்ந்து வாழ்கிறீர்கள்..... புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் எதிர்காலம் குறித்து உங்கள் கணிப்பு?**

எஸ். பொ. :- ஈழத்தின் இலக்கிய பாரம்பரியங்களை மாத்திரமல்ல, தமிழ் கலை, இலக்கிய பாரம் பரியங்களையே -அதன் நுண்வடிவில் பாதுகாத்துப் போஷிக்கும் பாரிய பொறுப்பு புலம் பெயர்ந்துள்ள ஈழத்தமிழர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் குறிப்பிடத் தகுந்த சிறந்த எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி தனது அண்மைக் கால அவுஸ்திரேலியா -மெல்போன் -சிட்னி கலை, இலக்கிய சந்திப்புகளிலே ஒரு கருத்தைக் கூறியுள்ளார். "தமிழ் நாட்டிலே தமிழ் செத்துவிட்டது" என்று. அது ஓரளவுக்கு உண்மையே ! எனவே, புலம்பெயர்ந்த நாடுகளிலே உள்ள தமிழர்கள், ஈழத்திலே போராட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட குழுநேசிப்புகளிலிருந்து விமுக்திபெற்று ஒரு பாரிய தொன்மையான பண்பாட்டினை உலகளாவிய முறையில் பாதுகாக்கும் தத்துவக்காரர்கள் என்ற பொறுப்புணர்ச்சியுடன், சீரழிவுகளிலிருந்து என்றோ விடுதலை பெறக்கூடிய தமிழ் நாட்டினதும், ஈழநாட்டினதும் நாளைய சந்ததியினருக்கு இடைநிறுத்தம் இல்லாத

ஒரு தொடர்ச்சியான தமிழ் இலக்கிய மரபினை பாதுகாத்து ஒப்படைக்கும் பொறுப்பு -இது மகாபாரிய பொறுப்பு -நம் வசம் உண்டு.

**கேள்வி:- ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தேசிய இன விடுதலைப் போராட்டம் பற்றிய ஆக்க இலக்கிய ஈடுபாடு எம்மவர்களுக்கு இல்லையென்றும் -எழுதியே ஆகவேண்டும் -இல்லையேல் தமிழினம் இவர்களைப் புறக்கணித்துவிடும் என்றும் "எ**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மூதாத 'வர்களிடமிருந்து கருத்து மேல்கிளம்பியுள்ளது. இதுபற்றி உங்கள் பார்வை என்ன?**

எஸ். பொ. :- அரசியல் பற்றி தெளிவான வரையறையான அபிப் பிராயம் இருக்கவேண்டும். சமூக நேசிப்பும், சமுதாயப் பிரக்ஞையும் அரசியல்தான். அதேசமயம், இனத் திற்கான சில உரிமைகளை வென் றெடுப்பதற்காகப் பயன்படுத்தும் தந்திரோபாயங்கள் ஆகியவை யாவும் அரசியல்தான். அவன் ஒரு அரசியல் பிராணி, ஆனால், சம கால அரசியல் தந்திரோபாயம் = (சமன்) சமுதாய கலை இலக்கியப் பணிகள் என்று முடிச்சுப்போடுதல் அவசரப்பண்பும் -அரைவேக்காட் டுப் பண்புமாகும். 'அரசியல் தேவைகளுக்காக கலை, இலக்கியப் படைப்புகள் முடக்கப்படுவது தகாது' -என்றுதான் மூன்று தசாப் தங்களுக்கு முன்பே, 'முற்போக்கு' அணியிலிருந்து விலகியவன் நான். அந்த சுதந்திர பிரேமி, மீண்டும் தன்னுடைய கலை, இலக்கிய வடிவங்களையும் -ஊழியத்தையும் சமகால அரசியல் உபாயத்திற்காக அடவு வைக்க வேண்டுமென்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது.

**கேள்வி:- 'ஹெமிங்வே' பற்றி அடிக்கடி சொல்லுவீர்கள். ஈழத் தில் ஒரு 'ஹெமிங்வே' இன்னும் பிறக்கவில்லை. ஈழத்தின் இன விடுதலைப் போராட்டம் தொடர்பாக தெளிவின்மையும் நமது படைப்பாளர்களுக்கு இருப் பதனால் அது குறித்து சிறந்த படைப்புகள் இன்னும் வெளியா கவில்லை. ஆனால் தமிழகத்தில் சுஜாதா உட்பட இன்னும் சிலர் ஈழத்தில்தான் எதிர்காலத்தில் சிறந்த படைப்புகள் தோன்றக் கூடும் என்கிறார்கள் -உங்கள் கருத்து என்ன ?**



எஸ். பொ. :- ஈழத்தமிழர்களின் வாழ்க்கை -தமிழ் மக்களின் சில

உரிமைகளை வென்றெடுக்கும் தன் மைகளை உட்படுத்தியது. தமிழ் நாட்டின் இலக்கியக்காரர்களுக்கு இந்நிலைமை இல்லை. தமிழ் நாட்டு எழுத்தாளர்கள். வாழ்க் கையுடன் ஆத்மார்த்த தொடர்பு இல்லாத -புறத்தேவைகளுக்கு மசிந்து விட்டார்கள். எனவே புதிய பிரகடனங்களை வெளிப்படுத்தக் கூடிய சமர்க்களமாக ஈழத்தை - இலக்கிய ஆர்வமுடையவர்கள் தரி சித்தல் இயல்பு.

குருநிலத்தில் பிறந்தது தான் பகவத் கீதை. இத்தகைய ஒரு உன்னத இலக்கியம் இன்று ஈழத்தில் தோன் றாதா என்ற ஆதங்கம் தமிழ் எழுத் தாளர் மத்தியிலே தோன்றியுள் ளமை நல்ல சகுனமாகும். இந்த எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றவல்ல எழுத்தாளர்கள் ஈழமண்ணிலே உருவாகுதல் வேண் டும் என்பதே எனது ஆசை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மீனா!....அமீனா!

பொலன்னறுவைப் பொதுக்குழியில்
புதைபட்ட என் அமீனா!
பன்னிரு ஆண்டின் முன்
என் வாழ்வில்
மத்தாப்பாய்ச் சிரித்த
ஆறு வயது மின்னல்!
இன்று
அவளோர் இள மங்கை,
உயிர்தப்பிப் பிழைத்திருந்தால் !
இல்லையென்றால்,
பதினெட்டில் கருகிவிட்ட
என் ஆறுவயது
மின்னல்!

கொழும்பிலே வாழ்ந்த காலை....!

வேலை முடித்து,
மாலையிலே வீடு வந்து
படியேறுகின்றேன்!

○

வாயிலைக்கடந்து,
வெளியே பாய்கின்றதொரு பிஞ்சு!
அதன் பின்னால்,
வால்பிடித்து ஓடுகின்றாள்!
எனது குழந்தை மகள்!
'பாயும் வழியில் இவள் உதிர்க்கி
றாள்.
"அது, அமீனா "

○

" ஓ ! மீனாவா?"
"அ ! அ! மீனா, இல்லே, அமீனா!"

இந்தத்தடவை மின்னலே சிணுங்
கியது !

- ஈழக்கூத்தன் -





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுகணமே உள்ளே அது ஓடியது!
காதர் நாணா வீட்டுக் கதவமும்
மூடியது!

உள்ளே நான் செல்கிறேன் !
ஆடை களைந்து,
வீட்டுடை அணிந்து,
முற்றத்து நாற்காலியில் முடங்கு
கின்றேன் !
காதரும் வந்து சேருகின்றார் !

கடைவியளம் கூறுகின்றார் !
ஊர்ப் புதினம் கதைக்கின்றோம் !
"பொலொன்னறுவைத் தங்கை
இங்கே வந்திருக்கா:
நோன்புக்கு இங்கேதான்,
யெங்கூட இருப்பா"

மன்னாரில் ஒரு தங்கை இருப்பது
அறிவேன் நான்.

புராதனத் தலை நகர்
பொலொன்னறுவையிலுமா ?
" ஓ அமீனாவின் அம்மாவா? "

"அட! வந்ததும் வராததுமா,
சினேகிதம் புடிச்சிட்டாளா?"

" இல்லை!
கவிதாவைக் கூட்டிக்கொண்டு
ஓடிச்சே ஒண்ணு !"
" அவளேதான் !"

உரையாடல் அலைகிறது!

மனைவியின் அதட்டல் உலகுக்கு
இழுக்கிறது.
சாதம் பிசைந்தபடி,
கவிதாவைக் கூவுகிறாள் !

வாண்டுகள் பாய்ந்தோடி வந்து
வளைகின்றன.....!

" நான் சாப்பிட்டிட்டேன் !"

" உம்மா ஊட்டிடிச்சு !
ரெண்டு பேருமே திங்கியாச்சு !"

சிற்றாறு இரண்டும் உள்ளே குதித்
தோட,

களை கட்டும் விளையாட்டின்
அமர்க்களம்
கேட்கிறது !

எங்கள் கதைவளர,
இருவீட்டுச் சாப்பாடும்
முற்றத்தில் வந்து பொலிகின்றன!
பொலொன்னறுவைப் புதுச்சமை
யல் என் தட்டில்
மணக்கின்றது!
நீளக் கதைத்த பின்,
தூங்கவென்று எழுகின்றோம்!
கவிதாவின் கட்டிலிலே,
பொம்மைகளின் நடுவிலே,
பாலகியர் இருவரும் பாவைகளை
அணைத்தபடி
தூங்குகிறார்!
காதர் குனிந்து பொம்மைகளை
அகற்றுகிறார்!
விமலா துணியால் இருவரையும்
போர்த்துகிறாள்!

கணப்பொழுது வாழ்க்கை போல்,
ஓரிரவுத் தூக்கமே!
குழந்தைகள் தூங்க என் வீடு,
உன் வீடா?

யாருமே பேசவில்லை! உறக்கத்
தைக் கெடுக்கவில்லை!
அன்றிலிருந்து,
ஒன்றரை மாதம்
அமீனா உறங்கியது
கவிதாவின் கட்டிலிலே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுநாளே
மான் குழந்தை ஒட்டிக்கொண்டு விட்டாள். !

கவிதா என் மடியேறிக்கதை கேட்க,
எட்டத்தே அமீனா
விழிச் சிலம்போடெதிர் நிற்க,
நடிப்பும் பாடலுமாய்க் கதை கூற நான் துவங்க,
குஞ்சுகள் இரண்டும் கூத்தாட,
"கவிதாவின் வாப்பா" என
முளைத்த துளிர் உறவு
"யெம் மாமா" ஆகி, இறுகி இணை கிறது!

"மீனா ! "

"வரமாட்டேன் !"

" சரி , அமீனா !"

"வந்திட்டேனே!"

விளையாடத்துவங்குவோம் !

என் கண்ணைக் கட்டிவிட்டுச்
சுற்றி வந்து குட்டுவார்கள்!
வலிக்குதென்று நான் சிணுங்கத்,
துடி துடித்துப் போவார்கள்!
சிங்க நடை நான் தவள முதுகில் உலா வருவார்கள்!
ஒலி கூட்டும் ஆட்டத்தில்
விலங்கு இனம் காண்பார்கள்!
இங்கேதான்
எமக்கிடையே எழுந்ததொரு
ஒழுங்குச் சிக்கல்!
கீச்சுக்குரலில்
உரத்தெழுந்ததென் குரவை!
திடுக்கிட்ட அமீனா, வாயிலுக்கு ஓடுகிறாள்!
கவிதா மிருகத்தை இனங்கண்டு கூவ,
திரும்பி வந்த அமீனா,
திரும்பவும் ஓடுகிறாள்!
எதிரில் வரும் விமலாவிடம்,
முறைப்பாடு!
"சரி! என்னதான் நான் சொன் னேன் ? "

" ஷெல்ல மாட்டேன் "

" ஏன் ? "
"அது , ஹறாம் ! விலக்கப்பட்ட விலங்கு !"

அன்று ஒரு போழ்து கேலியும் கும்மாளமும் !
எச்சில் துப்ப ஓடுவதும்,
சிணுங்குவதும் !
அவள் வருந்தக் கண்டு
விட்டுக்கொடுத்தவன்
நானேதான்!

நாட்களும் ஒவ்வொன்றாய் நகர் கின்றன, . . . . . !

நோன்பு துறந்த பின் ஒவ்வொரு மாலையும்
தட்டோடு என் முன்னே வந்து நிற்பாள்!
பிடித்த ஒரு பட்சணத்தைத்
தூக்க என் கை நீண்டால்
உடனே என் கையில் ஒரு தட்டு!
பேரீச்சம் பழத்தை முதலிலே தூக் கென்று
கண்ணால் பொய்க் கட்டளைகள்
வைப்பாள்!
பட்சணத்தைச் சுவைக்கும் வேளை யிலே
குறியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகத்திலே கண் பதித்து நிற்பாள்!
புரிந்து கொண்டு,
"ருசியே இல்லை " என்பேன்!
முகம் உடனே சுருங்கி விடும்!
மறுகணமே,
நான் சுவைத்து உண்ணுகின்ற பாங்கினைப் பார்த்தவுடன்
பொலொன்னறுவைத் தாமரை மலர்ந்துவிடும்!

திடீரென்றொரு நாள் இதம் இசைக்க வந்ததுபோல்
தீடீரென்றப் பூங்காற்று
பொலொன்னறுவை போயிற்று. !
மாலையிலே வந்தபோது மனைவி தான் சொன்னாள்!

"யெம் மாமா வரு முன்னர் வண்டியை எடுங்க " என்று
பிடிவாதமாய் நின்று போனாளாம்!
மாமாவைக்கண்டால் அழுதுவிடுவாளாம்!
மாமா
மற்றவர் முன்
கலங்கக்கூடாதென்று
குஞ்சுமகள் விரும்பியதை யார் அறிவார்?

அதன் பின்னர்
புறக்கண்ணால் அவளை நான் பார்த்ததில்லை!
நாடுவிட்டு நான் பெயர்ந்து விட்டேன்!
ஆனாலும்,

ஆண்டாண்டு நோன்புப் பெருநாள் வரும்போது,
எப்படித்தான் அப்படியே ஓடிவரக் கற்றாளோ?
வாழ்த்துமடல் நான் இங்கிருந்தனுப்ப,
நினைவு கூர்ந்து அவள் அங்கிருந்தெழுத,
எங்கள் உறவும் இனித்து மலர்ந்தது. ஓ ம்!

நாங்கள் வளரவில்லை!
அவளுடைய இதயத்தில் மாமா கிழமாகவில்லை!
ஆறுவயது மின்னல், இன்றும் அவள் எனக்கு!

கடந்தாண்டு மார்ச்சிலே நோன்பு வந்து செல்கையிலே!
"ஈத்" அன்றவள் கடிதம் கரம் வந்தினித்தது!
"யெம் மாமோ!
யாழ்ப்பாணத்திலே
சனங்கள் கஸ்டப் படறாங்களாம்!
உணவில்லை!
மருந்தில்லை!
மின்சாரமும் இல்லை!
உங்க உம்மாவும் வாப்பாவும் எதுக்கங்கை இருக்கோணும். ?
யெங்கூட வந்து இருக்கட்டுமே!
ஆறு வயசில்லே, எனக்கிப்போ! பதினெட்டு!"

கொழும்புக்கடை அடைத்து,
பொலொன்னறுவைக் கிராமத்தில்
புதுக்கடை விரித்த காதரும் வரைந்திருந்தார்!

அலையிடைத்துரும்பாய் அலைகின்ற இனத்தினனை
அன்போடணைக்கின்ற அரவணைப்புச் சுகம் கண்டேன். !

வானொலிச் செய்தி ஒன்று இடியாய் இறங்கியது!
பொலொன்னொறுவைக் கிராமத்தில் கொடியோர் வெறியாட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலகரை,
பாவையரை,
சூதுரையா முதியவரை
கண்ட துண்டமாக வெட்டிக் களத்திலே எறிந்த
பதை!
மறு நாளைச் செய்தி வயிற்றை மேலும் குதறியது!
மையக் கிடங்கொன்று தனிக்குழி ஒன்றில்லாது
மூன்று பெரும் பொதுக் கிடங்கில்
மையங்களைப் புதைத்தாராம்.
கொடிய மிருக, கோரச் சொரூபிகளைச்
சபிக்கவா? திட்டவா? அழுது அரற்றவா?

எதுவும் முடியவில்லை ! விறைத்துப் போய் நிற்கின்றேன்!
என்றோ ஒரு நாள் நிதானம்
நான் அடைந்த பின்னர்
நெஞ்சத் துணர்வைப் பகிர்கின்றேன். !

அது வரைக்கும்
ஆறுவயது என் அமீனா இளம் மின்னல்
ஆயுள் பிழைத்திருக்க இறைவா அருள்கவென்று
உதட்டுத் துடிப்பினுள் பிரார்த்தனை ஏந்துகின்றேன்!


# "ஆசியா"வின் வெளியீடு




போர்க்கால, புகலிட
இலக்கியங்களுக்கு
உரமூட்டமுனைகிறது
ஆசியா.

ஆசியா
வெளியீடுகளைப்
பெற்றுக்கொள்ள. .

*"ASSEY"*
*3, Allée Paul Léautaud*
*95200 Sarcelles,*
*France.*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அ. யோகநடராசா

**பா**ரிசில், இன்று பார்க்கும் இடங்களெல்லாம், "டயனாசர்" பற்றிய படங்கள், விளம்பரங்கள்தான்.
கற்பனைக்கே எட்டாத 65 மில்லியன் வருடங்களுக்கு முன், வடஅமெரிக்காவின் Jurassic Park என்னுமிடத்தில் வாழ்ந்து, இயற்கையிலேற்பட்ட பேரழிவால் -முற்றாக -மண்ணோடு மண்ணாகி அழிந்துபோன இராட்சத விலங்கே டயனாசர். சென்றமாதம் முதல், டயனாசர் பிரதானபங்கேற்கும் "JURASSIC PARK" என்னும் திரைப்படம் பரிஸ்திரையரங்குகளில் வெகுமும்முரமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றது.
சிறியோர் முதல் பெரியோர்வரை பார்த்துப்பிரமிக்கக்கூடிய இப்படம் Michael Crichton எழுதிய JURASSIC PARK என்னும் நாவலை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டது.

டயனாசர் என்னும் இவ் இராட்சத விலங்குகள் பற்றி, அகழ்வாய்வில் கிடைத்த எலும்புகள் மூலம் உயிரியல் ஆய்வாளர்கள் காலத்துக்குக்காலம் பலபுதியபுதிய தகவல்களை அறிவித்து வந்துள்ளர். உலகில் இவ்எலும்புகள் அடங்கியகாட்சிக்கூடங்கள் பற்றியும், கம்பியூட்டர் உதவியுடன் வரைந்த மாதிரிப்பொம்மைகள் பற்றியும் சமீபகால பத்திரிகைகள், அறிவியல் நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

இவ்விலங்குகள் இன்றுவாழ்ந்தால் அதன்விளைவுகள் எப்படி இருக்கும் என்ற நாவலாசிரியரின் கற்பனையே இப்படம்.
உலகம் பேரழிவுக்குட்பட்ட பொழுது இவ்விலங்குகள், மண்மழையிலும், கற்குழம்புகளிலும் அகப்பபட்டு மிச்சமின்றி அழிகின்றன. இவை அழியும்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொழுது இவற்றைக் கடித்துக்கொண்டிருந்த சிறுபூச்சியும் சேர்ந்து கற்குளம்பில் இறுகிவிடுகிறது. அப்பூச்சி குடித்திருந்த "டயனாசர்" இரத்தக்கூறை எடுத்து இவ்விலங்கினத்தை உருவாக்குகிறார்கள் விஞ்ஞானிகள். இதற்கு ஒரு கோடீஸ்வரர் பணஉதவிசெய்து, கோஸ்ரறிக்கா "Costa Rica" வில் உள்ள ஒரு தீவில் இவ்விலங்குகளைச் சகல பாதுகாப்புகளுடனும் வைத்துப்பேணுகிறார். இக்கவர்ச்சி விலங்கியல் பூங்காவுக்கு நிதிஅனுகூலங்களைப்பெற, இதன் உரிமையாளரான கோடீஸ்வரர், கற்குளம்பியல் ஆய்வாளர்களான ஒரு தம்பதிகள், ஒரு கணிதவியலாளர், இருபேரக்குழந்தைகள் சகிதம் செல்கிறார். அப்பொழுது ஏற்பட்ட தொழில் நுட்பக்கோளாறு காரணமாக பாதுகாப்பில் ஏற்பட்டபிசகினால் இவ்விலங்குகள் பாதுகாப்பு அரண்களை விட்டுத்தப்பி, செய்யும் அனர்த்தங்களே படம்.

Steven Spielberg பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு இயக்குனர். இவர் பொதுவாகப் பிரமிப்பூட்டும் படங்கள் எடுத்துப் புகழ் பெற்றவர். இப்படத்தின் மூலமும் அவர் தன் திறமையை வெளிக்காட்டியுள்ளார். குறிப்பாக இந்த இராட்சதவிலங்குகள் நடக்கின்றன.. ஓடுகின்றன.. உணவுண்கின்றன.. வேட்டையாடுகின்றன.. நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துகின்றன. இவை பொம்மை என்று எண்ண மறுக்கிறது மனம். இதுதான் சினிமா மாயாமந்திரம் போலும் !

குறிப்பாக சுமார் நாற்பது அடி உயரமான தாவரபட்ஷிணி Brachiosaures என்னும் வகை டயனாசர், உயரமான மரஉச்சி இலைகளைச் சாப்பிடும் காட்சி மிக உன்னதமாகப் படமாக்கப்பட்டுள்ளது. யானை துதிக்கையால் இலைகுழையை அசைந்து அசைந்து உண்பதுபோல் இருக்கிறது. முற்றுமுழுதாக இவை இயந்திரத்தால் இயக்கப்படுகின்றன என்பதை நம்பமுடியாமல் இருக்கிறது. அடுத்து சுகவீனமாகப் படுத்திருக்கும் Triceratops, நோயினால் படும் வேதனை அதன் முகத்தில் தெரியும்படி அந்தப்பொம்மை மிகவும் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. சிறியவகை டயனாசர் கூட்டமொன்றை பெரிய T. Rex வகை டயானசர் துரத்திவேட்டையாடும்போது இவை பொம்மைகள்தான் என்று உணர்வதே கடினம். டயனாசர் முட்டையிலிருந்து கத்திக்கொண்டு வெளிவரும் காட்சி, -முதலைக்குஞ்சு போல் -பார்க்கப் பிரமிப்பூட்டுகின்றது.

உலோகங்களாலும், மென் இரப்பர்களாலும், மின்சாரத்தாலும் உயிரூட்டும் காட்சியமைப்பு. ஒலியமைப்பு படத்திற்குப் பொருத்தமாக அமைந்து, காட்சிக்குக்காட்சி அதன் பங்கு மெய்சிலிர்க்கவைக்கின்றது.

இப்படத்தில், Sam Neill, Jeff Goldhum, Laura Dean இவர்களுடன் கோடீஸ்வரராக Sir Richard Attenborough நடித்துள்ளளார். "GANDHI" "CHAPLIN" போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய பிரித்தானிய இயக்குனர் Richard Attenborough அவரேதான். மிகவும் இயல்பாகவும், அனாயசமாகவும் நடித்துள்ளார்.

எண்பதுகளில், "JAWS" (சுறா பற்றிய படம் ) ஏற்படுத்திய வெற்றியை இப்படமும் ஏற்படுத்தும் என்ற திரைப்பட விமர்சகர்களின் கணிப்பு பொய்யாகா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- அன்பழகன் -

ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றை விரிவாக ஆய்வு செய்யும் முயற்சிகள் கடந்த காலங்களில் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டாலும், முறையான வரலாற்றுத்தரவுகளை ஒழுங்குபடுத்தி ஆதாரபூர்வமாக நூல் எழுதும் முயற்சிகள் எவையும் சரியாக இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

ஈழத் தமிழ் மக்களின் தொன்மையான வரலாறு ஆய்வுக்குட்படுத்தப்ப டாமல் தனியே கடைசித் தமிழர் ஆட்சியான யாழ்ப்பாண இராச்சியத்தை மட்டும் ஆய்வாளர்கள் கருத்தில் எடுத்தமையினால் ஈத்தமிழர்களின் பாரம்ப ரிய வரலாறுகள், ஐதீகங்களையும், கற்பனைகளையும், கர்ணபரம்பரைக் கதைகளையும் கொண்டதாக விளங்குகின்றன. இந்த ஆரம்ப அடிநிலை வரலாறுகளை இலக்கியத் தரவுகள் மூலம் ஊகிக்க முடிந்தாலும் இவை தொல்பொருள் ஆய்வுகள் மூலம் நிறுவப்பட ஆய்வாளர்கள் முன்வரவேண் டும். அப்போதுதான் வரலாறுகள் உறுதித்தன்மை பெறும்.

வடபகுதி இராச்சியத்தைப்பற்றி அவ்வப்போது வெளிவந்த நூல்கள் பல்வேறு குறைகள் நிரம்பியதாகவும், உறுதியான ஆய்வுத்தகவல்கள் அற்ற வையாகவும், அவரவர் மனம்போனபோக்கில் எழுதப்பட்டுள்ளன. இவ்விதக் குறைகளை நீக்கிச் சரியான வழியில் ஆய்வுகளை மேற்கொண்டு ஈழத்தமிழர் வரலாறுகளை எழுத முற்படவேண்டுமென்ற உணர்வுகள் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றிய வரலாற்றுத்துறை, தமிழ்த்துறை பேராசி ரியர்களின் மனதில் தோன்றியிருப்பினும் அதனைச் சரிவர நடைமுறைப்படுத்த முடியாமற்போனதிற்கு இலங்கையரசே தடையாக இருந்திருக்கும் என்பதில்



ஈழத்தமிழர் இராச்சியங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துபேதமில்லை. ஆனால் இம்மாதிரியான முயற்சிகள் தனிப்பட்ட ஒருவரால் செயற்படுத்தப்படுவது சாத்தியமற்றதாகும். அதனால் தொல்பொருள் ஆய்வு முயற்சிகள் பல்கலைக்கழகங்கள் ஊடாகவே நடத்தப்படவேண்டும். இம்முயற்சிக்கு பல்கலைக்கழக மானியக்குழு பணம்கொடுத்து உதவா விட்டாலும், தனிப்பட்ட ஸ்தாபனரீதியாக பல நன்கொடையாளர்களின் உதவியைப்பெற்றுக் கொண்டு செயற்படுத்தமுடியும். இப்பணிக்கு பல்கலைக் கழகங்கள் முன்வரவேண்டும். பல்கலைக்கழகங்களின் பணி மாணவர்களுக்கு அறிவூட்டுவதுடன் நின்றுவிடாமல், புதிய ஆய்வுகளின் வாயிலாக அறிவை மெருகுபடுத்தி, அவ்வாறு பெறப்பட்ட அறிவை மாணவர்களுக்கும், மக்களுக்கும் பரப்புவதே அதன் முக்கிய பணியாகும்.

இலங்கையரசு பல்கலைக்கழகங்களூடாக சிங்கள வரலாற்றை முதன்மைப்படுத்த பாரிய தொல்பொருளாய்வுகளை நடாத்தித் தரவுகளை வெளிப்படுத்தியது. தமிழர்களின் தொன்மை வரலாற்றைத் திரிக்கும் வகையில் பேரினவாத வரலாற்று ஆசிரியர்கள் முனைப்புடன் செயற்பட்டுவந்த நிலையிற்தான் இலங்கைவரலாறு கடந்த காலங்களில் எழுதப்பட்டது. இவை அரசியல் லாபந்தேடும் பலருக்கு இரையூட்டின. அதனாலேயே அன்றைய பாடநூல்கள் வாயிலாக துட்டகைமுனுவை வீரனாகவும், எல்லாளனைத் துரோகியாகவும் இனங்காட்டும் தன்மை உருவானது.

பேராசிரியர் பரணவிதானவின் வழிவழியாக வந்த வரலாற்று ஆசிரியர்களும் வரலாற்றுத் திரிபுவாதத்தையே முன்வைத்து மகாவம்ச மாயையயே அறிவுலகில் மோதவிட்டனர். இதன் ஒரு பகுதியாகத்தான் மகாவம்ச வரலாற்று விஜயன் கதையைத் தொல்பொருள் ஆய்வு மூலம் நிறுவுமுகமாக (புத்தளம்) பொன்பரப்பியில் மேற்கொண்ட ஆய்வின் முடிவு விஜயனின் தகவல்களைத்தராமல் தொன்மைத் தமிழர் வரலாற்றினை வெளிப்படுத்தியதால் அந்த ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளாமல் கைவிட்டனர். ஆகவே நிலத்தின் மேற்பரப்பு ஆய்வுகள் பௌத்த வரலாற்றைக் கொடுத்தாலும் நிலத்தின் கீழ்மட்டஆய்வுகள் தமிழரின் தொன்மையைத் தெளிவுபடுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்றைய விஞ்ஞான யுக வளர்ச்சியூடாக அறுபத்தையாயிரம் மில்லியன் வருடத்திற்கு முன்வாழ்ந்த விலங்கினங்களின் தோற்றம் பற்றிய தகவல்கள் கிடைத்திருக்கின்ற இவ்வேளையில் இரண்டாயிரம் வருடத்திற்குட்பட்ட வரலாறுகளை வெளிக்கொணர்வதில் எவ்வித தடையுமிருக்காது. தமிழர்களின் தொன்மையைப்பற்றி மகாவம்சம், தீபவம்சம், தூளவம்சம் என்ற பாளிநூற்களும் தரவுகளைக் கொண்டுள்ளன. சிங்கள வரலாற்றைக் கூறுகின்ற ஏனைய நூல்களும் தமிழர் பற்றிய தகவல்களை ஆங்காங்கே தொட்டு வெளிக்காட்டுகின்றன.

பண்டைய ஈழத்தில் தமிழர்கள் பரந்து வாழ்ந்தார்கள். அவர்கள் தமக்கென்று தனியரசு நிறுவி ஆட்சி நடத்தியதாகச் சான்றுகள் இல்லை. (இராவணனைத் தவிர்த்து) ஆனால் அவர்கள் ஆங்காங்கே குழுக்களாக தனித்தன்மையுடன் வாழ்ந்ததாக அறியமுடிகின்றது. சோழப்பேரரசு இலங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைமீது ஒன்பதாம் நூற்றாண்டு படையெடுப்பு நடத்தியபின்புதான் தமிழ்ப்பகுதியில் ஒரு உறுதியான, முழுமையான அரசு நிறுவப்பட்டிருக்கவேண்டும். மாறிமாறி தென்னிந்திய அரசுகளின் படையெடுப்புக்கள் நடைபெற்றுள்ளதால் இவை தென்னிந்திய அரசுக்குட்பட்டதாகவே இருந்தன. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னிந்திய அரசுகள் வலிமை குன்றியதாலும், பொலனறுவை அரசு வீழ்ச்சியடைந்ததோடு சிங்கள இராசதானிகள் பாதுகாப்புக்காக தம்பதெனியா, யாப்பகூவ, குருநாகல், கம்பளை, கண்டி, கோட்டை போன்ற இடங்களுக்கு நகர்ந்ததால் வடபகுதியில் சிங்கை நகரை மையமாகவைத்து ஆரியச்சக்காவர்த்திகளின் தலைமையில் யாழ்ப்பாண இராட்சியம் தனித்துவமாகவும் சுதந்திரமாகவும் விளங்கியது. இவ்வாட்சிகள் கி.பி 1629 இல் போர்த்துக்கேயர் கைப்பற்றும்வரை நிலையாக ஆட்சி செலுத்தின என்றும், இடையில் 1450 -1467ஆகிய காலப்பகுதியில் இப்பகுதி கோட்டை சிங்கள அரசுக்குட்பட்டிருந்தது என்றும் பல தமிழ் நூல்கள் எடுத்தியம்புகின்றன.

யாழ்ப்பாண இராச்சியத்தைப்பற்றிய தகவல்களை, வரலாற்று ரீதியாகத் தமிழில் தருவது மயில்வாகனப்புலவரால் எழுதப்பட்ட (1739ம் ஆண்டு) 'யாழ்ப்பாண வைபவமாலை' யாகும். ஆனால் இதை முழுமையான வரலாற்று நூலாகக் கருதமுடியாது. யாழ்ப்பாண அரசின் மன்னர்களின் பெயர்ப்பட்டியலைத் தருகின்ற முதன்மைநூலாகும். சில பழமையான நூல்களை மூலாதாரமாகக்கொண்டே எழுதியதாக யாழ்ப்பாண வைபவமாலையின் சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகின்றது. அவையாவன, கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை என்பனவாகும். இவற்றில் கைலாயமாலை, வையாபாடல் மீள்பதிவு செய்யப்பட்டவை கிடைக்கின்றன. ஏனைய இரு நூல்களும் அழிந்து போய்விட்டதாகக் கருதப்படுகின்றது. 19 ம் நூற்றாண்டுக்குப்பின்பு யாழ்ப்பாண இராச்சியத்தைப் பற்றி பல தமிழ்நூல்கள் அறிஞர்களாலும் , பேராசிரியர்களாலும் எழுதப்பட்டன. அதில் குறிப்பாக செ . இராசநாயகம் முதலியார், சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய நூல்களே பின்வந்த ஆய்வாளர்களுக்கு உறுதுணையாயிற்று. யாழ்ப்பாண இராச்சியத்தைப்பற்றி தமிழில் கீழ்க்கண்ட நூல்கள் வெளிவந்தன. கைலாயமாலை (சா. வே. ஜம்புலிங்கப்பிள்ளை 1939) யாழ்ப்பாணவைபவமாலை (குலசபாநாதன் -1963) யாழ்ப்பாணச்சரித்திரம் (எஸ். ஜோன் -1882) வையா (ஞா. ஞானப்பிரகாசர் பதிப்பு-1921) யாழ்ப்பாணவைபவ கௌமுதி ( க. வேலுப்பிள்ளை -1918), யாழ்ப்பாணவைபவம்(சி. பாலசுப்பிரமணிய சர்மா-1927) யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (சுவாமி ஞானப்பிரகாசர் -1928) செகராசசேகரம் (ஞானப் பிரகாச யந்திரசாலை-1932) செகராச சேகரமாலை(இ. சி. இரகுநாதையர் பதிப்பு-1942) யாழ்ப்பாணச்சரித்திரம்(டானியல் ஜோன் -1930) யாழ்ப்பாணக்குடியேற்றம் (சிவானந்தன்-1933) யாழ்ப்பாணச்சரித்திரம்(முதலியார். செ. இராசநாயகம்-1933) யாழ்ப்பாணச்சரித்திரம் (ஈ. முத்துத்தம்பிப்பிள்ளை-1933) தமிழரின் பூர்வ சரித்திரமும், சமயமும்(சுவாமி ஞானப்பிரகாசர்-1932) இலங்கைவாழ் தமிழர் வரலாறு (பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை -1956) யாழ்ப்பாண இராச்சியத்தின்தோற்றம் (கா. இந்திரபாலா -1972) யாழ்ப்பாணத்தமிழ் அரசர்காலமும், வரலாறும் (கொ. ஜெகந்நாதன்-1987) இலங்கைத்தமிழர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(சி. எஸ். நவரெத்தினம் -1958) யாழ்ப்பாண இராச்சியம் (சி. பத்மநாதன்-1978) நல்லை நகர்நூல் (க. குணராசா-1987)

இந் நூல்கள் எல்லாம் தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களான இலங்கையின் வடபகுதி, அடங்காப்பற்று வன்னிமைகள், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட வன்னிமைகள், புத்தளம் மாவட்ட வன்னிமைகள் யாவும் தொடர்ச்சியாக யாழ்ப்பாண இராட்சியத்துக்கு கட்டுப்பட்டிருந்ததாகக் கூறப்படவில்லை. இவை காலத்துக்குக் காலம் சோழ பாண்டிய அரசுகள், யாழ்ப்பாண அரசு, கண்டியரசு, கோட்டையரசு, ஒல்லாந்துஅரசு, போர்த்துக்கேய அரசுகளுக்குக் கட்டுப்பட்டு வரி செலுத்தித் தனித்துவ குறுநில அரசுகளாக செயற்பட்டு வந்தது தெளிவாகின்றது. இவ்வன்னிமைகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர யாழ்ப்பாண அரசுகள் அடிக்கடி போரிட்டதாகவும் தெரிகின்றது. அதைவிட வடபகுதியிலும், யாழ்ப்பாண அரசுக்குள் சில குறுநில அரசுகள் இருந்திருக்கின்றன. இவை யாழ்ப்பாண மன்னராட்சி போத்துக்கேயரால் அகற்றப்பட்டபின் தலையெடுத்திருக்கின்றன. இதில் கரையோரத்தலைவன் வெடியரசன் தலைமையில், (விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு -மு. சு. சிவப்பிரகாசம்-1988) யாழ்ப்பாண அரசகுமாரனை அரசனாக்க சின்னமிக்கேல்பிள்ளை என்பவன்தஞ்சைக்குச் சென்று ஆயிரம் போர்வீரர்களை அழைத்துவந்தும், ஒரு முதலியார் படைதிரட்டியும், அதன்பின் சின்னமிக்கேல்பிள்ளை தானே யாழ்ப்பாண அரசனாக எண்ணி தஞ்சை பெரும்படை உதவியுடன் போத்துக்கேயரை எதிர்த்து யுத்தம் செய்துள்ளனர். ஆனால் அவை யாவும் போத்துக்கேயத் தளபதி ஒலிவேரா வினால் முறியடிக்கப்பட்டதாக (கி. பி. 1620-1621) கூறப்படுகின்றது. இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், சின்னமிக்கேல்பிள்ளை தனிப்பட்ட ஒருவராக இருந்திருந்தால் தஞ்சை நாயக்கர் இருதடவைகள் தனது படைகளை இலங்கைக்கு அனுப்பியிருப்பாரா? ஆகவே சின்ன மிக்கேல்பிள்ளை தலைமையில் அங்கு சிற்றரசு இருந்திருக்கவேண்டும் என்றே எண்ணத்தோன்றுகிறது.

அடங்காப்பற்று வன்னிமை சிற்றரசுகள்( கைலாயவன்னியன், பண்டாரவன்னியன் ) போத்துக்கல், ஒல்லாந்து அரசுகளுக்கு அடிமைப்படாமல் இருந்தும் , ஆங்கிலேய ஆட்சியாளர்களினால் முறியடிக்கப்பட்டனர். அதன்பின்னர்தான் அவர்கள் முழுஇலங்கையையும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். வன்னிமைகள் பற்றி வந்த நூல்கள் வையாபாடல் ( கலாநிதி. செ. நடராசா பதிப்பு-1980), புத்தளம் வன்னிமைகள் ( சைமன் காசிச்செட்டி) வன்னியர் (சி. பத்மநாதன் ) குளக்கோட்டன் வரலாறு , கோணேஸ்வரக்கல்வெட்டு( பண்டிதன். இ. வடிவேல்-1993) கோணேஸ்வரர் . மான்மியம், மட்டக்களப்புத் தமிழகம்(வி. சி. கந்தையா) மட்டக்களப்பு மான்மியம்( F. X. C . நடராசா) தஷ்ணகைலாயப்புராணம், முற்குவ வன்னிமைகள், முன்னேஸ்வரர் மான்மியம் , மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம், திருகோணமலை வைபவம்( அ. அளகைக்கோன்-1950) நாடுகாடுப்பரவணிக்கல்வெட்டு, இவைமட்டுமல்லாது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் எழுதிய வரலாற்று நூல்களிலும் அரசு நிர்வாக அறிக்கைகளிலும் இவை பற்றிய அனேக குறிப்புக்கள் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் கி. பி. 1658-1796 ல் ஒல்லாந்தர் ஆட்சியில் முதற் தேசாதிபதியாக நியமனம் பெற்ற வான்கூவன்ஸின் கூற்று பின்வருவனவாக உறுதிசெய்கின்றது. "யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கேயர் சிதைத்தாலும், அது ஏற்படுத்திய தமிழ்ப்பாரம்பரியத்தையும், தனித்துவத்தையும் அவர்களால் சிதைக்கமுடிய வில்லை. பல தமிழ் இராசாக்களின் ஆதிக்கம் இலங்கைபூராகவும் பரந்து. உயர்ந்த மலைத்தொடர்களிலும், வேடர்களின் நிலப்பரப்புக்களின் மீதும், மேற்குக்கரையோரம் புத்தளம் கற்பிட்டியூடாக தெற்கே நீர்கொழும்பு வரையிலும், கிழக்கே பாணமை, கும்புக்கன் ஆறு வரை இருந்தது. இப்பிர தேசங்களில் தமிழ் மொழியே பேசப்படுகின்றது"

மேலும், இன்று தமிழர் என்ற பதத்தில் மூன்று மதத்தவர் அடங்கியுள் ளனர். அதில் முஸ்லீம்கள் அரசியல் ரீதியாக தங்கள் தனித்துவத்தைப்பேணு வதற்காக அண்மைக்காலமாக எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டவேண்டியது. தங்களுக்கென்று ஒரவரலாறு இல்லாமற்போனால் தாம் அந்நியராக்கப்பட்டு விடலாம் என்ற கவலையும், கரிசனையும் ஒவ்வொரு முஸ்லீம்களுக்கும் ஏற்பட்டுள்ளதால் பிரதேச ரீதியாக பல வரலாற்று நூல்கள் எழுதமுற்பட்டுள் ளனர். இது தொடர்பாக, இதுவரை யாழ்ப்பாண முஸ்லீம்கள் வரலாறு, அனுராதபுரம் முஸ்லீம்கள்வரலாறு, அக்கரைப்புற்றுவரலாறு, வாழைச்சேனை ஒருவரலாறு, புத்தளம் வரலாறு, கழுத்துறை முஸ்லீம்கள் வரலாறு, மாத் தளை முஸ்லீம்கள் வரலாறு, கம்பளை முஸ்லீம்கள் வரலாறு என்பன வெளிவந்துள்ளன.

இப்படியான பல நூல்கள் வெளிவந்தாலும் ஈழத்தமிழர் இராச்சியங்களைப் பற்றியோ சரியான தீர்க்கமு டிவான வரலாறு கிடைக்கவில்லையென்றே தோன்றுகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசிமன்னன் சங்கிலியைப் பற்றிக்கூட எமது வரலாற்று ஆசிரியர்களுக்கு, தீர்க்கமான முடிவை தரமுடியாமலேயுள்ளது. இவனது ஆட்சிக்கு 100 ஆண்டுகளுக்கு முன் வேறொரு சங்கிலி மன்னன் ஆட்சி செய்ததாகக்கூறப்படுகின்றது. இவர்கள் இருவரையும் பற்றிய தகவல்களை ஒருவருக்கொருவர் முரண்பட்ட நிலையில், எமது வரலாற்று ஆசிரியர்கள் குழம்பிப்போய் பலவாறு எழுதியுள்ளனர். இப்படி அண்மைய வரலாறுகூட நிச்சயமற்ற தன்மையுடன்தான் விளங்குகின்றது.

---

23 ம் பக்கத்தொடர்ச்சி. .

10 வருடங்கள் இலையுதிர் காலமாய்... 1993 பாரிஸ் "பாலைவனத்தில்" தனிமையில் நான்.
எனினும் அம்மாவின் இதமான நினைப்புகள் என்நெஞ்சில்.
சென்ற வாரம் செய்தி. என் நினைவோடு அம்மா.
இறுதி வரை வரட்டுத்தனமாய் நான் தொடர்புகள் அற்று....

"போராட்டம் மனிதர்களை நிறையவே பலி வாங்கி விட்டது. என்னைப்போல் வரட்டுத்தன மனிதர்களையும் உற்பத்தியாக்கி"

(அம்மாவின் செய்தி கேட்டு ஆகஸ்ட் 23. 1993. இரவு 9. 30)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துடைப்பானின் குறிப்புக்கள்

நான் தேசாந்தரியாகி விட்டதினால் அவனுக்கும் எனக்குமான உறவு துண்டித்துக் கொண்டதில் எனக்கு வேதனை. பலமுறை நானும் அவனும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள முயன்றும் "வாழ்நிலைத் தாக்க ஓட்டங்களினால் இது முடியாமல் போயிற்று. சமீப நள்ளிரவு நேரம் ஒன்றில் என் அருகில் தொலைபேசிச் சப்தம். ரிசீவரைத் தூக்குகையில் மறு பக்கத்தில் இவன் குரல். தூரதேசம் ஒன்றில் " வாழ்வதாய் " சொன்னான். இவன் தொடர்பு சமீபகால என் வேதனைத் துயரங்களிலும் ஓர் சந்தோஷக் கீற்றா யிற்று. எனினும் நெஞ்சில் இனம் புரியா வேதனை அழுத்தம். நீண்ட நேரம் பேசினோம். ஒன்றா இரண்டா? நள்ளிரவுத் தூக்கம் எங்கோ தொலைந்திற்று. பல்வேறு நினைவு முகங்கள் என் நெஞ்சுக் கூட்டிற்குள். இவன் தான் அந்த நல்ல சிநேகிதியை எனக்கு அறிமுகம் செய்தவன். அவள் முகமும் நள்ளிரவில் என்னுள். இந்த நல்ல சிநேகிதிதான் டிமிட்ரொவ்வையும், காண்டேகரையும், பாப்லோ நெருதாவையும், மார்ட்டின் விக்கிரமசிங்காவையும், அகிரா குரோசாவையும், தளையசிங்கத்தையும் யாரெனக் கற்பித்தவள். அவளின் உறவும் இன்று காணாமல் போயிற்று. அவளும் அகதியாய் இன்னோர் தேசத்தின் தலைநகர் ஒன்றில். அதிகாலை வரை நினைவுச் சரங்கள். இவனின் நினைவொன்று இன்னும் என் நெஞ்சில் அழுத்தப் பதிவுக ளாய்........

யாழ்ப்பாணம் அக் காலத்தில் எனக்குப் புதிது. ஒரு மாலை நேரத்து மணியண்ணன் கடை முற்றத்து விவாதம் இவனை எனக்கு நண்பனாக்கிற்று. நான் சார்ந்த விடுதலை அமைப்புக்கு அப்பால் எனக்குக் கிடைத்த உறவு நிலை இது. யாழ்ப்பாண சமூகத்தின் கட்டுமாணத்தின் கீழ் புதைந்து கிடந்த தமிழர்களின் சீழ்படிந்த பக்கங்களைக் என் முகத்திற்குக் காட்டியவன் இவன். இவனின் தயவு தாட்சண்யம் அற்ற கறாரான கருத்துக்கள் என்னைச் சோர்வு கொள்ளச் செய்த காலங்களும் உண்டு. என் அமைப்பின் செயற்பாடுகளிலும், நோக்கங்களிலும் இவனுக்கு அதிருப்தி எந்நாளும். மார்க்சிய சிந்தனைகளின் கருத்தோட்டம் இவனிடம் நிறையவே. பிரான்ஸ் நாட்டு மார்க்சியவாதி லூயி அல்துாஸரின் STRUCTURALIST MARXISM எனும் தத்துவக் கோட்பாட்டை அக்காலத்திலேயே கதைத்தவன் இவன். எங்களை மார்க்சிய போலிகளாகவே கருதினான். என்னை பல முகம் கொண்ட மனிதன் என்பான்.

அந்த சக தோழமை அமைப்பும் எங்களைப் போல் மார்க்சியக் கோட் பாடே தங்களின் முதுகெலும்பு என்று சொல்லியது. நண்பன் அவ் அமைப்பில் அங்கத்தினன் ஆனான். மலையக மக்களைப் பற்றி இவனுக்கு அக்கறை உண்டு. அமைப்பும் அவர்களின் வாழ்வே குறிக்கோள் என்றது. நண்பன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓடியாடி வேலை செய்தான். இந்தியாவில் குறிப்பிட்ட காலம் வாழவேண்டிய சூழல். இருவரும் தினம் தினம் சந்திப்போம். என் அமைப்பின் " அசாதாரண "விசயங்கள் தொடர்பாய் கண்டனங்கள் காரமாய் எதிரொலிக்கும் அவனிடம். நான் மௌனம் கொள்வேன். ஒரு நாள் சோர்வு கொண்டு தலை கவிழ்ந்தான். " தான் நம்பிய அமைப்பினுள் ஏமாற்றும் கைங்கரியம் அநேகம் " என்றான். ஆறுதல், அமைதிப்படுத்தல் என் நாளாந்த கடமைகளில் ஒன்றாயிற்று. காலம் செல்ல இவன் குரல் அமைப்பினுள் பலம் கொள்ள விழைந்தது. தலைமை வழமை போலவே. முரண்பாடு வளர்ச்சி கொண்டு இது இவனுக்கு ஏமாற்றமாகி தற்கொலை செய்ய முயன்று தோற்றான் ஒரு நாள். அதன்பின் உளம் ஊனமுற்று அதிக வேதனைச் சுமைகளோடும் ஏமாற்றங்களைச் சுமந்தும் யாழ்ப்பாணம் சென்றான். நல்ல நண்பர்கள் தைரியம் சொன்னார்கள் என் சிநேகிதி துணை நின்றாள். சில காலங்களின் பின் செய்தி. இவனுக்கு பைத்தியம் என்று தெல்லிப்பளை மனநோயாளர் மருத்துவ மனையில் அடைக்கப்பட்டுள்ளானாம். கைகளிலும், கால்களிலும் சங்கிலியாம். என்னால் இந்தியாவில் தரிக்க முடியவில்லை. யாழ்ப்பாணம் செல்ல முயன்று நானும் தோற்றேன். என் நண்பன் அவனுக்கு ஆஸ்பத்திரியில் துணை இருந்தான். நாட்கள் கழிந்தன. அவன் எண்ணம் என்னுள். துணை செய்த நண்பன் சென்னை வந்தான். சேதி சொன்னான். யாழ்ப்பாணம்

சென்றதும் இவர்களின் போலித்தனம் இவனால் கண்டிக்கப்பட்டதாம். விளைவு இவனுக்கு பைத்தியக்காரப்பட்டம். மனிதநேயம் மிக்கவர்கள் அன்று நிறையவே மலிந்து இருந்தார்கள். அவர்கள் அன்றைய காலம் எங்கே ஒழிந்தார்கள்? இவன் உள்ளம் இவர்களால் ரணமாக்கப்பட்டது. என் இதயம் கூட. காறி உமிழ நினைத்தேன். இக்காலத்தில் இத்தகுதி எனக்கும் இல்லாமல் போயிற்று.
இந்தக்கசப்பு மிக்க துயர்கொண்ட நினைப்பு இன்னும் என் இதயத்தில் நெருஞ்சி முள்ளாய். அவன் மறந்திருப்பானோ?

O

முரண்பாடுகள் அற்ற காலம் இனிமையானது. சக இயக்க நண்பர்களின் தோழமையும் அன்பும். இன்று அம்மாவின் நினைவுகளோடு இவர்களும். இத்தோழமைகளினால் என் வீடும் அடிக்கடி பொலிஸ் தொந்தரவுக்குள்ளாயிற்று. என் கிராமம் வித்தியாசகரமானது. உறவினர்களின் முணுமுணுப்பும், வேண்டாவெறுப்பும் -புன்சிரிப்போடு அம்மா. அது ஓர் போராட்டம் மிகுந்த இனியகாலம்.

" இறைவனின்" மரணம், அம்மாவின் கண்களில்..... நான் மௌனமாய். முதன் முதலாய் அம்மா...... அதன்பின் அம்மா மௌனியாய். வீட்டில் இருத்தல் என்பது கடினமாய் முழுமையாய் நான்.

1983 கடைசிப் பகுதி. அம்மாவின் பார்வையில் நான். மெலிந்து சோர்ந்து நரைகண் முதுமையாய். அம்மாவா அது ! என் நினைவும் என் வாழ்தல் பற்றிய பயமும் அம்மாவைக் கவ்விற்று. வரட்டுச்சிந்தனைகளோடு - அதன் ஆதிக்கங்களோடு நான். எனினும் அம்மாவின் நினைவுகள் அடிக்கடி. கனமாய் கடிவாளம்.

21 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

○ சிறுகதை ○

# • வரம் •

- க. ஆதவன் -

அவள் நிமிர்ந்து கிடந்தாள்,
நான் அதிர்ந்து போனேன்.
மயக்கமாய்.... பேச்சுமூச்சற்று..!
கீழ்ச்சொண்டு பெரிதாய்
மொத்தமாய்த் தெரிந்தது !
கண்கள் மேலே சொருகி இருந்தது,
பயத்தை மேலும் அதிகரித்தது.
கட்டிலின் மெத்தை-
தொக்கையாய் இருந்தது.
ஆஸ்பத்திரி மணம் மூக்கைப்
பிடுங்கியது.
வெள்ளைநிற தாதிகளும்
டொக்டர்களும் சுற்றவர
நின்று குசுகுசுத்தார்கள்.
மார்பகங்கள் இயக்கமேதுமிலாது
இடமும் வலமுமாய் சிதைந்து
தன் பாட்டில் கிடந்தன.
அரை நிர்வாண கோலத்தில்
அவளைக் கிடத்தியிருந்தார்கள்.
காலையில் ஒன்றும் நடக்கவில்லை.
இது நடந்து 2மணிநேரம்
இருக்கும்.
என்னவளைப் பார்க்க பரிதாபமாய்
இருந்தது.
அனாதரவானவள் போல் - யாருமற்ற
அனாதைப் பிரேதம்போல் -
கட்டையாய்.... ஒரு சருகாய்....
கிடந்தாள்.
வேர்த்துக் கொட்டியது எனக்கு !
வேலை முடிந்து வந்த நான் -
பக்கத்து வீட்டுப் பெண்ணிடம்
சேதியறிந்து துடித்துப் பதைத்து
வந்து..... ஆஸ்பத்திரி தேடி
Ward தேடி.... வந்து பார்த்தபோது
கண்ட தரிசனம் - இது.
ஒன்றுமே புரியவில்லை.
யாரைக் கேட்கலாம்?
டொக்டரைக் கேட்கலாம்.
கேட்டேன்.
'You are Lucky' என்றார்.
"ஏன்?"
'கொஞ்சம் பிந்தியிருந்தால் ஆளைக்
காப்பாற்றியிருக்க முடியாது'
என்றார்.
"ஏன்?"
'உற்பத்தியான கரு, கருப்பை
-யில் தங்கவில்லை. வெறொரு
குழாயில் தங்கியிருந்தது.
அந்தக் குழாய் கருவைத்
தாங்கும் வல்லமையற்றது.
அது வெடிக்கும்! வெடித்தால்
அது நஞ்சாகும். நஞ்சினை
இரத்த நாடிகள் உடலெங்
-கும் கொண்டு செல்லும்.
உடலே நஞ்சாகும். பின்னர்
ஆள் தப்புவதற்கான Chances
0. 01% தான்'

"எல்லாம் விளங்கிவிட்டேன்
டொக்டர்"
என்று மட்டும் சொன்னேன்.
ஆச்சரியமாய் இருந்தது எனக்கு.
எல்லாம் தான். விளக்கமும் தான்.
'இதுக்கு என்ன வழி?'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'அந்தக் குழாயை வெட்டவேண்
-டியது தான்'
'வெட்டியாச்சோ?'
'இப்ப 1மணித்தியாலமும் 38நிமிசமும்
ஆகுது' என்றார் சிரித்தபடி.
"இனி?"
'பிள்ளை பிறக்கிறதுக்கான Chance
ஐக் கேக்கிறீரோ?'

'மனித உடலின் அமைப்பு
இனப் பெருக்கத்திற்கு ஏதுவாக
அமைக்கப்பட்டிருக்கிறது.
ஒரு குழாயை வெட்டினால் மறு
குழாயிற் கூடாக கருக்கட்டல் நடக்கும்.
50% Chance உண்டு.
ஆனால் உம்மடை Wife வின்ரை
மற்றக்குழாயும் சற்றுப் பழுதடைந்துள்ளது.
இதனால் Chances 12% வீதம்தான்'.

நான் கேட்காமலே சொல்லி முடித்தார்.
எனக்கு ஏதோ வீதக் கணக்குப்
படிப்பிப்பது போல் பட்டது.
எனினும், இனி குழந்தை கிடைக்காது
என்பது மட்டும் ஏனோ தெளிவாய்த்
தெரிந்தது.
எவ்வளவு ஆர்வத்துடனும் ஆசையுடனும்
இருந்தாள் அவள்.
ஆண் குழந்தையே பிறக்குமெனத்
திடமாக நம்பினாள்.
பெயர் வைப்பது வரை அவள்
"மனக் கோட்டை கட்டியிருந்தாள்.
பிள்ளைக்கான துணிமணிகள்
சேகரிப்பதிலும் ஆர்வங்காட்டி
-யிருந்தாள்.
அவளுக்கு இப்பிடி நடந்திருக்கக்கூடாது
என மனம் சொல்லிற்று.
எப்படியெனினும் அவளைத் தேற்ற
வேண்டும் என்ற முடிவை
எடுத்துக் கொண்டேன்.
அவள் கண்விழிக்க இன்னும்
2மணி நேரமாவது செல்லும்
என்றாள் - தலையில் பெரிய
வெள்ளை நீத்துப்பெட்டி போன்ற
ஒன்றைக் "கிளிப்" பண்ணிக்
கொண்ட தாதி. அவள்
தான் அங்கு பெரியதாதி
யாக இருக்க வேண்டும்.
இல்லையெனின், அவளது குரலில்
இவ்வளவு உறுதி தொனித்திருக்
-காது.

என்னவளின் தலையை மட்டும்
ஒரு பாவியாய் வெளியே வருடிவிட்டு
Visiting hallக்கு வந்து
2சிகரட்டுகளை ஒன்றன் பின்
ஒன்றாகப் பற்றினேன்.

இரண்டு வாரங்கள் கழித்து
ஆஸ்பத்திரியிலிருந்து கைத்தாங்க
-லாக அவளை Taxiயில் ஏற்றி
வீட்டை நோக்கி வருகையில்-
'உங்களுக்கு ஒரு Present வாங்கி
வைச்சிருக்கிறேன் வீட்டை
வந்து பாருங்கோ' என்றேன்.
'என்னது' என்றாள் சொண்டு
களை நாக்கால் நனைத்தபடி
"வந்து பாருங்கோவன்"
Taxi வீடு வரும்வரை
அவள் துருவித்துருவிக் கேட்கவே
- இல்லை.
முன்னை மாதிரி இருந்திருந்தால்
இந்நேரம் நான் சொல்லியே
விட்டிருப்பேன். அவ்வளவுக்கு
என்னைத் துளைத் தெடுக்காமல்
விட்டிருக்க மாட்டாள்.
அவளது இந்த நிலைக்காக
நான் மிகவும் அனுதாபப்பட்
- டேன். இந்த 'அதிர்ச்சி'
அவளை நன்றாகப் பாதித்து
விட்டதை உணர்ந்தேன்.
வீட்டில் வந்து ஆற
அமர இருந்த பின்னர் தான்
கேட்டாள்.
"என்ன உங்கடை Present"
முன்னால் இருந்த room ஐச்
சுட்டிக் காட்டி 'அங்கை
போய்ப் பாருங்கோ' என்றேன்.
நானும் பின்னால் தொடர்ந்தேன்.
கறுப்பு வெள்ளையில் -
ஒரு பெரிய கடதாசிப் பெட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- டியின் மூலையில் அழகிய
சிறிய பூனைக்குட்டி உறங்கிக்
கொண்டிருந்தது.
'ஐயோ நல்ல வடிவப்பா'
என்றபடி.... மலர்ந்தபடி
பூனைக் குட்டியைத் தூக்கித்
தன் மார்போடு அணைத்துக்
கொண்டாள்.

முகத்தைக் கைகளால் பொத்
- திக் கொண்டு விரல் இடுக்கு
- களால் பார்த்தாலும்,
தன்னைப் பார்க்கிறார்கள்
என்பதைப் புரிந்து கொண்
- டான். தனது உணவைத்
தானே கேட்டுப் பெற்றுக்
கொண்டான்.

> **உற்பத்தியான கரு கருப்பையில் தங்கவில்லை. வேறொரு குழாயில் தங்கியிருந்தது. அந்தக்குழாய் கருவைத்தாங் கும் வல்லமையற்றது. அது வெடித்தால் நஞ்சாகும். நஞ்சினை இரத்தநாடிகள் உடலெங்கும் கொண்டு செல்லும். உடலே நஞ்சாகும். பின்னர் ஆள் தப்புவதற் கான Chance 0.01% தான்.**

அவளின் சந்தோஷத்தில் நானும்
என் தெரிவு பற்றிப் பெருமிதப்
பட்டுக் கொண்டேன்.
'இது கடுவனோ பெட்டையோ'
என்று கேட்டாள்.
"கடுவன் தான்" என்றேன்
சிரித்தபடி.
"என்னபேர் வைப்பம்?"
"சும்மா எல்லாரும் வைக்கி
- றது மாதிரி 'ஜிம்மி' 'ஜாக்கி'
'ரொமி' எண்டு வைக்காமல்
தமிழ்ப் பேரொண்டு வைப்பம்"
என்றேன்.
"ராஜா" என்று சொல்லிவிட்டு
செல்லமாய் அதன் முகத்தருகே
தன் முகத்தைக் கொண்டு
சென்றாள் அது 'மியாவ்'

என்றது தன் மழலையில் -
நாங்களிருவரும் எங்களை
மறந்து சிரித்தோம்.
"ராஜா" நாம் இருவர் என்ற நிலையை
நாம் மூவர் என்று மாற்றினான்.
துள்ளித் துள்ளி... அங்கும்
இங்கும் ஓடித் திரிந்தான்.
T. V. க்கு மேலே பாய்ந்து ஒரு
அழகிய மண் சிலையை
உடைத்து எங்களிடம்
தாறுமாறாக ஏச்சு வாங்கினான்.

பல ஏக்கங்களை இல்லாமற்
செய்தான்.

ஒருநாள் எங்கள் வீட்டுக்கு
ஒரு முதியவர் வந்தார்.
அவருக்கு மிருகங்களைப் பற்றி
நன்கு தெரியும். அவர்
"ராஜா"வை உற்று உற்றுப்
பார்த்தார். நாங்களும்,
அவரைப் பார்த்தோம்.
அவர் ராஜா வைத் தூக்கிக்
கால்களை அகட்டிப் பார்த்தார்.
'பெட்டைப் பூனைக்கு
ராஜா எண்டு பேர்
வைக்கலாமோ' என்றார்.
நாங்கள் அதிர்ந்து போய்
ஆளையாள் பார்த்தோம்.
'பெட்டைப் பூனையளை
வீட்டிலை வைச்சிருக்கக்
கூடாது' என்றார்.
நாங்கள் ஆளையாள்
பார்த்தோம். என்ன செய்
வதென்று தெரியவில்லை.
என்னவள் ஓடிச்சென்று
"ராஜா" வைத் தூக்கி அணைத்
- தபடி "ராணி" என்றாள்.
எனக்கு ஒரே சந்தோஷ
மாயிருந்தது.
பிரச்சினை ஏதும் இல்லாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தப் பிரச்சினை ஒரு சிறிய
அணைப்பில் பெயர் மாற்றத்
- தில் தீர்ந்து போனதை
வேடிக்கையாக நினைத்தேன்.

Party ஒன்றுக்குப் போய்
வந்தோம். நல்ல Moodல்
இருவரும் இருந்தோம்.
'கலவி' ஒன்று முடிந்து
போயிற்று.
அந்த நேரத்தில் முன்
room இலிருந்து "ராணி"

பெரிதாக அழுதுகொண்
- டிருந்தாள். சோம்பலைப்
பாராமல் எழுந்து
சென்று பார்த்தேன்.
நிலத்தில் புரண்டு புரண்டு
அழுதாள். என் கால்களை
தன் முழு உடம்பினாலும்
உரஞ்சித் தேய்த்தாள்.
உரத்த குரலில் 'மியாவ்
-வோய், மியாவ்வோய்'
என்று கத்தினாள்.
அவளது குரல் ஒரு மாதிரி
- யாய் இருந்தது.
"என்னப்பா நடந்தது ?"
என்றபடி என்னவளும்
வந்துவிட்டாள். அவளுக்குப்
பயமாய் இருந்தது. கிட்டப்
போய்த் தூக்க முயன்றாள்.
ராணி புரண்டு புரண்டு
கத்தினாள். எங்களுக்கு ஒன்றும்
புரியவில்லை.
ராணி தன் நாலுகால்களை
- யும் அகல விரித்து தன்
வயிறு முழுவதும் தரையில் படும்
படி உரஞ்சிக் கொண்டு
அரைந்தாள். எங்கள்
கண்களை நேரே பார்த்து
ஏதோ சொல்ல முனைந்தாள்.
அதே குரலில் கத்தினாள்.
இரவு பூராவும் கத்திக் கொண்டே
இருந்தாள்.
விடிந்ததும் நான் அந்த
முதியவரைக் கூட்டிக்கொண்டு
வந்தேன்.

ராணியை ஒரு தடவை பார்த்து
விட்டுச் சொன்னார்
"ராணி வயதுக்கு வந்து
விட்டாள்" என்று.
'இதுக்குத்தான் நான் அப்பவே
சொன்னனான் பெட்டைப்
பூனையளை வீட்டிலை வைச்சிருக்
- கப் படாது என்று' மேலும்
தொடர்ந்தார்.
நாங்கள் ஆளையாள் பார்தோம்.
'இதுக்கு என்ன செய்யிறது?'
என்றேன்.
'மனிசருக்குத் துணைமாதிரி
அதுகளுக்கும் துணைவேணும்
கலவி வேணும் பிள்ளைவேணும்
இனம் பெருக வேணும் எண்ட
நியதி இருக்குத் தம்பி.
இதைக் கொண்டுபோய்
காட்டிலை விடும். இல்லாட்
- டிக் "கருத்தடை" மாத்திரை
இருக்கு ஒரு மிருகவைத்
தியரிட்டைப் போய்க்
கேட்டாத் தருவார். அதைக்
குடுத்தீர் எண்டா இப்பிடிக்
கத்தாது. ஏக்கம் இருக்காது
இதுதான் வழி' என்றார்.
நாங்கள் ஆளையாள் பார்த்தோம்.

நான் ராணியைப் பார்த்தேன்.
அது ஏக்கத்துடன் என்னைப்
பார்த்தது.
நான் என்னவளைப் பார்த்தேன்.
அவளும் அதே மாதிரி
என்னைப் பார்ப்பது போல்
பட்டது.

மூக்குக் கண்ணாடிக்குக்
கீழால் என்னைப் பார்த்தபடி
குழிகைகளை என்னிடம்
தந்தார் அந்த மிருக
வைத்தியர்.
நான் அவரைப் பார்த்
தேன்.
'என்ன பாக்கிறீர்? இது
Powerfull ஆன Pills.
பிள்ளை உண்டாகிறதுக்கான
Chances ஐக் கேட்கிறீரோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

12% தான்' என்றார்.

Pills ஐக் குடுப்பதற்கு என்னவள்
தடுத்து விட்டாள்.
இருவருமாக ஒரு முடிவெடுத்தபின்,
ராணியைத் தூக்கிச் சென்று
காட்டில் விட்டுவிட்டு வந்தோம்.
நீண்ட நாட்களின் பின்
என்னவள் சாமிப் படத்தருகே
நீண்ட நேரம் நின்றிருந்தாள்.
தெரியாதவன் போலவும், நிலைமை
- யைச் சகஜ நிலைக்குக்கொண்டு
வருவதற்குமாய்
"உங்கை என்ன செய்யிறீர்"
என்று கேட்டேன்.
மிகத் தெளிவாக இயல்பாக
"வரம்" என்று மட்டும்
சொன்னாள்.

Company வேலைமுடிந்த களைப்பில்
Carல் வந்து கொண்டிருந்
-தேன்.
தூரத்தில் றோட்டுக் கரை
யோரத்தில் பற்றைக
- ளுக்கு அருகில் ஒரு
பூனை செத்துக் கிடந்தது.
கண்கள் இறுக மூடின.
கால்கள் 120 Kmphல்
Car ஐ இயக்கின.

"நீர் உங்கை என்ன செய்யிறீர்?"
"வரம்"
"நீங்கள் உங்கை என்ன செய்யிறியள்?"
"நீர் செய்யிற அதேவேலைதான்
ஆனா இது வீதக் கணக்கு"
என்றேன்.
என்னையுமறியாமல் என்கண்
கள் கலங்கின.
(யாவுமே கற்பனையல்ல)

## பாரிஸில் நாங்கள்

"அண்ணை, O F P R A றிஜெக்ற் பண்ணிப்போட்டுது.
சிங்கப்பூரில போய் றிஜிஸ்ரர் பண்ணி Wife ஐக் கூப்பிடுறதெண்டால் முன்கூட்டியே தங்களிட்டை பெமிஷன் எடுக்கவேணுமாம்"

"இப்ப என்ன செய்யப்போறீர்?"

"அவ, கொழும்பில நிக்கிறா. இனி ஏஜென்ஸிக்காலதான் கூப்பிடவேணும்"

"அநியாயக்காசல்லே.."

"நீங்கள் சொன்னதால தானே சிங்கப்பூருக்குப்போய் மாண்டனான்"

"ஓ, அப்ப பிரச்சினையில்லை. எனக்குப் பிறகு போனவையும் கனபேர் கூப்பிடிட்டினம்..."

"அதெல்லாம் எனக்குந்தெரியாது."

"என்ன சொல்லுறீர்!"

"நீங்கள் அட்வைஸ் பண்ணினதாலதான் நான் போனனான்."

"அதுக்கு !"

"இந்த நட்டத்தில அரைவாசி நீங்கள்தான் பொறுக்கவேணும்"

"! !"

- சௌமி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓசை

ஆசிரியர்
"ஓசை"
ஓசையின் ஆடி, புரட்டாதி பதிப்பை முதன் முறையாக வாசிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. தமிழ் மொழியையும் அதனோடு கூடிய பிரச்சினை களையும் வியாபாரப் பொருளாக்கி பணத்தைக் குறிக்கோளாகக் கொண்டு பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஐரோப்பிய நகரங்களில், ஆர்ப்பாட்டமின்றி ஓர் வித்தியாசமான தரமான மாற்றத்தை ஏற்படுத்த முனைந்திருக்கும் ஓசையை பாராட்டாமல் இருக்க முடியவில்லை. என்றாலும் இலக்கியம் என்பது அது எந்த வடிவில் அமைந் திருந்தாலும் (சிறுகதை, நாவல், சஞ்சிகை...) எல்லாத் தரப்பு மக்களையும் சென்றடையக் கூடியதாக இருக்கும் போதுதான் அந்த இலக்கிய வடிவம் முழுமை பெறுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அந்த வகையில் "ஓசை" ஓர் குறிப்பிட்ட மேல்மட்ட படித்த மக்களின் இலக்கிய தாகத்தை மட்டுமே நிறைவு செய்யக் கூடியதாக இருப்பது ஒரு குறையாகவும் தோன்று கிறது. எனினும் இந்நாட்டின் இயந்திரமயமான வாழ்க்கையில் இலக்கிய ரசனையை தொலைத்துவிட்ட என்னைப் போன்றவர்களுக்கு மீண்டும் அந்த ரசனையை உயிர்பெற்று எழச்செய்யும் ஆற்றல் ஓசைக்கு உண்டு. இத்தகைய ஆற்றலை ஓசைக்கு ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர் குழுவிற்கு எனது வாழ்த்துக்கள்.

சு. அசோகன்
சென்தெனிஸ், பிரான்ஸ்

அன்புடையீர்,
கலையின் பால் கொண்ட காதலால் அதன் தொண்டனாக வாழும் என்னையும் என்கலையார்வத்தையும் ஊக்குவிக்குமுகமாக, தங்களின் தரம்வாய்ந்த "ஓசை" ஆடி-புரட்டாதி இதழில் தங்களால் பிரசுரிக்கப்பட்டி ருந்த வாழ்த்துமடலுக்கு என் இதயபூர்வமான நன்றிகள்.

அன்புக்கலைஞன்
டி. கிறெகரி தங்கராஜா
"கலைக்கோயில்" 51, Rue Sadi Carnot, 93300 Aubervilliers, France.

ஆசிரியருக்கு,
வியட்நாமில் அந்த அழகிய அமைதியான கிராமத்தில் எரிகாயங்களுடன் ஓடிய அந்த அழகிய சிறுமி Phanthi kim phuc ஐ -நான் நேரில் சந்தித்து உரையாடிய அந்த பசுமையான நாள் தங்களின் ஓசையை பார்த்ததும் நினைவில் வந்தது. 1985 இல் மாஸ்கோவில் நடந்த சர்வதேச இளைஞர்-மாணவர் மகாநாட்டிலும் பெருவிழாவிலும் இலங்கையிலிருந்து சென்ற பத்திரிகையாளர் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் பெற்றிருந்தேன்.
அங்கு ஹோட்டல் கொஸ்மோஸில் நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு நீதிமன்றத்தில் -15 நாடுகள்-வாக்குமூலங்களைச் சமர்ப்பித்தன.
வியட்நாம் சார்பில் திரையிடப்பட்டது அக்குறுந்திரைப்படம். அந்தக் கிராமம் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்ட வேளையில் அச்சிறுமி எரிகாயங்களுடன் ஓடுகிறுள். அப்படத்தைப் பார்த்து நெஞ்சுருகிய வேளையில் -மேடையில் திரைப்பட திரை சுருண்டு கொண்டதும் அந்தச் சிறுமி தோன்றி-கைகளை உயர்த்தி குவித்து புன்னகை சிந்துகின்றுள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லோரும் ஓடிப்போய் அவளைச் சூழ்ந்து கொண்டு -கைகுலுக்கி வாழ்த்து கின்றோம்.
அந்தக்கரங்களில் தழும்புகள். நேபாம் குண்டுகளின் தீச்சுவாலைகள் ஏற்படுத்திய அடையாளங்கள். கரங்களில் குளிர்மை.



இச் சந்திப்புப் பற்றி பின்பு நான் வீரகேச ரியில் (பயணக்கதையில்) எழுதிய போது - பல வாசகர்கள் கண்கலங்கியதை அறிந் தேன்.
என் வாழ்வில் மறக்க முடியாத பெண் அவள். தன்னம்பிக்கை மிக்க வீரதேவ தை. இவளையே பின்னாளில் எனது "பு தர்க்காடுகளில்" சிறுகதையில் "வோல்கா" என்ற பாத்திரமாகச் சிருஷ்டித்தேன். இக் கதைக்கு தமிழ்க் கதைஞர் வட்டம் (தக வம்) பாராட்டுத் தெரிவித்திருந்தது. சகோதரி ரேணுகா தனஸ்கந்தா இதனை ஆங்கிலத்தில் " BUSHWALK" என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார். THE ISLA-ND பத்திரிகையில் BUSHWALK பிரசுரமா கியது. அந்த வியட்நாம் சிறுமி ( இன்றுயு வதி) நெஞ்சமதில் நிலைத்தவள் -
எனினும் - எங்கள் இலங்கையில் இப் படி எத்தனை பேர் -எண்ணிக்கையில் இல்லை !
கொக்கட்டிச்சோலை கிழக்கிலங்கைக் கிராமத்தில் இராணுவ அரக்கர்கள் பல ரைக் கொன்றழித்த வேளையில் -ஒரு குழந்தை எரிகாயங்களுடன் "தண்ணீர் தண்ணீர்" என்று முனகியதாக -பின்பு விசாரணைக்குழுவில் சாட்சியம் சமர்ப்பிக் கப் பட்டது.

இன்று எமது தாயகமும் ஒரு வியட்நாம் தான். இங்கும் பல PHANTH-IKIMPHUC க்கள்..

லெ. முருகபூபதி


அடுத்த இதழில்...

நேர்காணல்

ஐந்தாண்டுகளுக்கும் மேலாக, தொடராக நோர்வேயிலிருந்து வெளிவரும் கலை இலக்கிய அரசியல் மாத இதழ்

சுவடுகளுடன்..

சந்திப்பு :"ஓசை"




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## ○ புகலிடப் பெண்கள் கவிதைகள் ○

'சொல்லாத சேதிகள்' என்ற கவிதைத் தொகுப்பு ஈழத்துப் பெண் எழுத்தாளர்களை மிகவும் ஊக்குவித்தது. அதிற் சமகால ஈழத்தமிழ்க் கவிஞர்களுள் முக்கியமான சிலரது கவிதைகளும் உள்ளடங்கியிருந்தன. அதில் எழுதினோரில் முதன்மையான கவிஞரான சிவரமணி இன்று நம்மிடையே இல்லை. அவர் தானாகவே பிரிந்து சென்றார். செல்வி என்ற மனவுறுதிமிக்க இளம் எழுத்தாளர் இரண்டு வருடங்கள் முன் கடத்திச் செல்லப்பட்டார். அவரைக்கடத்திச் சென்றவர்கள் இதுவரை ஒரு விளக்கத்தையும் தரவில்லை. அவர் நம்மிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டுவிட்டார் என்றே பரவலாக நம்பப்படுகின்றது. 'சொல்லாத சேதிகளிற்' தம்கவிதைகளைக் கண்டவர்களில் எல்லோருமே இன்று எழுதுவதாகத் தெரியவில்லை.

# மறையாத மறுபாதி

- சிவசேகரம் -



நல்ல கவிதைகளைத்தந்த ஊர்வசியின் எழுத்துக்களையோ ஔவையின் எழுத்துக்களையோ நான் அண்மையிற் காணவில்லை. சமூகப்பிரக்ஞை மிக்க சன்மார்க்காவும், அதிகம் எழுதுவதாகத் தெரியவில்லை. மைத்ரேயியின் எழுத்துக்கள் சில அண்மைக்காலங்களிற் கண்ணிற்பட்டன. பெண் எழுத்தாளர்களின் பலவேறு பிரச்சனைகள், எழுத்தாற்றல் மிக்க நல்ல நல்ல படைப்பாளிகளைத் தமிழ் இலக்கியத்துக்கு மறுத்துவிட்டன. ஆயினும் ஈழத்தமிழரைப் புலம்பெயரச் செய்த அரசியல் நெருக்கடியும் புதிய சூழலும் புதிய எழுத்தாளர்களை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளன. புதிய அனுபவங்களும் அயல்மொழிப் பரிச்சியமின்மையின் காரணமான குறைபாடுகளுடன் வேறுபட்ட கலைவடிவங்கள் பற்றியும் கருத்துவெளிப்பாடு பற்றியும் பெறப்பட்ட அறிவும் பழம்மரபைப்பேண இயலாமைக்கும் புதிய சூழலினைக்கிரகித்துப் பழக்கப்படுத்துவதில் உள்ள இடர்ப்பாட்டுக்குமிடையிலான முரண்பாடும் புதிய சிந்தனைகளையும் வேறுபட்ட வகையிலான ஆக்கங்களையும் வழங்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்ப்பைப் புலம்பெயர்ந்தவர்களிடையே கலையுணர்வுள்ளவர்க்கு அளித்துள்ளன. ஆயினும் ஆர்வமுள்ள அளவுக்கு ஆற்றலை வளர்த்தெடுக்கும் பக்குவம் பல படைப்பாளிகளிடம் ஏற்படவில்லை. அயற்சுற்றாடலிலும் தாய்மொழியிலேயே செயற்படும் தேவை சுயஅடையாளத்தேடல் காரணமாகவும் அயல் மண்ணில் எதிர்நோக்கும் நிராகரிப்பின் காரணமாகவும் அனைத்திற்கும் மேலாகப்பழக்கங்காரணமாகவும் இன்னும் ஒரு தலைமுறைக்கேனும் தொடரும் என்றே தெரிகிறது. ஆயினும் இலக்கியத்துறையைப் பொறுத்தவரை, உன்னதமான படைப்பாளிகளை புலம்பெயர்ந்த சமுதாயம் இன்னமும் உருவாக்கவில்லை. புலம்பெயர்ந்த சூழலில் எழுதுவோர் பலர் புதுக்கவிதையையே நாடுவதற்கான காரணம் அவர்களுக்கு வேறு எதையுமே எழுத இயலாமைதான் என்ற கருத்துடன் நான் உடன்படுகின்றேன். பொதுவாக விமர்சனம் என்பது உச்சி குளிர்த்தும் முகத்துதியாக இல்லாத பட்சத்தில் காழ்ப்புணர்வு காரணமான கண்டனமாகவே இருக்கிறது. நல்ல சிறு கதைகளை இடையிடையே காண்கிறேன். ஆயினும் நல்ல சிறுகதை இலக்கியம் புலம்பெயர்ந்த தமிழரிடையே இன்னமும் உருவாகவில்லை. நாடகங்கள் என்று ஓரிரண்டு படைப்புக்களை வாசிக்கிறேன். அவை ஒரு நாடக மரபாக வளரமுடியாது திணறுகின்றன. ஏராளமான புதுக்கவிதைகளிடையே கவித்துவமிக்க ஓரிருவரது படைப்புக்கள் சுடருகின்றன. ஆயினும் புலம் பெயர்ந்தோர் கவிதை மிகவும் பலவீனமான நிலையிலேயே உள்ளது. மரபு சார்ந்து எழுதுவதாக நினைப்போரின் படைப்புக்களில் யாப்பிலக்கண அறிவின் போதாமையை விடமோசமாகச் சந்த உணர்வின்மை தென்படுகின்றது. விறைப்பான உயிரற்ற அரைகுறை வாக்கியங்களெல்லாம் தமிழ்க்கவிதைகளாக உலாவருகின்ற ஒரு அவலம் புலம் பெயர்ந்தோர் இலக்கியத்திற் தொடர்கின்றது. இந்தப் பின்னணியிலேயே புலம் பெயர்ந்தவர்களது படைப்புக்களை மதிப்பிடவேண்டிஇருக்கிறது. 'மறையாத மறுபாதி' ஐரோப்பாவில் வாழும் பெண்கள் சிலரது கவிதைகளை உள்ளடக்கிய ஒரு தொகுதி. 'சொல்லாத சேதிகளின்' சுவட்டில் வருவதாகச் சொல்லப்படினும் முன்னையதிற் கண்டதைவிடக் காத்திரமான முறையில் உரிமைக்குரல் எழுப்புகிற சில கவிதைகளை அது உள்ளடக்குகிறது. அதே வேளை, தமிழ்ப் புதுக்கவிதையின் பலவீனம் நூல் முழுமையிலும்வெவ்வேறு அளவுகளிற் பரவியுள்ளது. இவ்வகையான குறைபாடுகள் தமிழ்க்கவிதைகளுடன் போதியளவு பரிச்சயமின்மை, கவிதை விமர்சனங்கள் போதியளவு இல்லாமை, கவிதைபற்றிய தெளிவீனமான புரிதல் போன்றபல காரணங்களாலானவை. ஆயினும் இத்தொகுதியின் முக்கியத்துவம், இதுவரை ஈழத்தமிழ் பெண் எழுத்தாளர்கள் எழுதத்தயங்கிய விஷயங்களையும், எழுப்பத்தவறிய கேள்விகளையும் இதிலுள்ள கவிதைகள் எழுப்புவதாகும். இதில் எழுதியுள்ள பெண்கள் அனைவரும் அரசியல் ரீதியாகவோ பெண்ணிலைவாதத் தொடர்பாகவோ ஒருமித்த பார்வையுடையோரல்லர். ஆயினும் பெண்களின் ஒடுக்குமுறைக்கெதிரான ஒருமித்த எழுச்சிக்குரலாக அவர்களது ஆக்கங்கள் ஒன்றுபடுகின்றன. ஒவ்வொரு படைப்பாளியின் பார்வையின் விரிவும், ஆழமும் அவரவரது சமுதாய உணர்வின் வளர்ச்சியாலும் அனுபவங்களினின்று விருத்திபெற்ற அறிவாலும் நிர்ணயமாகின்றன. அவர்கள் அனைவருமே ஆணாதிக்கத்தின் கொடுமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை நேரடியாவும் மறைமுகமாகவும் கண்டறிந்தமையே அவர்களது படைப்பின் ஒருமைக்குக் காரணமாகின்றது. பெண்களின் பிரச்சனைகள் பற்றிப் பெண்கள் தம்மிடையே பேசுவதையும் சிலர் விரும்புவதில்லை. கருத்தரங்குகளில் அவர்கள் ஆண்கள் மத்தியில் பேச வாய்திறந்தால் சகல வர்ண மரபுவாதிகளும் (செஞ்சட்டையாற் தமது பழமை வாதத்தை மூட முனைவோர் உட்பட) அவர்களது வாயை அடைக்கப் போட்டியிடுகிறார்கள். சாதிப்பிரச்சனை தொடர்பாகவோ தேசிய விடுதலை தொடர்பாகவோ இனவேறிக்கும் நிறவெறிக்கும் எதிரான போராட்டங்கள் தொடர்பாகவோ சில முற்போக்குவாதிகள் காட்டும் சகிப்புத்தன்மை பெண்விடுதலை தொடர்பாக காட்டப்படுவதில்லை. பெண்விடுதலை என்ற பெயரில் வெளியாகும் பிற்போக்குவாதச் சிந்தனைகளை எதிர்க்கும் போக்கிற் பெண்ணுரிமையின் குரலை நிசப்திக்க முனைவது எவ்வகையிலும் முற்போக்கான காரியமில்லை. 'மறையாத மறுபாதியில் ' எழுதிய பெண்கள் பலர் இத்தகைய பேச்சுரிமை மறுப்புக்கு முகங்கொடுத்தவர்கள் என்பதை மல்லிகாவின் முதலாவது கவிதையான "நாங்களும் மனிதர்கள்தான்" நினைவூட்டியது. கோசல்யாவின் "ஒருசத்தியம்" மல்லிகாவின் "ஏனிந்த வித்தியாசங்கள்" கல்யாணியின் "பலமான கேள்விகள்" போன்ற கவிதைகள் இளம்பருவத்திலேயே பெண்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள் பற்றிக் கண்டனக் கேள்வி எழுப்புகின்றன. பிற கவிதைகளிற் பல சீதனமுறையையும் வற்புறுத்திப் பெண்களைக்கட்டிக்கொடுக்கும் வழக்கத்தையும் சாடுகின்றன. ஒருசில அதற்குமப்பாற் சென்று ஆணாதிக்க மனோபாவத்திற்கே சவால் விடுகின்றன. "மணமில்லா விட்டாலென்ன மாய்ந்துவிட மாட்டோம் நாம்" என்ற கருணாவின் வரிகளும்

"உயிர்தப்ப வேண்டுமானால்
ஊரைவிட்டு ஓடுவோம்
ஆனால் விலைகொடுத்து
வாங்கியவனுடன் மட்டும்
ஓட நான் தயாரில்லை"
என்ற உமையாளின் பிரகடனமும்

"சீதனத்திற்கு
வழியில்லாததால்
எம்மைச்சுற்றி
உரஞ்சிப்பார்க்கும்
இளைஞரில்
ஒருவன்கூட
புருசனாய் வர
தகுதி இழந்தான்"

என்ற ரஞ்சனியின் ஏளனமும்

"விலைகளை நிறுத்தி
விருப்புக்களுக்கு

நூலினைப் பெற்றுக்கொள்ள..
"EXIL"
*27, Rue Jean Moulin,*
*92400 Courbevoie, Frane.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனியாவது
இடங்கொடு"

என்று பாமினி விடுக்கும் சவாலும்
"வாருங்கள்
மாப்பிள்ளையே
நம்
வருங்கால வாழ்வு பற்றி
வாதிடுவோம்"

என்று தன்னோடு வாழவந்தவரை வாதுக்கழைக்கும் நிருபாவின் குத்தலான வார்த்தைகளும் சொல்ல முனைவது என்ன?
குமர்கள் கரைசேர்வதும், விதவை வாழ்விழந்தவளாவதும், கணவனால் நிராகரிக்கப்பட்டவள் வாழாவெட்டியாவதும் நமது மொழிவழக்கிலே பொதிந்துள்ள ஆணாதிக்கத்தின் ஆழ்ந்த சுவடுகள். "சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டு" சொந்தமும் உறவும் நிர்ப்பந்திக்கும் திருமணத்தின் அவசியத்தையே கேள்விக்குட்படுத்தும் இப்பெண்களது தைரியம் மனதுக்கு உட்சாகமூட்டுகிறது. திருமணம் அவசியமா என்ற கேள்வியும் அது அவசியமாயின் அந்த உறவு சமத்துவம், பரஸ்பர மரியாதை, பரஸ்பர விருப்பு, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே அமையக்கூடும் என்ற பதிலும் இவர்களது கவிதைகளிற் தொக்கி நிற்கின்றன.

ஆண்கள் பெண்களுக்குத் தரும் அடிஉதைகள், நிந்தனைகள் போன்றவை திருமணம் என்ற உறவுக்கு உள்ளேயே நியாயப் படுத்தப்படுவதையும் திருமணத்துக்கு உள்ளும் வெளியிலும் பெண்கள் ஆண்களது போகப் பொருட்களாகவே காணப்படுவதையும் சாடுகிற வரிகள் பல. உதாரணமாக,

"எங்களைப் பாருங்கள்
எங்கள்
சேலையையும் ரவிக்கையையும் அல்ல
எமது உணர்ச்சிகளை
எங்கள்
முகத்தையும் மார்பையுமல்ல
மனக்குமுறல்களை"
*-கல்யாணி (சாம்பற் பூச்சிகள்)*

"காரணமின்றி என்மீது
தொடரப்பட்ட
வன்முறைகள்
அவள்மீதும்
தொடரப்பட நான்
அனுமதிக்கப்போவதில்லை"
*-பாமினி (பிரகடனம்)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தேசங்கள் தாண்டினும்
வாழ்நிலை மாறினும்
அகதியாகவும் பெண்ணாகவும்
என்னைக் கண்கள் நோக்கிய வண்ணமே"
*-பிரியதர்சினி (பெண்ணாக ஒரு அகதி)*

பெண்கள் மத்தியிற் பெண்மை பற்றிய பழமைவாதக் கோட்பாடுகளைக் கேள்விக்குட்படுத்தும் கவிதைகள், அயல்நாடு வந்தும் இன்னமும் பழைய சூழலிலேயே தம்மைச் சிறைப்படுத்தியுள்ள மனங்களைத் திறக்கக் கோருகிற கவிதைகள் என்று பலவேறு கோணங்களினின்று பெண்ணுரிமைக்குரல் எழும்புகின்றது. அதே வேளை, நிறவெறிக்கு எதிரான கிளர்வுகளும் மனித சமத்துவம் பற்றிய குரல்களும் சேர்ந்தே ஒலிக்கின்றன.

"அம்மா
மனிதனை மனிதனாகப்
பார்க்க முதலில்
பழகிக்கொள்வோம்"
*-உமையாள் (அம்மாவிற்கு)*

"ஏன் இங்கு வந்தாய்?
எட்டி நில் கறுப்பனே!"
*-நிருபா (அப்பிள் மரத்தடியில் மாங்காய்களைத் தேடி)*

இந்த வகையில் ஈழத்தமிழ் பெண்ணுரிமைக்கவிதைகள் கடந்தசில ஆண்டுகளிற் தம் செயற்பரப்பை மிகவும் விசாலித்துள்ளன. ஆயினும் இவை தொட வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. பெண்களின் பாலுணர்வு பற்றிய தயக்கங்கள் சமுதாய நிர்ப்பந்தத்தாலானவை. ஒரு பெண் தன் காதல் பற்றிப் பேசுவதே 'அடக்கமற்றவள்' 'ஆட்டக்காரி' போன்ற பட்டங்களை சம்பாதிக்கப் போதுமானது. இந்நிலையில் பெண்களின் பாலுணர்வு தொடர்பான மரபு சார்ந்த பார்வைகளைக் கேள்விக்குட்படுத்துவது சிரமமானதே. ஒழுக்கம், கற்புப் போன்ற விஷயங்களில் உள்ள மனத்தடைகளும் அச்சங்களும், பாசாங்குகளும் முதலில் களையப்படல்வேண்டும். பெண்மை என்றால் என்ன என்ற கேள்விக்குப் புதிய விடைகள் தேவைப்படுகின்றன. கருத்தடை பற்றியும், கருக்கலைப்புப்பற்றியும் (அண்மையிற் சில செஞ்சட்டைப் பத்தாம் பசலிகள் எழுப்பிய கேள்விகளின் பின்னணியிற்) கடுமையான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. ஆக்க இலக்கியங்கள் இவற்றைக் கையாள்வதன்மூலம் இவை பற்றிய புதிய சமுதாய பிரக்ஞையை ஊட்ட முடியும். அனைத்திலும் முக்கியமாக பெண்ணுரிமை பற்றிய ஒரு உறுதியான நிலைப்பாடற்ற எந்த ஆணுமே ஒரு முற்போக்குவாதியல்ல என்ற கருத்து இத்தொகுதியில் வந்துள்ளதைவிட இன்னமும் தெளிவாகவும் வலிமையுடனும் முன்வைக்கப்படல்வேண்டும்.

பெண்கள் தேசிய இனஒடுக்கல், சாதி ஒடுக்கல், நிறவெறி, மதவெறி போன்று வர்க்க சமுதாயத்தின் சகல ஒடுக்குமுறைகட்கும், அனைத்திலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியமாக வர்க்கச்சுரண்டலுக்கும் ஏகாதிபத்திய ஒடுக்கலுக்கும் எதிராகக்கு ரல் எழுப்பவேண்டும். சுற்றாடல், யுத்தம், போன்றன வெறுமனே ஆண்க ளின் ஆளுமைக்குட்பட்டனவல்ல. மல்லிகாவின் கவிதையில் இந்த விழிப்பு ணர்வு தென்படுகின்றது. பெண்கள் ஆணாதிக்கத்திற்கு எதிராக மட்டுமே குரலெழுப்பவேண்டும் என்ற போக்கு ஒரு சிறுபான்மையான பெண்ணிலை வாதப் போக்காகும். சகல அடக்குமுறைகட்கும் சுரண்டலுக்குமெதிராகப் போராடுவதில் ஆணுக்குச் சமமாக மட்டுமின்றி ஆணைவிட அதிகளவில் சுரண்டப்பட்டு ஒடுக்கப்படுவதால், ஆணைவிட அதிகமாகவும் போராட வேண்டிய தேவை பெண்ணுக்கு உண்டு. இதற்கான உரிமையை அவர்கள் எந்த ஆணிடமும் பெறவேண்டிய அவசியமில்லை. கவிதைகளின் அமைப்புத் தொடர்பாக: விமர்சிப்பதானால் இதுவரை தமிழிற் புதுக்கவிதையின் குறை பாடுகள் தொடர்பாகச் சொன்னவற்றையே மீண்டும் வலியுறுத்த வேண்டிவ ரும். இறுக்கமின்மை, ஓசைநயமின்மை, என்பன பற்றிய கவலை பெரும்பா லான புதுக்கவிதையாளரிடம் இல்லை. கவிதையில் வரும் வாக்கிய அமைப்பு எவ்வாறு உரைநடையினின்று வேறுபடுகின்றது என்பது பற்றிய தெளிவீனம் இன்னமும் புதுக்கவிதையை வாட்டுகிறது. நம் ஒவ்வொருவருள்ளும் ஒருகவி ஞர் உள்ளார். கவிதையுடனான பரிச்சயம், திறந்த மனப்பான்மை, செய் நேர்த்தி போன்றன அவரை வெளிக்கொணர்கின்றன. பட்டை தீட்டாத முரட்டு வைரம் ஒளிர்வதில்லை. கவித்துவம் என்பது கவிதையின் ஒரு கூறு மட்டுமல்ல நேரடியாகப் பேசும் பாங்கு ஈழத்துத் தமிழ்க் கவிதையின் வலி மையாக சிலகாலம் முன்பு அடையாளங்காணப்பட்டது. அதுவே கவித்துவம் என்று கருதுகிற நிலையிற் சிலர் உள்ளனர். எந்த எழுத்துவடிவத்தையும் விடக் கவிதையே மொழியின் சாத்தியப்பாடுகளை அதிகளவில் பரிசீலிக்க வல்லது. இந்த ஆற்றலைப் புதுக்கவிதைமூலம் மிகவும் விருத்தி செய்யமுடியும். எனினும் தமிழிற் பொதுவாக புதுக்கவிதை என்பது யாப்பு இலக்கண விதிக ளினின்று தப்பி ஓடும் ஒரு வழியாகவன்றி வேறெதுமாக இல்லை. இக் குறைபாடின் விளைவுகள் இத்தொகுதியில் உள்ள கவிதைகளையும் தொடா மலில்லை.

இங்கு சில பலவீனங்களின் உதாரணங்களைச் சுட்டிக்காட்டு முன், இவை குறிப்பிடப்படும் கவிதைகட்கு மட்டுமே உரியனவல்ல என்பதையும் மேற்கினின்று வரும் தமிழ்க் கவிதையாக்கங்களில் இவற்றைவிடப் பாரிய குறைபாடுகளைக் காணலாம் என்பதையும் கூறுவது அவசியம்.

மல்லிகாவின் "நாங்களும் மனிதர் தான்" கட்டுரைப்பாங்காகவே தெரிகி றது. ஆங்கிலத்தில் 'மரபு சார்ந்த' வடிவில் அமைந்த செய்யுளின் தமிழாக்கம் என்பதால் இந்தப் பலவீனமோ தெரியவில்லை. "ஏனிந்த வித்தியாசங்கள் " எடுப்பாகவே தொடங்கி முடிவிற் பலவீனமான ஒரு போதனையுரைபோல நலிந்து விடுகிறது.

கோசல்யா சொர்ணலிங்கத்தின் கவிதைகளின் வரிப்பிரிப்பு தமிழ்ப் புதுக்கவிதையின் விடுபடாத புதிர்களில் ஒன்றாக இருப்பது வருந்தத்தக்கது.
வாலிபம்
வரவேற்றது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனுடைய
எல்லாவற்றுக்குமே
விலை சொன்னது...
இவ்வாறான வரி பிரிப்புக்கள், தனித்து வரும் சொற்களின் மீதான அழுத்தத்தை இல்லாதொழிக்கின்றன. அவரது "ஆடலின் அர்த்தங்களில்"
சிவன்
அவன் பெருமான்
ஆடியே ஆடல்....
அவை தீர்த்தாக
ஐதீக அர்த்தங்கள்

என்ற வரிகளில் வரும் சிவன் எதன் படிமம் என்பதும் கவிதை எதைப்பற்றியது என்பதும் எனக்கு விளங்க மிகவும் சிரமமாவே உள்ளன.

கல்யாணியின் கவிதைகளில் வரும் படிமங்கள் மிகவும் வலியவை:
"மூக்குச்சிந்துவதற்காக
எங்கள்
மார்புக்கச்சைகளை
அவிழ்த்துக் கொள்பவர்கள்"

"இத்தனை விஞ்ஞான வெய்யிலிலும்
குலமானத்துக்காகக் குடைபிடிப்பது"

"அடுப்பங்கரையிற்
சாம்பற் பூச்சிகளாய்"

ஆயினும் இப்படிமங்களின் வலிமை ஈற்றடிகளிற் தளர்ந்து அவை கவித்துவமற்ற சொற்றொடர்களாக வருவது கவிதையை மிகவும் பலவீனப் படுத்துகிறது. :

"உங்கள்
வறண்டுபோன அதட்டல்களையும்
நொருங்கிப்போன கட்டளைகளையும்
நிறைவேற்றும் மனிதப் பிணமாக
வாழாமல் "
இங்கே எதிர்ப்புணர்வைக் கண்டிப்பாகச் சொல்லவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கவிதைக்கு எதிரியாகி விடுகிறது.

நிருபாவின் கிண்டல் அமைதியானது. ஆயினும் இடையிடையே வரும் சில சொற்றொடர்கள் "சூறாவளி அமைப்பு முறைகள்" வே(ை)சதாரி போன்றன) வலிந்து திணிக்கப்பட்ட தன்மையுடன் கவிதைச் சட்டத்தை இடறுகின்றன. ஓரிரு இடங்களில் வரும் தெளிவற்ற வாக்கியங்கள் ("யதார்த்தங்களைக் குருடராக்கி விட்டடதாய் நம்பினர் !!"போன்றன) பற்றிக் கூடியகவனங் காட்டியிருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாம். வரவேற்க வேண்டிய துணிச்சல் மிக்க வார்த்தைகள் இவைபோல் இன்னமும் தமிழுக்குத்தேவை.

பாமினியின் ஒரு கவிதையில் வரும் இயற்கை வர்ணனை அழகாகவுள் ளது. ஆயினும் அழகான தன் ஊரிலிருந்து பிரிய நேர்ந்ததைக் கூறும் வரிகள்
"இவையனைத்தும்
ஒருங்கே கொண்ட
கரையோரத் தீவுகளைப்
பிரிய நேர்ந்தது"

என்று வரும்போது கவிதை திடீரென்று காணாமற்போய் விடுகின்றது. "ஆண் " "போலி எழுதுகோல்கள் " ஆகியவற்றில் வரும் வரிகளில் கவித்துவம் பின் கதிரைகளில் அமர்ந்து கொள்கிறது.

மைத்ரேயின் "நாமும் மனிதராய்" கவிதையை வாசிக்கும்போது இரண்டு ஆக்கங்கள் ஒட்டப்பட்டுள்ளது போல ஒரு தோற்றம் மனதில் எழுந்தது. முன்பகுதியில் வரம் இயற்கையின் வர்ணஜாலம் தோழியின் உருமாற்றத்துடன் உறவு காட்டுகிறது. கவிதையின் மிகுதியோ வேறு திசையிற் பிரயாணஞ் செய்கிறது.
மற்றக்கவிஞர்களின் ஆக்கங்களில் உள்ள குறைபாடுகளும் பொதுவாக முன்கூறிய வகைக்குட்பட்டனவாகவே உள்ளன. இவையெல்லாம் ஆற்றலின் மையாலோ கவித்துவமான உணர்வின்மையாலோ ஏற்பட்டவையல்ல. கவிதைகளைச் சுவைக்கவும் விமர்சிக்கவும் மெருகிடவும், புலம் பெயர்ந்த கவிஞர்களுக்குள்ள வாய்ப்புக்கள் குறைவு. சமகாலக் கவிஞர் பலரது குறை பாட்டுக்குக் காரணம் தமது படைப்புக்கள் பற்றிய சுயதிருப்தி. நான் அறிந்த புலம்பெயர்ந்த கவிஞர்கள் பலர் இதற்குப் பலியானவர்கள் போலவே தெரிகிறது. "மறையாத மறுபாதியில்" வந்துள்ள கவிதைகள் ஆளுக்காள் பாராட்டுத் தெரிவிக்கும் சில ஆண்களுடைய ஆக்கங்களை விட ஆழமான உள்ளடக்கத்தை உடையன. பல ஊர்வசிகளும் சிவரமணிகளும் மறைவாகவே இருக்கிறார்கள். "மறையாத மறுபாதியின்" பிரசுரம் அவர்களையும் ஊக்குவித்து வெளிக்கொணரும் என நம்புகிறேன். இத்தொகுதியில் வரும் கவிதைகள் போல எந்த ஆணாலும் எழுத முடியாது. ஒடுக்கலுக்கு எதிரான பெண்களின் குரல் அவர்கள் மூலமே முழுமையுடன் வெளிவரமுடியும். சீதைக்கும் அகலிகைக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் புதிய சீதைகளும் அகலிகைகளும் போர்க்குரல் எழுப்பாமற் பெண்விடுதலை சாத்தியப்படாது. இந்த இலக்கிய முயற்சி இன்னும் வலிய படைப்புகட்கு வழி வகுக்க வேண் டும். அதற்கு உதவுவது ஒவ்வொரு முற்போக்குவாதியினதும் கடமை.
சி. சிவசேகரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- சௌமி -

O

நோள்மூட்டு விண்விண்ணென்று வலித்தது. முழங்காற்சிரட்டைகள் திருப்பமுடியாத அளவுக்கு நோவெடுத்தது. நித்திரையில்லாது குழிவிழுந்த கண்கள் அடிக்கடி மூடித்திறந்தன.

ஒரு நாளில் மூன்று மணித்தியாலங்கள் மட்டும் நித்திரைகொண்டால் உடம்பு எப்படி ஆகும் ?

என்ன ! இன்னும் ரெண்டு மாதம் தானே ! ஒருமாதிரிப்பல்லைக்கடிச்சுக்கொண்டால் எல்லாஞ் சரியாகிவிடும்.

இந்த மூத்தக்காவை மட்டும் ஒப்பேத்திவிட்டிட்டால் ஓரளவுக்குப்பிரச்சினை தீர்ந்ததுமாதிரி.

எட்டுலட்சமல்லே கேட்கிறாங்கள்.
இப்பிடி இரக்கமில்லாமல் கேட்கிறவங்கள் எப்பிடித்தான் அக்காவைச் சந்தோசமாய் வைச்சிருக்கப்போறாங்களோ ?

சரி, அக்காவும் விரும்பேக்க இனி என்னசெய்யிறது !

ஒரு மாதிரி பதினெட்டு மாசம் கட்டியாச்சு. இன்னும் ரெண்டு... ரெண்டேரெண்டு மாசம் தான்.

ஒருவேளை மற்றஇடங்களில நடக்கிறமாரி குணமண்ணையும் ஏமாத்திப்போடுவரோ !

சீ.. அந்தாள் பிழைவிடாது. பிள்ளை குட்டிக்காரன். நேர்மையான மனுஷன். எவ்வளவு சீட்டுக்கள் பிடிக்கிறவர். இவ்வளவு காலத்துக்க யாரையாவது ஏமாத்தியிருக்கே ?

எப்பவும் அலைபாயிற புத்திதான்.

போனமாசம் எடுக்கலாமெண்டால் பன்ரெண்டாயிரம் பிராங் கழிவு.
இந்தமுறையும் நாதன் எப்பிடியும் போட்டிக்குக்கேப்பான்.
அவனும் பாவம் தானே. எடுக்கட்டும்..

**பாரிஸில் நாங்கள்**

அடுத்தமாதம்.
அடுத்த மாதமும் வந்தது.

"குணமண்ணை தலைமறைவாம்.
பாரிஸில ஆறுலட்சம் பிராங்குக்கு மேல அவருக்குக் கடனாம் !"


ஐயோ...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெப்போலியன் கனவு நனவாகிறது..




**1802**ல் நெப்போலியனின் கனவாகிய சுரங்கத்திட்டம் நிறைவேறுகிறது. பிரான்சுக்கும் பிரித்தானியாவுக்குமான இத்தொடர்புடன், பிரித்தானியா ஒரு தீவு என்ற நிலை மாறப்போகிறது. 1994 வைகாசி 6ம் திகதி இரண்டாவது எலிஸபெத் மகாராணியும், பிரான்சுவா மித்திரோனும் அதிவேக இரயிலான TGV இரயிலைச் செலுத்திச்செல்ல, இருநாட்டினரும் தங்கள் வெற்றியைப் பெருமிதமாகக் கொண்டாடுவர்.

இரு அரசாங்கங்களும் இம்முதலீட்டில் ஒத்துக் கொண்டாலும் பண உதவியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. 1994-96 ம் ஆண்டுகளின் வருமானம் குறைவாக இருப்பதாலும், உபகரணங்கள் பெறுவதில் தாமதமும், அதன் பெறுமதி அதிகமாக இருப்பதாலும் 1998 ம் ஆண்டுவரை மேலும் 1000 கோடி பிராங்குகள் ( 100 Billian francs -டொலர் 17. 2 Billian ) தேவைப்படுகின்றது. அது ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செலவில் இரட்டி மடங்காகவும் தற்பொழுது கைவசம் இருப்பதில் 100 கோடி பிராங்குகள் அதிகமாகவும் உள்ளது. இந்நிதிக் குறைபாட்டை 200 வங்கித் தொழில் ஸ்தாபனக் குழு மூலமும் எதிர்வரும் வருடத்தின் புது மொத்த ஒதுக்கீட்டுப் பண மூலமும் பெறலாம் என்று கருதப்படுகின்றது.

ஐரோப்பிய சுரங்கப் பாதைக்குழுவும் Trans Manch Link ம் இணைந்து இச்சுரங்கப்பாதை செய்து முடிப்பதில் இருந்த தடையை சென்ற ஆடி மாதம் ஓரளவு நீக்கி உள்ளது. Trans Manch Link புதிதாகச் செய்த வடிவமைப்பு மாற்றத்தினால் ஏற்பட்ட மேலதிக செலவு 80 கோடி பிராங்குகளையும் (8 Billian Francs -டொலர் 1 4 Billian ) திரும்பவும் தரும்படி கேட்டிருந்தது. இதில் 20. 35 கோடி பிராங்குகளையும் ஐரோப்பிய சுரங்கப்பாதைக்குழு கொடுக்க வேண்டுமெனப் பணிக்கப்பட்டது. 1995 ம் ஆண்டு எஞ்சியது போக மிகுதிப் பணமும் கொடுக்கப்படும்.

ஐரோப்பிய சுரங்கப்பாதை உத்தியோகத்தரின் கருத்துப்படி 1997 ல் பிரயாணிகள் சேவை 50 வீதமும் பொருட்கள் ஏற்றுமதிச் சேவை 30 வீதமுமாக இருக்கும் என நம்புகின்றனர். இலண்டனிலிருந்து பரிஸிற்கு கடற்கப்பல் மூலமும், ஆகாய விமானம் மூலமும் போவதிலும் பார்க்க எது விதத் தாமதமுமில்லாமல் மூன்று மணித்தியாலங்களிற் செல்லலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுரங்கப்பாதைச்சேவையை பிராங்கோ - பிரிட்டிஸ் கூட்டுத்தாபனம் நடாத்தினாலும் இருநாடுகளும் ஒரேயளவு இலாபம் பெறமாட்டார்கள். திரு. பேர்னாட் அவர்களின் கருத்துப்படி 70 வீதம் பிரித்தானியரே பாதை வழி கடந்து பிரான்சுக்கு வருவார்கள். 4: 1 என்ற வீதத்தில் பிரான்சுக்கே அதிக அளவினோர் வருவர். அதாவது பார்க்கப் போனால், சுரங்கப்பாதையைப் பாவிப்பதற்கு பிரிட்டிஷார் பிரான்சியருக்கு பணம் செலுத்துவர். தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள இத்தொடர்பினால் நீண்ட காலமாக இருந்து வந்த போர்ப்பகை நீங்க ஏதுவாகும் எனவும் கருதப்படுகிறது.

வாட்டலூா (Waterloo international ) தளத்திலிருந்து புறப்படும் இரயில்கள் கென்ற் ஊடாக ஒரு மணித்தியாலம் 140 / கி.மீ வீதம் வேகத்தில் சென்று சுரங்கப்பாதை எல்லையை அடையும். இது 21 ம் நூற்றாண்டுக்குரிய விஞ்ஞான நுட்பங்களுக்கமைய அதி வேகமான விசையில் அமைக்கப்படவில்லை. ஆனால் பிரயாணிகள் பிரான்ஸ் எல்லையை அடைந்ததும் ஒரு மணித்தியாலம் 300 Km வீதம் ஓடி பரிஸை அடைவர். பிரான்ஸில் பரிஸிலிருந்து சுரங்கப் பாதையை வந்தடைய 334 கி.மீ வேக றயில் பாதை முறை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரிட்டிஷார் 5 வருட தர்க்கங்களின் பின்னும் சுரங்கப் பாதையுடன் இணைக்கும் பாதை அமைப்பை இன்னும் தீர்மானிக்கவில்லை.

நீண்ட பெரிய திட்டங்கள் எங்கள் எதிர்கால சந்ததியினருக்கே என்ற தங்கள் கருத்துடன் பிரான்ஸியர் முன்னேறுகிறார்கள்.

திருமதி. ப. பாலசிங்கம்
(Times சஞ்சிகை உதவியுடன்)

வெளிவந்து விட்டது !

றஜனி பதிப்பகத்தின்

உலகவலம்
இனப்பிரச்சனை தீர்வுகள்
வி.ரி. தமிழ்மாறன்

ஈழத்துப்படைப்புக்களை நூலுருவாக்கும்
எமது முயற்சிக்கு ஆதரவு நல்குங்கள் !

79, Ave. Des. M. De Chateaubriant, 93700 Drancy, France.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோபல் பரிசு பெற்ற டோனி மாரிசன்

ஸ்விடிஷ் அகாடமி 1993-க்கான இலக்கிய நோபல் பரிசை அறிவித்தவுடன் ஆச்சரியப்பட்டவர்களில் முதல் நபர் அந்த பரிசைப் பெற்ற டோனி மாரிசன் என்ற ஆப்ரிக்க — அமெரிக்க எழுத்தாளரான பெண்மணிதான். இவ்வாண்டு அமெரிக்காவிற்கே நோபல் பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்த்தாலும் இலக்கிய வட்டாரத்தில் எதிர்பார்த்தது தாமஸ் பின்சன் என்ற எழுத்தாளருக்கோ, அல்லது ஜாய்ஸ் காரல் ஓட்ஸ் என்ற பெண்மணிக்கோதான். அவர்கள் ஊகத்தில் நீக்ரோ எழுத்தாளரான டோனி மாரிசன் வரவில்லை. இவ்வாண்டு அவர் அடையப் போகும் பரிசுத் தொகை இரண்டு கோடியே நாற்பது லட்ச ரூபாய்கள்!

அவர் இதுவரை ஆறு நாவல்கள் எழுதியுள்ளார். அநேகமாக எல்லாமே கிட்டத்தட்ட தன் வரலாறு போன்றவைதான். அமெரிக்காவில் நீக்ரோவாக வாழ இருப்பதற்கான சூழ்நிலையில் ஏற்படும் வரலாற்று ரீதியான சமூக இறுக்கங்களும், நசுக்கங்களுமே அவர் நாவல்களின் மையக் கரு. லட்சக்கணக்கான நீக்ரோக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த இறுக்கங்களை அவருடைய வாசகர்கள் இன்றும் அனுபவித்து வருகிறார்கள். அதனால் டோனி மாரிசனுக்கு வாசகர்கள் கூட்டம் அதிகம்.

1931-ல் குத்தகை விவசாயி ஒருவரின் இரண்டாவது மகளாகப் பிறந்த டோனி இளம் வயதிலேயே இனக் கொடுமையை அனுபவித்தவர். குடியிருந்த தங்கள் வீட்டிற்கு நான்கு டாலர் வாடகை ப்பாக்கி என்பதற்காக, குடும்பத்தினரை உள்ளே வைத்து வீட்டையே தீக்கொளுத்த முயற்சித்த வெள்ளை இனத்தின் அராஜகத்தை அவர் இளம் வயதில் கேள்விப்பட்டார். காலணாப் பெறாத விஷயத்திற்காக தன் வீட்டையே கொளுத்த நினைத்த அந்த வெள்ளை இனவெறி அவர் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. ஹோவர்டு பல்கலைகழகத்தில் உயர் படிப்பு படித்த டோனி — வில்லியம் ஃபாக்னர், வர்ஜீனியா உல்ஃப் இவர்களின் படைப்புகளில் தற்கொலை மனோபாவம் பற்றி ஒரு ஆய்வுரை எழுதி எம்.ஏ. பட்டம் பெற்றார். கொஞ்சம் கொஞ்சமாக ஃபாக்னரின் செல்வாக்குக்கு ஆளானார். அவரது முதல் நாவல் நீலக் கண்கள் (1970).

ஹோவர்ட் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது ஜமாய்கா கட்டிட நிபுணர் ஹரால்டு மாரிசனை மணம் புரிந்து கொண்ட டோனி இரண்டு பிள்ளைகள் பிறந்தவுடன் அவரிடமிருந்து பிரிந்து விடுகிறார்.

நியூயார்க்கில் ராண்டம் ஹவுஸ் என்ற பதிப்பாளரிடம் எடிட்டராகப் பணியாற்றிய டோனி பதிப்புத் துறையில் மகத்தான வெற்றி பெற்றார். சூலா, சாலமனின் பாட்டு போன்றவைகள் அவர் நாவல்கள். 'பிலவ்ட்' என்ற நாவல் புலிட்சர் பரிசு பெற்றது.

இவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்ட போது இவரைப் பற்றி ஸ்வீடிஷ் அகாடமி சொன்னது: "இனக் கொடுமையின் விலங்குகளிலிருந்து தன் மொழியை விடுவிக்கும் இவர் திரும்பத் திரும்ப அந்த மொழியிலேயே உழல்கிறார்" இதை அமெரிக்க படைப்புலகம் மறுக்கிறது. 'தன் கதாபாத்திரங்களின் கறுப்புத்தன்மையிலிருந்து விடுபட்டு பொதுவான மொழியைத்தான் அவர் கையாளுகிறார். அது எல்லாருக்கும் புரியும்படியான மொழி' என விமரிசகர்கள் கருதுகிறார்கள்.

நன்றியுடன் "சுபமங்களா" இதழிலிருந்து..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழக அலை வரிசை



ஆகஸ்ட் 19ந்தேதி இந்தியாவின் சிறந்த நாடகக் காரரும் இடதுசாரி அறிவுஜீவியுமான உத்பல்தத் காலமானார்.

அக்டோபர் 4ந்தேதி "நாடகவெளி" இதழும் மாக்ஸ் முல்லர் பவனும் இணைந்து அவர் நினைவாக உத்பல்தத்தின் நீண்ட பேட்டியை வீடியோவில் ஒளிபரப்பினர். பேட்டி கண்டவர்கள் சமந்தா பானர்ஜி. (இவர் தான் நக்சல்பாரி வரலாற்றை எழுதியவர்) மற்றொருவர் வங்காள இடதுசாரி விமர்சகர் சமிக் பானர்ஜி. இருவரின் கேள்விகளுக்கும் சளைக்காமல் பதில ளித்தார். உத்பல்தத்தின் அரசியல் அறிவு வியக்க வைக்கும் வண்ணம் இருந்தது. ரஷ்ய, சீன, கிழக்கு ஐரோப்பிய செய்திகளை விரல் நுனியில் வைத்திருந்தது பார்வையாளர்களை பரவசப் படுத்தியது.

செவ்வியை அடுத்து உத்பத்தத்தின் புகழ்பெற்ற "கல்லோல்" நாடகத்தை 3மணிநேரம் பார்த்தபோது தான் "அரசியல் நாடகம்" என்பது எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணமே தெரிந்தது.

இந்நாடகம் 1942-ஆம் நடந்த பம்பாய் கப்பற்படை வீரர்களின் போராட்டத்தை காங்கிரஸ் கட்சியினர் காட்டிக் கொடுத்து துரோகம் செய்ததை நாடகமாக்கி இருந்தனர். 1965-66 காலத்தில் இந்நாடகம் நடந்தபோது ஆளும் கட்சியான காங்கிரஸ் ஆத்திரப்பட்டது. இந் நாடகத்தில் மேடை முழுவதும் கப்பலின் மேல்தளம் சித்தரிக்கப் பட்டிருந்தது. அதை அடுத்து கீழ்தளம், பம்பாய் கப்பற்படை வீரர்களின் குடியிருப்பு சேரி என்ற மூன்று பகுதியை வைத்து திறம்பட இயங்கி இருந்தார். இது ஏறக்குறைய ஐசென்ஸ்டினின் "பொட்டம் கின் கப்பல்" உணர்வை நாடகம் பார்ப்பவர்களுக்கு ஏற்படுத்தியது.

கல்லோல் 1965ஆம் ஆண்டு முதலில் கல்கத்தா மினர்வா தியேட்டரில் அரங்கேறியது. தொடர்ந்து 850 காட்சிகளைக் கண்டது. இந்நாடகத்தின் வீச்சு ஆளும் கட்சி காங்கிரசை தாக்குகிறது எனக்கூறி காங்கிராசார் நடிகர்களையும், உத்பல்தத்தையும் தாக்கினராம். முடிவில் உத்பல்தத் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து நாடகம் நடந்த வண்ணம் இருந்தது. நடிகர்கள் தங்கள் கைகளால் எழுதிய சுவரொட்டியை நகர் முழுவதும் ஒட்டி கூட்டம் சேர்த்தார்களாம் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் ஆறுமாதம் நடந்த மக்கள் போராட்டத்திற் குப் பின் உத்பல்தத் விடுதலை செய்யப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உத்பல்தத் விடுதலை ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. சிறையிலிருந்து கல்கத்தாவின் ஷஹீத் மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். அப்போது இருந்த மக்கள் தொகை மட்டும் 10 இலட்சம்.

**

யார் இந்த உத்பல்தத் !

வடகிழக்கு மாநிலமான மேகாலயாவில் உள்ள ஷில்லாங்கில் 1929ஆம் ஆண்டு பிறந்தார். பள்ளி மாணவனாக இருந்த போதே மேடைகளில் நடிக்க ஆரம்பித் தார். கல்கத்தாவின் செயிண்ட் சேவியர் கல்லூரி மாணவனாக இருந்தபோது ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் தொடர்ந்து நடித்து வந்தார். கடைசி நாட்களில் கூட ஷேக்ஸ்பியரின் நாடகம் ஒன்றைத் தழுவி வங்க நாடகம் ஒன்றின் தயாரிப்பில் இருந்த போது தான் மரணம் அவரைத் தழுவியது.

1947ஆம் ஆண்டு "ஷேக்ஸ்பிரியன்ஸ்" என்ற பெயரிலேயே தன்னுடைய முதல் நாடகமாக "மூன்றாம் ரிச்சர்டு" என்ற நாடகத்தை இயக்கி அதன் கதாநாயக னாகவும் நடித்தார்.

"இன்டர் நேஷனல் ஷேக்ஸ்பிரியன்ஸ்" என்ற குழுவின் இயக்குநர் ஜியாரி கென்டல் இவருடைய நடிப்பை பார்த்துத் தன்னுடைய குழுவில் சேருமாறு அழைப்பு விடுத்தார்.

1949ஆம் ஆண்டு இவருடைய குழுவின் பெயர் மாறியது. 'லிட்டில் தியேட்டர் குரூப்' என்ற பெயரில், ஷேக்ஸ்பியர், பெர்னார்ஷா மற்றும் கிளிப்பர்டு ஓடட்ஸ் ஆகியோரின் நாடகங்களை மேடையேற்றிய உத்பல்தத்தின் மனதில் மாற்றம் விளைந்தது. வங்காள மொழியில் அந்த மக்களோடு பேசி நடிக்க முடிவு செய்தார். விளைவு ஷேக்ஸ்பியரும், இப்சனும், சிமஸோவும் வங்க மொழியில் பேசினார்கள் !

**

1948-50 காலகட்டத்தில் கம்யூனிஸ்ட்கட்சி தடையில் இருந்ததால் உத்பல் தத்தை ஈர்த்தது. இந்திய மக்கள் நாடக மன்றத்தில் (IPAT) சேர்ந்து பல நாடகங்களை நடத்தினார். தாகூரின் விசர்ஜன் மற்றும் மைக்சேல் மதுசூதன தத், கோதீந்திரநாத் தாகூர் ஆகியோருடைய படைப்புகளை அரங்கேற்றினார்.

வங்காள கிராமக் கூத்தான "ஜாத்ரா"வை நவீன நாடகத்துடன் இணைத்து வீதிநாடக இயக்கத்தை தொடங்கி கட்சி பிரசார நாடகங்களை தயாரித்தார்.

1959ஆம் ஆண்டு "அங்கார்" (நிலக்கரி) என்ற அவருடைய நாடகம் வங்க நாடக ரசிகர்களிடையே பேரெழுச்சியை ஏற்படுத்தியது. அதன் கதை நிகழ்வுகள். காட்சி அமைப்புகள், ஒளிச்சேர்க்கை ஆகியவை மக்களை உணர்ச்சி வெள்ளத் தில் ஆழ்த்தின. நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் வறுமை, வாழ்க்கை அவலம், மனிதநேயம், ஆகியவற்றைச் சித்தரித்த நாடகம் அது.

"திகாஷ் எனும் நதி" என்ற நாடகத்தில், நாடக அரங்கத்தில் சில மாற்றங்க ளைச் செய்தார். முன்மேடை நாடகத்தின் விளிம்புவரை நிகழ்வு தளமாகக் கொண்டதாக, பல அடுக்குகளுடன் கூடிய தளங்களை அமைத்து தந்த நாடகத்தில் அவர் செய்த புதுமை மக்களை வெகுவாகக் கவர்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்து "அஜய் வியட்நாம்" (வெல்ல முடியாத வியட்நாம்) நாடகத்தை வெளியிட்டார். "நீல் சாடா லால்" (விலங்குகளைத் தவிர வேறொன்றும் இல்லை) என்ற நாடகம் பிரஞ்சு புரட்சியை மையமாகக் கொண்டது. 1970ஆம் ஆண்டுகளில் சித்தார்த்த சங்கர்றே தலைமையில் மே. வங்கத்தில் காங்கிரசு பேயாட்சி நடத்தியது. அதை கண்டித்து பாரிகேட் (தடையரண்) என்ற நாடகத்தை தயாரித்தார்.

அரசியல் விடுதலைக்காக போராடிய மார்க்சிய - லெனினிய புரட்சியாளர் களை "நக்சலைட்டுகள்" என்று சுட்டுக் கொல்லப்பட்டதை சித்தரிக்கும் நாடகம் "துர் சொப்ன நகரி" மாவோ புரட்சியாளர்கள் மோதல் என்ற பெயரில் கூட்டம், கூட்டமாக கொல்லப்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது. ஆகவே மக்களிடம் மிகப் பெரிய வரவேற்பை பெற்றது. நாடகம் பார்க்க வந்த மக்களை இந்திரா காங்கிரஸ் தொண்டர்களும், சத்ர பரீஷத் குண்டர்களும் கம்புகளாலும் தாக்கினர். ஒரு கையால் தடியடியை தடுத்துக் கொண்டு, மறுகையில் டிக்கெட் வாங்கிக் கொண்டு பொதுமக்கள் அரங்களுக்குள் வந்தனர்.

"ஏ பார் ராஜர் பாலா" (இனி அரசர்களின் ஆட்சி தான்) என்ற நாடகம் இந்திரா காந்தி -சஞ்சய் காந்தி பற்றியது.

ஸ்டாலின் நூற்றாண்டுக்காக "ஸ்டாலின் 1934" என்ற நாடகமும்; "ஏக்லா சோலே ரே" (காந்தி கொலைபற்றி); "ஜன்தார் ஓபியம்" (அயோத்தி மக்களுக்கு கஞ்சா) என்ற நாடகங்களையும் தொடர்ந்து வழங்கினர்.

200 க்கும் மேற்பட்ட படங்களிலும் நடித்தவர். மிருணாள் சென்னின் "புவன்சோமி"லும், சத்திஜித்ரேயின் 5 படங்களிலும் நடித்தவர். ரே க்கு பிடித்த நடிகர். ரேயின் கடைசி படமான அசாந்த்க் (புதியவர்) இலும் நடித்துள்ளார். 60 நாடகங்கள் வரை நடத்தியவர். 20 நாடகங்கள் வீதி நாடகங்கள்; இவரால் தான் பிரக்ட்டும், பிரடரிக் வுல்ப் பும் வங்காள மொழியில் மொழிபெயர்க்கப் பட்டனர்.

மக்களுக்காகக் கலையை படைத்த கலைஞர்களுக்கு சாவேது !

- தொகுப்பும் மொழிபெயர்ப்பும் ப. தி. சோழநாடான் -

**ஓசை**

கணனி
**எழுத்துப்பதிவு :**
மாதவன்
ஸ்ரீஸ்கந்தராஜா
பிரதாயினி
**அமைப்பு :**
புவனன்

*அட்டைப்படங்கள் : ICRC, Sunday Times.*

**நன்றி**

ஓசையின் வளர்ச்சியிற் பங்கேற்கும்
**தமிழாலயம், ஆசியா, றஜனிபதிப்பகம்,**
மற்றும் நண்பர்களுக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குகை ஓவியங்கள்



*படத்தில் இருக்கும் பெண்மணிதான் முதன்முதலில் இவ் ஓவியங்களைக்கண்டு ஆய்வாளர்களிடம் தெரிவித்தவர்.*

விழுப்புரத்திற்கு சில கி.மீ தொலைவில் உள்ளது கீழ்வாலைக்கிராமம். இங்குள்ள மலைகளில் தமிழ் இனத்தின் மூத்த குடிகள் வாழ்ந்திருப்பதற்கான அடையாளங்கள் அதிகமாகக் கிடைத்துள்ளன. பரவலாகக் காணப்படும் சிறு சிறு குன்றுகளில்; ஆதிமனிதன் வேட்டையாடுதல், ஆட்டுச்சண்டை, குதிரையில் மனிதன், படகில் மனிதன், மயில், குதிரை, மான், யானை, போன்ற விலங்குகளின் காட்சியும் தலைவிரி கோலத்துடன் ஒருபெண் ஒருவனை குதிரையில் வைத்து அழைத்துப் போகும் காட்சியும் காணக் கிடைக்கின்றன.

இந்த ஓவியங்களின் அருகில் பல குறியீடுகளும் உள்ளன. இங்கு காணப்படும் குறியீடுகள் சிந்துவெளி, ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட சித்திர எழுத்தின் அச்சுப் போல உள்ளது. கீழ்வாலையில் உள்ளது போன்றே 25 கி.மீ தொலைவில் உள்ள இருளன்கல் என்ற பாறையிலும் இக் குறியீடுகள் காணப்படுகின்றன. இது போன்ற குறியீடுகள் இந்தியாவில் வேறு எங்கும் காணப்படவில்லை. இவற்றை வைத்துப் பார்க்கும்போது தமிழரின் மூதாதையர் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் இருந்திருக்கின்றனர் என்பது தெரிகிறது.

இந்த ஓவியங்களை மட்டும் வைத்துப் பார்த்தால் மொழி தோன்றாத காலத்து மனிதனின் குறியீடுகள் இவை என்பது புலப்படும். இது தவிர ஆதி மனிதனின் இனக் குழுச் சமூக வாழ்வை இவ்வோவியங்கள் பிரதிபலிப்பதையும், வேட்டைச்சமூகம் மற்றும் தாய்வழிச் சமூக உறவு நிலைகளைக் காட்டுவதையும் உணரமுடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியா முழுவதும் உள்ள பழங்குடிச்சமூக ஓவியங்களுடன் ஒப்பிடும் போது எங்குமே கிடைக்காத " இனக்குழுச்" சமூகத்தில் தாய் மேலாண்மை பெற்றிருந்த ஓவியங்கள் இங்கு மட்டுமே கிடைத்திருக்கின்றன.

இங்கு காணப்படுகின்ற ஓவியங்கள் அனைத்தும் "இரத்த" வண்ணத்தில் உள்ளன. இதே வண்ணம் உலகத்தில் தமிழகத்தைத் தவிர்த்து திராவிடர்கள் என்று சொல்லப்படுகின்ற தொல்குடிகளின் பிறந்தகமான இலெமுரியாக் கண்டத்தின் பகுதிகளாகத் தற்போது காணப்படும் தென் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா முதலிய இடங்களிலும் காணப்படுகிறது.
கீழ்வாலை ஓவியம் பற்றித் திராவிடக் கண்மணிகள் எப்போதும்போல் இப்போதும் கவலை ஏதும் இல்லாமல் இருக்கின்றனர். இவ்வோவியங்களுக்கு அருகில் உள்ள பாறைகள் வெட்டி எடுக்கப்பட்டு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை வெடி வைத்துத் தகர்க்கப்படுகின்றன. இதனால் ஏற்படும் அதிர்வைக் கீழ்வாலை மலையின் மீது இருந்தபோது உணரமுடிந்தது. இந்தத் தொல் பழங்கால மலையும் அதிலுள்ள பழந்தமிழர் ஓவியங்களும் வெறிபிடித்த கழகக் கண்மணிகளின் வெடிமருந்திற்கு ஈடுகொடுத்து எவ்வளவு நாட்களுக்கு நிலைத்து நிற்கும் என்பது தெரியவில்லை. மத்திய அரசும் இப்படிப்பட்ட அரிய ஓவியச் சான்றைக் காக்க எந்த முயற்சியும் இதுவரை எடுக்கவில்லை.

தமிழகத்தில் குகைகளே இல்லை எனலாம். குகை என்றால் பிரான்ஸ், சீனா முதலிய நாடுகளில் உள்ளது போல 100 அடி முதல் 1/2 கி.மீ வரை இருக்குமே அதுபோல ஒன்று கூட இங்கு கிடையாது. இருப்பவை எல்லாம் குடை போன்ற அமைப்பிலும், பாறைகளின் சரிவுகள், இரு பாறைகளுக்கு இடைப்பட்ட பகுதி போன்றவை தான். இக்குன்றுகள் கனிம நிறுவனங்களால் உடைக்கப்பட்டு, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுபவை பாறைகள் மட்டும் அல்ல நமது பண்பாட்டு வரலாற்றுச் சான்றாதாரமும்தான்.

***தகவல் : ப. தி. அரசு***


**கிடைக்கப்பெற்றோம்**

கனடாவிலிருந்து
வெளிவருகிறது
வாரஇதழ் "சக்தி"

P.O.Box: 92192, BRIDLEWOOD MALL
2900 WARDEN AVE., SCARBOROUGH
ONT. CANADA. M1W 3Y9




**"ரணங்கள்"**
(கவிதைத்தொகுதி)
கவிதாலயம்
151, ஸாவியா வீதி, காத்தான்குடி - 1,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமாதானத்துக்காக நிலமா, நிலத்துக்காகச் சமாதானமா?



- அனந்தன் -

அண்மையிற் கைச்சாத்திடப்பட்ட இஸ்ரேல் - பலஸ்தீன விடுதலை ஸ்தாபன (PLO) உடன்படிக்கை ஏறத்தாழ ஐம்பது வருடகாலத் தகராறொன்றை முற்றுக்குக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையை மேனாட்டு அரசாங்கங்கள் ஊக்குவிக்கின்றன. முடிந்தவரைக்கும் இஸ்ரேலுக்கு ஆதரவும் பலஸ்தீன விடுதலைச் சத்திகட்கு எதிர்ப்பும் என்ற போக்கையே மேலை முதலாளித்துவ நாடுகள் மேற்கொண்டு வந்துள்ளன. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பையும் கொடுமைகளையும் கண்டிப்பதில் இந்நாடுகள் காட்டும் தயக்கம் ஒவ்வொரு நாட்டினதும் நலன் சார்ந்திருந்தாலும், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இஸ்ரேல் மூலமும் மேலைநாட்டு நலன் பேணும் அரபு சர்வாதிகார அரசுகள் மூலமும் அப்பிராந்தியத்திற் தம் பொருளாதார நலன்களைப் பேணுவது மட்டுமே இந்த நாடுகளின் இலக்காக இருந்து வந்துள்ளது. இந்த உடன் படிக்கை சாத்தியமான சூழலையும் இதன் எதிர்காலத்தையும் பற்றிப் பார்க்கு முன் பலஸ்தீனம் பறிபோன கதையைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

இந்த நூற்றாண்டின முற்பகுதியில், ஐரோப்பாவின் யூதர்கட்கெதிராகத் தொடராக இழைக்கப்பட்டு வந்த கொடுமைகளை மனதிற் கொண்டு, யூதர்களது பாதுகாப்புக்காக அவர்கட்கொரு தாயகம் தேவை என்ற கருத்து வலுப்பட்டு வந்தது. யூதர்களது தாயகம் அவர்கள் ஆயிரமாண்டுக்காலம் முன்பிருந்தே கைவிட்டுச் சென்ற அவர்களது பழைய தாயக மண்ணாக இருக்க வேண்டும் என்று யூத தீவிரவாதிகள் முனைப்பாக இருந்தனர். இவர்களது யூத இனவாத இயக்கம் ஸியோனிய இயக்கம் எனப் பரவலாக அறியப்பட்டது. யூதரது தாயகம் பழைய இஸ்ரேல் அதாவது பலஸ்தீனம் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறியப்பட்ட மண்ணில் அமையவேண்டும் என்ற கருத்து பிரித்தானியாவில் பல்ஃபோர் பிரகடனத்தால் அங்கீகரிக்கப்பட்டது. யூதர்கட்கு எதிரான கொடுமைகள் உக்கிரமடைந்த சூழலில், யூதர்கள் தமக்கொரு தாயகம் பலஸ்தீனத்தில் நிறுவப்படுவதை விரும்பியதில் வியப்பில்லை. ஆயினும் பலஸ்தீனம் என்பது கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைச் சார்ந்த அரபு மக்களும் யூதர்களும் சேர்ந்து வாழ்ந்த ஒரு நாடாக, பிரித்தானிய ஆட்சியின் பராமரிப்பின் கீழ் இருந்தது. சர்வதேச ரீதியாக ஒரு விதமான உடன்பாடு ஏற்படு முன்னமே பணவலிமையாலும், அதைவிட முக்கியமாகப் பயங்கரவாத நடவடிக்கைகளாலும் பலஸ்தீன அராபியர்களை அவர்களது மண்ணிலிருந்து அகற்றும் முயற்சி 1940களின் தொடக்கத்தில் மும்முரமடைந்தது. இதன் விளைவாக பலஸ்தீனிய அரபுக்கட்கும் வந்தேறு குடிகளான யூதர்கட்கும் மோதல்கள் நேர்ந்தன. யூத பயங்கரவாத இயக்கத் தலைவர்களும் அதன் கொலைக் குற்றவாளிகளும் பின்னாளில் இஸ்ரேலின் ராணுவ முக்கியஸ்தர் களாகவும் ஆட்சியாளர்களாகவும் வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவு உலக வல்லரசுகள் மத்தியிலும் பரவலாக உலகெங்கும் யூதர் பற்றிய மிகுந்த அனுதாபத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக ஐ. நா. சபை பலஸ்தீன மண்ணில் இஸ்ரேலை நிறுவுவதென்ற முடிவை எடுத்தது. ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தில் பிரிட்டன் ஒதுங்கி நின்றது. அமெரிக்காவின் உந்துதலின் பேரில் தேசிய சீனக்குடியர சென அழைக்கப்பட்ட தாய்வானின் ஆட்சியாளர்களும் ஆதரித்த இம் முடிவுடன் பிரான்ஸும் சோவியத் யூனியனும் உடன்பட்டன. ஸ்டாலின் இவ் விஷயத்திற் தன் தவறைப் பின்னரே உணர முடிந்தது. 1948இல் இஸ்ரேல் நிறுவப்பட்டது.

அரபு மக்களது கலந்தாலோசனையின்றி ஏற்கனவே ஆக்கிரமிப்பாளர்களாக அறிவிக்கப்பட்ட சியோனிஸப் பயங்கரவாதத்திற்கு அங்கீகாரம் வழங்கும் இந்த நடவடிக்கையை அரபு மக்கள் வெறுத்தனர். அரபு ஆட்சியாளர்களும் இதன் விளைவாகப் போரிற் குதித்தனர். இராணுவரீதியாகப் பின்தங்கிய நிலையிலி ருந்த அரபு நாடுகள் தோல்விகண்டன. அரபு நாடுகளின் தலைமைகள் அன்று முடியாட்சிகளிடமே இருந்தது. இவை தமது நலன்களைப் பேணச் செயற்பட் டனவேயன்றிப் பலஸ்தீன மக்களின் விடுதலையைக் கருத்திற் கொள்ள வில்லை. போரின் முடிவில் இஸ்ரேல் ஐ. நா. சபை ஒதுக்கிய நிலத்திலும் ஒருபகுதி நிலத்தைக்கைப்பற்றியது. பலஸ்தீனத்தின் ஒரு பகுதி (ஜோர்டான் நதியின் மேற்கரை என மேலும் பல இலட்சக்கணக்கான பலஸ்தீன மக்கள் அகதிகளாயினர். இவர்கள் இஸ்ரேலின் தென்மேற்காயமைந்த காஸா பகுதியில் எகிப்திய நிர்வாகத்தின் கீழும், கிழக்கே ஜோர்டானிலும், வட மேற்கே ஸிரியாவிலும் வடக்கே லெபனானிலும் அகதிகளாக வாழ்ந்தனர். இன்னும் பலர் பிற அரபு நாடுகளிலும் அகதிகளாக வாழ்ந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலஸ்தீன யுத்தத்தின் தோல்வியும் அதன் தொடர்பான அரசியல் நெருக்கடியும் அரபு நாடுகளிற் சமுதாய மாற்றத்தைத் துரிதப்படுத்த உதவின. எகிப்திலும், ஸிரியாவிலும் ஈராக்கிலும் முடியாட்சிகள் கவிழ்ந்தன. இவை மக்களாட்சிகளாக அமையாவிட்டாலுங் குறுகிய கால அளவிலேனும் மக்களால் விரும்பப்பட்ட ஆட்சிகளாக இருந்தன. இம் மாற்றங்கள் பிற அரபு முடியாட்சிகள் நடுவே நடுக்கத்தை ஏற்படுத்தின. சவூதி அராபியா போன்ற நாடுகள் மேலை நாடுகளுடன் தம்மை நெருக்கமாக்கி இஸ்ரேலுக்கு எதிரான ஒரு பகிரங்க நிலைப்பாட்டையும் பலஸ்தீன விடுதலைக்குத் தம் ஆதரவையும் தெரியப்படுத்தின.

1956இல் கமால் அப்துல் நாஸர் தலைமையிலான எகிப்து சூயெஸ்கால்வாயைத் தேசியமயமாக்கிய போது பிரிட்டனும் பிரான்ஸும் தமது நலன்களைப் பேணப் போர் தொடுத்தன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இஸ்ரேலும் போரிற் பங்குபற்றியது. எகிப்தின் எதிர்த்தாக்குதலும் சோவியத் ஆதரவும் அமெரிக்காவின் சுயநலன் சார்ந்த நடு நிலைமையும் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவந்தன. இஸ்ரேலின் ஆட்சியாளர்கள் பிரித்தானிய பிரெஞ்சு ஆட்சியாளர்களுடனான புதிய நெருக்கத்தைக் கண்டனர். மேலை முதலாளித்துவ நாடுகள் மத்திய கிழக்கில் ஏற்படுஞ் சமுதாய மாற்றங்கள் தமது நலன்கட்கு விரோதமமாகப் போகாது தடுக்கும் ஒரு கருவியாக இஸ்ரேலைக் கருதின.

இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையிலான பகைமை தொடர்ந்தது. 1967இல் நாஸர் அரசாங்கம் இஸ்ரேல் மீது கடுமையான சொற்போரை நிகழ்த்திய சூழலை வாய்ப்பாகப் பயன்படுத்திய இஸ்ரேல் எதிர்பாராத விதமாகத் திடீர்த் தாக்குதல் தொடுத்து எகிப்திய விமானப்படையை நிர்மூலமாக்கியது. இதன் பின் தனது விமானப்படையின் பாதுகாப்புடன் சுயெஸ் கால்வாய்க்கு வடக்கேயிருந்த ஸினாய்ப் பகுதியைத் தன் கட்டுப்பாட்டுக்குட் கொண்டுவந்தது. இதே போரில் ஜோர்டானின் கட்டுப்பாட்டிலிருந்த மேற்குக் கரைப் பகுதி ஸிரியாவின் கோலான் மலைப் பகுதியும் இஸ்ரேலின் கைக்கு மாறின. இத்தகைய ஒரு வரலாற்றுச் சூழலிலேயே பலஸ்தீன மக்களது விடுதலையைப் பலஸ்தீன மக்களே போராடி வென்றெடுக்கவேண்டும் என்ற முடிவு பலஸ்தீன விடுதலைச் சக்திகளில் ஒன்றுபட்ட இயக்கமாக பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்துக்கு வழிகோலியது.

1956முதலாக ஏற்பட்ட மாற்றங்கள், முடியாட்சிகள் தவிர்ந்த அரபு நாடுகளில், லெபனான் நீங்கலாக, சோவியத் யூனியனுடன் நெருக்கத்தை ஏற்படுத்தின. 1974இல் எகிப்து தனது பிரதேசத்தை மீட்கத் தொடுத்த போரில் ஆரம்பத்திற் பெற்ற வெற்றி சோவியத் யூனியனிடமிருந்து எதிர்பார்த்த ஆதரவு கிடையாததால் இழக்கப்பட்டது. எனினும் எகிப்தின் ராணுவ மேம்பாட்டை முதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறையாக நிறுவிய போராக இது அமைந்தது. இதுவே அரபு நாடுகள் இஸ்ரேலுடன் மோதிய இறுதி யுத்த மாகும்.

பெரு வல்லரசுகளின் அரசியலிற் கைப்பாவைகளாக இயங்கிய அரபு நாடுக ளின் அரசியற் தலைமைகள் மக்களாட்சிகளாக அமையவில்லை. ஆயினும் பரந்துபட்ட வெகுஜன உணர்வின் விளைவாகப் பலஸ்தீன விடுதலையையும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் ஆதரித்தன. அதேவேளை, ஒவ்வொரு நாடும், முக்கியமாக ஸிரியா, தனது நலன்கட்கு வசதியான இயக்கங்களது போஷகராக இருக்கத் தலைப்பட்டது. இஸ்ரேலிய அரச பயங்கரவாதத்திற்கு எதிரான பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்தும் பலஸ்தீன இயக்கங்கள் உருவாயின. "கறுப்பு ஸெப்டெம்பர்" போன்ற இயக்கங்கள் இஸ்ரேலுக்கு ஆதரவான எந்த நாட்டிலும் தாக்குதல்களைத் தொடுத்தது. எழுபதுகளில் எழுச்சிபெற்றிருந்த உலக விடுதலைப்போராட்ட அலை இத்தகைய முனைப் புக்களை ஊக்குவித்தது. அகதிகளான பலஸ்தீன மக்களின் நியாயமான உரிமைகளின் மறுப்பும் இஸ்ரேலிய அதிகாரத்தின் கீழிருந்த பலஸ்தீன மக்களது அடிப்படை உரிமைகளின் மறுப்புமே பலஸ்தீன மக்களது விரக்திக் கும் போராட்ட இயக்கங்களது எழுச்சிக்கும் காரணம் என்ற உண்மையை இஸ்ரேலிய ஆட்சியாளர்கள் என்றுமே ஏற்கவில்லை. 1978இல் எகிப்துடன் ஏற்படுத்தப்பட்ட சமாதானம் எகிப்து அமெரிக்காவின் எடுபிடியாக மாறியதன் விளைவாக நேர்ந்த அளவுக்கு இஸ்ரேலின் மனமாற்றத்தால் ஏற்படவில்லை.

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் பலஸ்தீன மக்களின் ஏகப்பிரதிநிதியாகப் பல நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட போதும், பல வேறு தடவைகள் ஐ.நா. சபை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பைக் கண்டித்துத் தீர்மானங்களை நிறைவேற்றியபோ தும், இஸ்ரேலின் நடத்தை மேலும் மோசமாகியே வந்தது.

பலஸ்தீன விடுதலைக் குழுக்களின் நடவடிக்கைகள், அவற்றின் அரசியற் சித்தாந்தத்தாலும் ஆதரவு சக்திகளாலும் தீர்மானிக்கப்பட்டன. அவர்களது தாக்குதலுக்குரிய இலக்குகள், இஸ்ரேலிய அரசின் அடக்குமுறை இயந்திரமாக மட்டுமின்றி, இஸ்ரேல் ஆதரவு ஆட்சிகளாகவும் இஸ்ரேலிய, ஐரோப்பிய, அமெரிக்கப் பிரசைகளாகவும் இருந்தனர். இராணுவமல்லாத இலக்குகள் தாக்கப்பட்டபோது மேலை நாட்டு ஏடுகள் முழுப்

'பலஸ்தீன விடுதலை

இயக்கத்தையும் பழி கூறின. அதே வேளை, இஸ்ரேலின் மீதான கண்டனம், இஸ்ரேல் மிகவும் தீவிரமான அரச அடக்குமுறையை அவிழ்த்துவிடும்போது மட்டுமே தொடுக்கப்பட்டது. அத்துடன், அதுவும் விரைவில் மறக்கப்பட்டு, பலஸ்தீன மக்களின் இயக்கங்கள் மட்டுமே பயங்கரவாதிகளாகக் காட்டப்பட் டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதே வேளை, பலஸ்தீனிய மக்களது நியாயமான போராட்டங்கள் பற்றி அனுதாபமாகச் சப்புக் கொட்டிய மேலை நாடுகள் தீவிரவாதிகளைக் கண்டித் தாலும், அந்தத் தீவிரவாதிகளின் செயல்கட்கு அஞ்சியே தீர்வுகட்காக இஸ்ரேலை வற்புறுத்த முனைந்தனர். தீவிரவாதிகளைப் பொறுத்தவரை ஐரோப்பிய நாடுகளது பார்வை அச்சங் கலந்த ஒரு மதிப்பாகவே நடைமுறைப் பட்டது. அரபு நாடுகளின் ஆதரவு பலஸ்தீன மக்களது அகதி இருப்பை வசதி செய்வதற்கு மேலாக எதையுஞ் செய்யவில்லை. பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்திற்கும் வெவ்வேறு விடுதலை இயக்கங்கட்கும் நிதி உதவியும் தஞ்சமும் சிறிது ஆயுத உதவியும் தந்ததை விட, இஸ்ரேலை எதிர்த்து நிற்க எந்த அரபு நாட்டாலும் முடியாததற்குக் காரணம், அமெரிக்கா இஸ்ரேலின் பிரதம காவலாளியாக இருந்ததே.

ஈரானில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளது வெற்றி, அரபு நாடுகள் உட்பட உலகெங்கும் உள்ள முஸ்லிம்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை அளித்தது. இஸ்லாமிய அடிப்படைவாதிகளது தீவிரவாதத்துடன் உடன்படாதவர்களும், அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்குமெதிரான புதிய ஒரு காவல் அரனாக ஈரானைக் கருதினர். அமெரிக்கச் சதியால், ஈரானும் ஈராக்கும் மோதிய போது, ஈரான் இஸ்ரேல் மூலம் பின்னைய காலத்தில் ஆயுதங்களை வாங்கிய போதும், இந்த நம்பிக்கை தளரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

70 களின் பிற்பகுதியில் லெபனானிலிருந்து பலஸ்தீன இயக்கங்கள் தொடுத்த தாக்குதலை முறியடிக்க இஸ்ரேல் நடத்திய ஆக்கிரமிப்பு, இஸ்ரேலின் பிரச்சனையை மேலும் மோசமாக்கியது. இஸ்ரேல் இதன் மூலம் லெபனானில் புதிய பகைவர்களையுஞ் சம்பாதித்தது. இதன்தொடர்ச்சியாக ஈரானிய ஆதரவுடைய ஹமாஸ் எனும் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கம் பலஸ்தீன மக்களிடையே வேகமாக வளரத் தொடங்கியது. கடந்த சில ஆண்டுகளுள் இஸ்ரேலுக்கு எதிரான முக்கிய சக்தியாக லெபனானில் ஹிஸ்புல்லா என்ற இயக்கமும் மும்மரமாகச் செயற்பட்டு வருகிறது.

இத்தகைய ஒரு சூழலிலேயே இஸ்ரேலிய அடக்குமுறைக்கு எதிரான ஒரு வெகுஜன இயக்கம் (இன்ற்றிஃபாடா) இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட காஸா, மேற்குக்கரைப் பகுதிகளில் மும்மரமடைந்தது. பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் வழிகாட்டல் இல்லாமலே சுயமாக எழுந்த இந்த வெகுஜன இயக்கம் இஸ்ரேலிய அடக்கு முறையாளர்களை ஓரளவு அஞ்ச வைத்தது. இஸ்ரேலிய அடக்கு முறைக்கு எதிராகப் பெண்களும் சிறுவர் சிறுமியரும் பணியமறுத்துப் போராடினர். இஸ்ரேலிய அடக்குமுறை தன் இயலாமையை மேலும் அம்பலமாக்கியது.

இச் சூழலின் மத்தியிலேயே, அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான பேச்சு வார்த்தைகள் அமெரிக்க ஆதரவுடன் ஆரம்பமாயின. பலஸ்தீன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலை ஸ்தாபனத்தை அங்கீகரிக்க மறுத்த இஸ்ரேல், மறைமுகமாக, அவர்களது பிரதிநிதிகளுடன் பேச உடன்பட்டது. இப் பேச்சுவார்த்தைகள் அதிகம் முன்னேற முடியவில்லை. இஸ்ரேல் தான் கைப்பற்றியபகுதிகளைக் கைவிட மறுத்தமை இதற்கு முக்கிய காரணம். எனினும் இரகசியமான ஒரு பேச்சுவார்த்தை முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவே இன்றைய உடன்படிக்கை. (இவற்றைச் சாத்தியமாக்கிய வேறு இரண்டு முக்கிய விஷயங்களும் குறிப்பிடத் தக்கவை, ஒன்று, சோவியத் யூனியனின் வீழ்ச்சி; மற்றது, ஈராக் மீதான யுத்தத்தின் விளைவாக அமெரிக்காவின் நிலைப்பாடு பற்றி அரபு நாடுகளில் எழுந்துள்ள பகைமை உணர்வு. சோவியத் ஆதிக்கமோ போட்டியோ இனி இல்லை என்ற தைரியத்திலேயே அமெரிக்கா முற்றிலும் தனது ஆளுமைக்குட்பட்ட ஒரு பேச்சு வார்த்தையை நெறிப்படுத்த முனைந்தது. )

இந்த உடன்படிக்கை மூலம், குறுகிய காலத்தில், காஸாவிலும் மேற்குக் கரையில் உள்ள ஒரு நகரிலும் பலஸ்தீன மக்களுக்கு வரையறுக்கப்பட்ட சுயாட்சி கிட்டும். நீண்ட காலத்தில், 1967 இற் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களின் பலஸ்தீன சுயாட்சிக்கு வழி ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஆயினும் இஸ்ரேல் மேற்குக் கரையில் மேற்கொண்ட யூதக் குடியேற்றங்கள் புதிய பிரச்சனைகளை உருவாக்கி விட்டன. குடியேறிய யூதர்கள் தொடர்ந்தும் இருப்பார்களா? ("ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்" என்ற நிலவரந்தான் !)

"இவ்வளவுகாலமும் போராடி எதுவுமே கிடையாது போய்விட்டது. இவ்வாறு கிடைப்பது போதும்." என்ற மன நிலையில் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைமை செயற்படுவதாகக் கருதிய சில இயக்கங்கள் உடன்படிக்கையை நிராகரிப்பதாக் கூறியுள்ளன. இவற்றுட் சில ஸிரியாவின் ஆதரவையுடையவை. ஸிரிய ஆட்சியாளர்களுக்கும் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யஸர் அரஃபாத்துக்குமிடையே நெடுங்காலமாகவே நல்லுறவு இருந்ததில்லை என்பதோடு, ஸிரியா தான் இழந்த கோலான் மலைமுகட்டுப் பிரதேசத்தை மீட்கும் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற முன்னமே இந்த உடன்படிக்கை ஏற்பட்டது என்பதும் முக்கியமான உண்மை.

ஸிரியா இஸ்ரேலுடனான பிரச்சனையைத் தீர்த்தால், அதன் ஆதரவுடைய இயக்கங்கள் என்ன சொல்லக் கூடுமோ தெரியாது. எனினும் அங்கு கணிசமான அதிருப்தி உள்ளதற்கு ஸிரியாவில் அரை இலட்சம் பலஸ்தீன அகதிகள் உள்ளமை ஒரு முக்கிய காரணம். ஹமாஸ் இயக்கமும் இந்த உடன்படிக் கையை மும்முரமாக எதிர்க்கிறது. எனினும் இவ் வேறுபாடு காரணமாக பலஸ்தீன விடுதலை ஸ்தானத்துடன் மோதுவதில்லை என்று உடன்பாடாகியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைமையைப் பொறுத்த வரை, அவர்கட்கு இது அவர்களது தலைமையைக் காப்பாற்றும் இறுதி வாய்ப்பு. இஸ்ரேலுக்கு இது மிகவும் மலிவான ஒரு சமாதானம். "சமாதானத்திற்காக நிலம்" என்ற பேரில் அவர்கள் தாம் கைப்பற்றிய பெரும்பகுதி நிலத்தை நிரந்தரமாகத் தம்வசமாக்கிக்கொள்ள வசதியான சமாதானத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். சில தீவிர ஸியோனிஸ்டுகள் போக, மற்றவர்கள் இதை விரும்புகின்றனர். மேற்குக் கரையிலுள்ள ஜெருஸலெமை யூதமயமாக்கும் முயற்சிகள் இன்னமும் தொடர்கின்னறன. ஜெருஸலெம் பற்றிய தெளிவான ஒரு முடிவு காணப்பட வில்லை.

அனைத்தினும் முக்கியமாக, இஸ்ரேலிய ஆக்கிரமிப்பால் நாடிழந்த இலட்சக்க ணக்கான பலஸ்தீன மக்கள் இஸ்ரேலுக்கு மீளும் உரிமை பற்றி இந்த உடன்படிக்கை எதுவுமே பேசவில்லை. இவர்களது பிரச்சனையை மையமாகக் கொண்டு தொடங்கிய போராட்டம் இவர்களைக் கைவிட்ட ஒரு தீர்வை ஏற்றுக் கொண்டுள்ளது என்ற கோபம் இந்த அகதிகள் மத்தியில் எழுந்துள் ளது. இவர்களது பிரச்சனை தீராதவரை, இந்த உடன்படிக்கை அரைக் கிணறு தாண்டிய கதைதான். இஸ்ரேலிய ஸியோனிஸம் தாராள மனத்துடன் என்றுமே நடந்து கொண்டதாக வரலாறில்லை. இந்த உடன்படிக்கையைக்கூட நேர்மையாக நடைமுறைப்படுத்துவார்களா என்பது பற்றிய சந்தேகமும் நியாயமாகவே எழுகிறது. எவ்வாறாயினும், இந்த உடன்படிக்கை, சிறு சலுகைகட்காகவும் தற்காலிக சமாதானத்திற்காகவும் ஒரு நியாயமாகவே எழுகிறது. எவ்வாறாயினும், இந்த உடன்படிக்கை, சிறு சலுகைகட்காகவும் தற்காலிக சமாதானத்திற்காகவும் ஒரு நியாயமான போராட்டம் கைவிடப்பட்ட கதையையே கூறுகிறது. இன்று உலகில் மேலைக்காற்று சற்று ஓங்கி வீசுகிறது. எப்போதைக்குமல்ல.

**கிடைக்கப்பெற்றோம்**

மாதப்பத்திரிகை தமிழ் ஏடு
Postfach - 37
3700 Spiez,
Switzerland.

**நான்காவது பரிமாணம்**
1565 Jane St
P.O. Box 34515
Toronto, Ontario
Canada M9N 1R0

## அடுத்த இதழில்..

அவுஸ்திரேலியாவில் தமிழர்
- லெ. முருகபூபதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கத்திகளுடன் நடனம்

அவர்களின் பெயர்கள் தான் எத்தனை அழகானவை?

ராம் பரோஸ், பியாரிலால்
ராம் துலாரி, பாத்திமா ஜஹேரா
கிருஷ்ண முராரி, பன்சிதார்
ஜோசப், மோசஸ் மற்றும் ஆப்ரஹாம்
ஹர்மின்தர் சிங், கியானி
வசீகரமாக நன்கு வடிவமைக்கப்பட்ட
தியாகத்தைப் போல எவ்வளவு இனிமையானவை.

பெயர்களின் அலைகளில்
நம் கலாச்சாரக் கங்கையின்
நீரோட்டத்தை உங்களால் பார்க்க முடியும்.
புன்னகையையும் நறு மணத்தையும்
பரப்பும் கிராமமும், நகரமும்.

புனிதப் பெயர்களனைத்தும்
கத்திகளாக, திரிசூலங்களாக, கடப்பாறைகளாக
மாறிய தெவ்வாறு என்று யாரறிவார்.

எல்லாக் கலாச்சாரமும் மரபுகளும் - இன்று
இரத்தப் படுக்கையில் கிடக்க
இரவும் பகலும் புலம்பல்களால் நிறைகின்றன.
ஆனால், நிர்வாண அரசியல் பாடுகிறது
கத்திகளுடன் நடனம்.

பிறகு வந்தனர் தலைவர்கள்,
நம்முன் இறங்கினர்
தீர்க்க தரிசிகளாக,
அவதாரங்களாக,
ஒருவரின் கையில் குரான்
மற்றொருவரின் கையில் கீதை
ஒருவர் படிக்கிறார் பைபிளை
தலைவர்கள் பேசும் போது
உபதேசங்கள் நீரோட்டமாய்ப் பாய
காயங்கள் கழுவப்படுகின்றன
ஆனால் ரத்தக்கறைகள் துடைக்கமுடியாமல்
வளரும் , வளரும்.

இப்போலிக் கண்ணீர்த் துளிகளில்
இரத்தக் கறைகளைக் கழுவ முடியாது.

உருதுமூலம்: அலி சர்தார் ஜாப்ரி
தமிழில்: அ. ஐ. கான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அலமாரியின் மூலையில்
அடுக்கி வையுங்கள்
கீதையையும், குரானையும், பைபிளையும்
உங்களுக்காக அவை வாசிக்கப்படாதபோது
உங்களால் எதுவும் செய்ய இயலாது.

நாம் நாமாக எழுவோம்!
நம் இதய எரிமலையிலிருந்து - பிறகு
நம் இரத்தக் கண்கள் எழும்
ஒரு சூரியனைப் போல
புதிய சமுதாயம் பிறக்கும்
அவர்கள் அறிவார்கள்
இப்பெயர்களை
எவ்வாறு மதிக்க வேண்டுமென்று.

## யுத்தம்

- பி. ரவிவர்மன் -
மட்டக்களப்பு.
21 - 08 - 1993.

அந்த மஞ்சள் அலரியும்
செவ்வரத்தையும், ஒற்றை வேலியும்
எனக்கு
இன்னும் ஞாபகம்
உனக்கெப்படியோ. . . ?

சுவிஸில்
குளிர் அதிகமென நினைக்கிறேன்

இங்கும் அப்படித்தான்
வெயில் அகோரம்
மனிதர்களையே சுட்டுப் பொசுக்கிக் கொள்கிற
கோரம் நிறைந்த வாழ்க்கை
இருக்கிற அகதி முகாம்களையும்
மூடிக்கொண்டிருக்கிறார்கள்

யுத்தம் மட்டும்
மண்முனை ஆற்றைப்போல்
சேறும் சகதியும் சுழியும் நிறைந்த
ஒரு பயங்கர ஆழத்தில். . .

ஒரு கோடித் துயரங்களுடன்
மனிதர்களைத் தின்று
குருதியைக் குடித்த
சமாந்தரச் சந்தோசங்களுடன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் தகனக்கிரியை

- என். ஆத்மா -
இலங்கையிலிருந்து

கொத்திச்
சிராய்களாகப் பிளக்கப் படுகிறதென் மனம்.
நாக்குக் குலையின் பிரதியீடாய்,
கோடரிகள் அமைந்திட்ட வாய்க் குழிகள்
இவருடையன.


வருவர்
நகர்ந்திடும்
கடுகு போன்றதொரு பொழுதில்
வார்த்தைகள் நாலைந்தைத் துப்பிடுவர், இவர்.
பின், செல்வர்.
அறுத்துப் போட்ட கோழியாய்க் கிடந்து
புரண்டு உழத்திடும் எனதுயிர்.

என் சந்துகளின் சதைகளை நாய்கள்
கவ்விச் சப்புகிற வலி.

எரிந்திடும் என்னிடம் அன்றைய
இரவு வெறுங் கைகள் வீசி வரும்.
மரங்களைப் பிடித்து அசைத்திடாமல் காற்றும்
சும்மா படுத்திருக்கும்.
வெள்ளி மூக்குத்திகள் எதுவும்
போட்டிடாமல் உயர இருக்கும் ஆகாயம்.
நீளும் இவ்விரவின் அலுப்பில் என்
கண்ணயரும் எப்போதோ!

ஈரச் சவசவப்பும்
உலர்ந்திட்ட கருவாட்டிதயம் இவரினது.
சப்பாத்துக் கள்ளி போலவும்.
பிய்த்தெறிந்தனரே, கார்த்திகைப்
பூச்சியின் சிறகெனை.

அகன்று
இவ்வடுச் சென்றிட, மீளவும்
பிளேடுகளினாலும் குண்டூசிகளினாலும்
செரிக்கட்டிய வார்த்தைகளோடு,
வந்திடுகிறார் யாரேனும், இடைவிடாதெனை
அரிந்திடவும் குத்திடவும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

17வது இலக்கியச் சந்திப்பு ஒக்ரோபர் கடைசித் தினங்களில் BREMEN (GERMANY ) இல் நடைபெற்றது.
வழமை போன்ற சந்திப்பு என்று என்னால் கொளளமுடியவில்லை. வழமையான சந்திப்பாளர்கள் பெரும்பான்மையோரையும் காணவில்லை.

என்ன நடந்தது ?

இலக்கியச் சந்திப்பு சோர்ந்து போகின்றதா?

"அறிவு சூனியங்களின் வயிற்றெரிச்சல், புலம்பல்களை எல்லாம் பற்றி அலட்டிக் கொள்ளாமல் ஐரோப்பிய இலக்கியச் சந்திப்பு நிதானமாய் அமைதியாய் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது "
" அ ஆ இ " இல் வந்த அபிப்பிராயம் மறுக்கிறது.

இருந்தாலும், இலக்கியச் சந்திப்புடன் ஆரம்பத்தில் இருந்தே ஈடுபாடு கொண்ட " சிந்தனை " இதழில் தொடரும் விவாதமும், 17 ஆம் இலக்கியச்சந்திப்பின் இரண்டாம் நாள் தொடர்ந்த விவாதமும், நம்பிக்கை தரக்கூடியனவாக இல்லை. புலம் பெயர் இலக்கியம் பற்றியும், ஐரோப்பிய இலக்கியச் சந்திப்புத்தொடர்பாகவும் கற்பனையிலும், கனவிலும் மிதந்து கொண்டிருக்கும் என் போன்றவர்களுக்கு வருத்தம் தரும் விடயம் இது.

விவாதங்களின் போது தெறித்தவை.....

"இலக்கியச் சந்திப்பு தலைமை இல்லாமல் இருந்தது என்னவோ உண்மை தான். ஆனால் தற்போது கண்ணிற்குப் புலப்படாத ஒரு மத்திய குழு இயங்கி வருகிறது " "இலக்கியச் சந்திப்புக்கு, உள்ளிருந்து வரும் ஆபத்தும், அதனுள் இருப்பவர்களின் பிழையான கூட்டு மனப்பான்மையும் மிகவும் ஆபத்தானது."

"பரிஸில் நடைபெற்ற சந்திப்பின் போது சிலர் நடாத்திய குழிபறிப்புக்கள்...."

"ஆரம்பத்தில் இருந்த குறிக்கோள்கள் அற்று Anything goes என்றாகி விட்டது. நான் சொல்வது தான் காவியம் என்னும் சிறு சிறு கைலாசபதிகள், சிவத்தம்பிகள் மற்றும் சில கோவில் திருவிழாக்காரர்கள். இப்படிப் பல்வேறு பிரச்சனைகள். ஆனால் நண்பா, இப்போ என்னவோ " சும்மா இருப்பவர்களின் காலந்தான்." அவர்களால் தான் கையில் கறைபடாமல் விமர்சிக்க முடியும். இலக்கியச் சந்திப்புக்குள் ஒரு புரட்சி தேவையென்பது உண்மையானது"

"நண்ப, நீ நம்பினால் நம்பு. நம்பிக்கைகள் நூலிடையில் தொங்கும் இந்நாட்களில் , உள்ளதைக் காப்பாற்றிக் கொள்வது முக்கியமானது."

அண்மைய சந்திப்புக்கள் ஒவ்வொன்றிலும் தவறாது கலந்து வருகிறேன். அடுத்த சந்திப்பாவது நல்லபடி நடக்கும் என்ற நம்பிக்கையோடு.....

- எஸ். சபாலிங்கம்.

**அடுத்த இதழில்... விஜயேந்திரனின் கவிதை "சந்தி"**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆடி ஓடும் மரம்

புளியமரத்தின் நடனம்
அற்புதமானது !
பயணத்தை நிறுத்திவிட்டு நின்று
ரசிக்கவேண்டியுள்ளது.
காய்கள் உதிர,
சில பறவைகள் கட்டிவைத்த கூடுகளும் தூளாக,
இடுப்பில் கைவைத்து
கண்ணை அசைத்து, அசைத்து, ஆடியது புளியமரம்;
அடி வேர்களையும் உயர்த்திப் பிடித்தபடி.

மிக நன்றாக, அழகாகவே
கிளைகளை மடித்தது.
இடையை ஆட்டியது.
அபிநயம் பிடித்து ஆடிக்கொண்டே ஓடிப்போய்
பக்கத்திலிருந்த சிறிய வேம்பை
முத்தமிட்டது.
தன் ஆட்டத்தோடு இணைய அழைத்தது

அது இளைய வேப்பை.
விரைவில், பாவாடை மாற்றி சேலைகட்ட இருக்கின்ற
பொன்குருத்து அழகி !
பாவாடை கிளப்பி;
சீறி வீசும் தெருக்காற்றில் தனது
உள்ளாடை தெரியாமல்;
கையில் பிடித்து, பிடித்து, விட்டபடி
நின்ற அது,
வெட்கத்தில் முண்டியது.

கீழே, நிழலுக்காய் நின்ற நான்கூட நிற்க,
தன் இடுப்பை நெளித்து வளைத்துக் குலுக்கிவிட்டு
மீண்டும் ஓடியது புளியமரம் !
புல்லும் புதர்களும் கையடித்துக் கூச்சலிட.

- சோலைக்கிளி -
15. 09. 1993

www.tamilarangam.net

# தேசப்பிரச்சனைக்கு தீர்வு ஆடி அமாவாசை நாளில்

- ஆனந் -
இலங்கையிலிருந்து...

அப்புவின் தோளில் அமர்ந்து
மாவிட்டபுரத் தீர்த்தத்துக்குப் போவோம்.
தீர்த்தமாட கந்தசுவாமியாருடன்
கீரிமலைக்கு நடப்போம்.
பாதையோரத்து முட்கிழுவை வேலிகளில்
வெற்றிலைக் கொடிகள் சிரிக்கும்
கீரிமலை கடற்கரையில் அப்பு
தத்தம் செய்வார்
எள்ளுத் தெளித்து ஐயர்
அங்கீகரிப்பார் அதனை
காத்தோட்டியங்காயும் காத்திருக்கும்
அம்மா மொழுகித் தோய்ந்து
வீட்டில் சமையல் செய்திருப்பாள்
இன்று கீரிமலைக்கு போக முடியவில்லை
தேசப்பிரச்சனைக்கு தீர்வு
ஆடிஅமாவாசை நாளில்.

தமிழாலயம்
THAMILLALAYAM
Tel:42 05 88 67
பதிப்பகம்
புத்தகசாலை
பல்பொருள் நிலையம்
70, Rue Louis Blanc
75910 PARIS

Tél : 42 05 88 67
Fax : 42 05 83 04

விற்பனையாகின்றன..
கவிஞர் காசியானந்தனின்
குட்டிக்கதைகள்
மு. வரதராஜன், அறிஞர் அண்ணா, பிரபஞ்சன்,
மற்றும் பிரபல
ஈழத்து இந்திய எழுத்தாளர்களின் நூல்கள்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாளையாய்ச் சுருங்கிய இன்று!

— பி. எல். ஜெய்பார்காரன் —

நாளையை தாங்கிக் கொண்டு இன்று நடக்கிறேன்
சுமை அதிகமாய்த் தானிருக்கிறது....
கொட்டிப் பறித்து உண்ணாத காகங்களைப் மாதிரி -
இன்று -
துப்பாக்கிகளைக் காணாத நாட்களது....
ஆனால் நாளையில் -
துப்பாக்கித் தோட்டங்கள், அணுகுண்டுக் கிடங்குகள்....!

*

அமெரிக்காவும், பிரிட்டனும் முதன்மை அடைந்து
ஐ.நா. வுக்கு "அமெரிக்கசபை" என நாமம் மாறி....
நாடுகளின் தலைமைகள் கொய்யப்பட்டு
அமெரிக்க தலைவரே உலகின் அதிபராகி....

*

ஜனநாயகம், சோசலிசம், கம்யூனிசம்
எல்லாப் பக்கங்களும் இழுத்து மூடப்பட்டு -
ஏகாதிபத்தியத்தின் கதவுகள் மட்டுமே திறந்து....
அசத்தியம், கொலை, மிரட்டல்,
சண்டித்தனம், சர்வாதிகாரம் தேசத்தின் மேலாதிக்கங்களாகி...

*

தூயவர் கரத்தில் கட்டப்பட்ட
கடத்தியில் வெடிக்கும் கண்ணி வெடி மாதிரி....
அமெரிக்காவிலிருந்து கொண்டே உலகைப் பொசுக்கும்
'கம்பியூட்டர்' கண்டு பிடிக்கப்பட்டு....

*

சட்டம், நீதி, மனிதாபிமானத்திற்கு மரண தண்டனை வழங்கி
நாளைய பொழுதை நோக்கிப் பார்க்கிறேன் -
இன்றைய பொழுது பரவாயில்லை போலிருக்கிறது!

*

விடியப் போகிறது ஒரு அணுகுண்டுப் பொழுது
அதை சந்திப்பதற்காக -
நாளையனைப் போர்த்திக் கொண்டு
கொஞ்சம் கொஞ்சமாக நடந்து போகிறேன்...

www.tamilarangam.net



# புலம் பெயர்ந்தோர் இலக்கியம்

இன்று இங்கிலாந்து , கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து ஏறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகளும் பல கவிதைத் தொகுப்புகளும் வெளிவருகின்றன. சொந்த மண்ணில் மறுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரங்கள் இவ் இதழ்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. பல சிறந்த கட்டு ரைகள், கவிதைகள், சிறுகதைகள் வெளிவருகின்றன. தமிழ்நாட்டின் வணிக மயமாக்கப்பட்ட சஞ்சிகைகளைவிட மிக மிகத் தரமாக வெளிவருகின்றன. இவை இலட்சங்களுக்காக நடத்தப்படாமல் இலட்சியங்களுக்காக நடத்தப்படுவதால் இவற்றின் தரம் உயர்ந்து காணப்படுகிறது. ஆனால் சஞ்சிகைகள் மட்டும் புலம் பெயர்ந்தோர் இலக்கியமாகிவிடாது. மேலும் இவற்றில் வெளிவரும் சிறுகதை இலக்கியங்களை எடுத்துக் கொண்டால் பெரும்பாலானவை யாழ்ப்பாண மண்ணைப் பகைப்புலமாகக் கொண்டு எழுதப்படுகின்றன. தாம் புலம் பெயர்ந்து வாழும் நாட்டின் ஈழத்தமிழர் வாழ்க்கை முறைகளோடு பின்னப்பட்ட சிறுகதைகள் வெளிவருவது மிகக் குறைவு. இவ்வாறு அந்நிய நாடுகளில் ஈழத்தமிழர் வாழ்க்கை முறைகளோடும், புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் வாழ்வியற் கோலங்களோடும் பின்னப்பட்ட சிறுகதைகளே உண்மையில் புலம் பெயர்ந்தோர் இலக்கியமாகும். ஏனையவை ஈழத்தமிழ் இலக்கியம் என்ற வரிசையிலேயே அடங்கும். இவ்வாறான புலம்பெயர்ந் தோர் இலக்கியங்கள் மூலமே எதிர்கால சந்ததி புலம்பெயர்ந்தோர் வாழ்க்கை முறைகள் பற்றியும் அவர்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும்.

வீரகேசரி22. 8. 93

ஆ. சிவப்பிரியன்